# நதாஜி சுபாஷ்

Dr.TPM LIBRARY
853

UNIVERSITY EXTENSION LIBRARY
16 DEC 195
MADURAI

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS.

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

பதிப்பாளர்:
ஸ்ரீரியர் நூற்பதிப்புக் கழகம்
56, பவழக்காரத் தெரு :: சென்னை 1
பதிப்புரிமை] 1955 [விலை ரூ

முதற்பதிப்பு—அக்டோபர், 1952
இரண்டாம் பதிப்பு—மே, 1955

653

The Progressive Printers, Madras 1.

# முகவுரை

பாரதத் தாயின் மணி வயிற்றில் வந்த மாணிக்கங்கள் ஒன்ரு, இரண்டா? பலப்பலவாம். பண்டித ஜவாஹரை மனிதருள் மாணிக்கம் என்ருர் மகாத்துமா காந்தி. அக் காந்தி மகானும் தமது உள்ளம் சிலிர்க்கும வண்ணம் செயலாற்றினுர் சுபாஷ் பாபு. மனிதருள் மாணிக்கமான வாஹரும் உடல் சிலிர்க்கும் வண்ணம், உயரிய போர் தொடுத்தார் சுபாஷ் சந்திரர்.

'உச்சிமீது வானிடிந்து வீழ்ினும் அச்சமில்லை, அச்ச மில்லை!' என்ருர் பாரதியார். தேசத் தலைவர் அனைவரும் ஒரு முகமாக எதிர்த்த போதிலும், சிறிதும் அஞ்சாது நின்று, சீரிய வீரிய செயல்புரிந்து எல்லாரையும் திகைக்க வைத்தவர் சுபாஷ் பாபு.

வெளிநாடு சென்று, அங்கே தேசியச் சேனையொன்று திரட்டி, இந்தியாவின்மீது பாய்ந்து, ஆங்கிலேயரை அவர் அலற வைத்தது ஜாலவித்தை போல இருக்கும். முப்பது லட்சம் மக்கள் மனமுவந்து நேதாஜி (தனித் தலைவர்) என்று பட்டஞ்சூட்டினர். தனித் தலைவராகவே திகழ்ந்த தியாக சேகரரது சரிதம் தித்திக்கும்; ஓங்கு புகழ் ஊட்டும்; உயர் அறிவாற்றல் அளிக்கும்.

வருங்கால இந்தியாவின் தலைவராய் விளங்க நிற்கும் நம் இளைஞருக்கு அச்சரிதம் சாலச் சிறப்பளிக்கும்.

M. S. சுப்பிரமணிய ஐயர்

# பொருளடக்கம்


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| 1. | தோற்றுவாய் | 1 |
| 2. | குடிப்பிறப்பு | 3 |
| 3. | ஜானகி நாதர் | 6 |
| 4. | பிள்ளைப் பெருமதி | 8 |
| 5. | மனத் துறவு | 11 |
| 6. | தாயும் சேயும் | 13 |
| 7. | பெருங்கொந்தளிப்பு | 16 |
| 8. | மனப் புரட்சி | 20 |
| 9. | பின் வாங்கேன் ! | 24 |
| 10. | வஞ்சம் தீர்க்க | 27 |
| 11 | இரு வகைப் பாராட்டு | 31 |
| 12. | அரசின் அச்சம் | 34 |
| 13. | அரசின் பணிவு | 40 |
| 14. | இளைஞரின் துடிப்பு | 43 |
| 15. | வாலிபன் வேலை | 46 |
| 16. | சுபாஷும் காந்தியும் | 49 |
| 17. | அரசின் சின்னத்தனம் | 52 |
| 18 | ராஷ்டிரபதியாதல் | 55 |
| 19. | ஆருயிர் துறப்பேன் ! | 59 |
| 20. | மாய மறைவு | 62 |
| 21. | மறைவுக்குப் பின் | 65 |
| 22. | ஜெர்மனியில் சிறப்பு | 68 |
| 23. | முதல் தேசியச் சேனை | 72 |
| 24. | தலை காத்தல் | 74 |
| 25. | சேனையின் சிறப்பியல்பு | 79 |
| 26. | ஜான்ஸிராணிப் படை | 83 |
| 27. | சுதந்தர அரசு | 86 |
| 28. | முனை முகத்தில் | 89 |
| 29. | தியாக வீரக்கனல் | 93 |
| 30. | நமன் ஒழிக ! | 97 |
| 31. | வீர தளபதிகள் | 101 |

UNI... MADURAI ...RARY

# நேதாஜி சுபாஷ்

## 1. தோற்றுவாய்

**பா**லெல்லாம் பசுவின் பால் ஆகுமோ? ஆவின் பாலுக்கு ஓர் அலாதி மகிமை உண்டு. நம் தேசத் தலைவர்களில் தலைசிறந்தவர் நேதாஜி சுபாஷ் பாபு. அவரது முழுப் பெயர் நேதாஜி சுபாஷ் சந்திர வஸு. **வஸு** என்னும் பெயரே வங்க மொழியில் **போஸ்** என்று வழங்கி வருகின்றது.

"சுபாஷ் பாபு காங்கிரஸ் மகாசபையின் தலைவராய் இருந்தவர்; அடுத்தடுத்து இரண்டு முறை அச்சபையின் தலைவராய் அவர் விளங்கினர். அவரது வீர தீரத்தையும் தேசப்பற்றையும் நான் நன்கு அறிவேன். அவர் பெருந் தியாகி. அதுவே அவருக்கு ஒரு தனிப் பெருமை ஆகும். பிறவியிலேயே அவர் பெருந்தலைவர்," என்று **மகாத்துமா காந்தி** புகழ்ந்திருக்கிறார்.

"சுபாஷ் பாபுவை நினைக்கையில், அவரை இழந்து விட்டேனே என்னும் துக்கம் தோன்றி, என்னைச் சூழ்ந்துகொள்ளும். அவரது வீரச்செயல்களை நினைக்க நினைக்க, அவரிடம் நமக்குள்ள மதிப்புப் பொங்கிப் பெருகும். தேச மகா ஜனங்களின் உள்ளம் என்னும் கோயிலிலே அவர் குடி கொண்டிருக்கிறார். அவரது சேவையே சேவை!"

என்று நமது தேச முதல் மந்திரியாரான பண்டித நேரு கூறுகின்றார்.

"கைக்கு மெய்யான பலன் காணுவிடினும், தியாகம் என்பது வீண் போகாது. துன்பத்தில் உழன்று, தியாகத்தில் திளைத்தால்தான், நமது இலட்சியம் அல்லது குறிக்கோள் ஓங்கி வளரும்; பரந்தும் பெருகும். அன்றும் சரி, இன்றும் சரி, என்றும் சரி, தியாகமே அரிய பெரிய சாதனைகளுக்கு அடிப்படையாம்!

"இது மண்ணுலகம். இந்த உலகிலே எல்லாம் மடிந்துபோம். ஆனால், இலட்சியம் அல்லது குறிக்கோள் என்பது என்றும் மடியாது; மறையாது. ஒருவன் தனது குறிக்கோள் கருதி, உயிரை இழந்து விடலாம். ஆனால், அக்குறிக்கோளோ, பல்லாயிரவரின் மனத்தில் பரிணமிக்கும்; பரிமளிக்கும்! இஃதே இயற்கையின் விசேஷமாம். சோதனையும் தியாகமும் விளைக்காமல், எத்தகைய குறிக்கோளும் உலகத்திலே நிலைத்தோங்கியதில்லை!

"'ஒரு குறிக்கோளுக்காக வாழ்ந்தோம்; உயிரைக் கொடுத்தோம்,' என்னும் உணர்ச்சியினும், உயர்ந்த ஆறுதல் உண்டோ? 'கடமையை ஆற்றினோம்; கண் மூடினோம்' என்னும் திருத்தியினும் பரம திருத்தி ஒன்று உளதோ? தான் புகட்ட விரும்பிய செய்தி இத்தேசத்திலே காடுமேடு, மூலைமுடுக்கு, வீடுவாசல் எங்கும் பிரதிபலிக்கும் என்னும் பெரும்பயனைவிட ஆன்மாவுக்கு வேறு பயன் இருக்குமோ?

"எனவே, துன்பமும் தியாகமும் வீணுகிவிடும் என்று எவரும் கருத வேண்டா. துன்பமும்

தியாகமுங் காரணமாக நமது காசோ, பணமோ, உயிரோ, உடலோ போனலும் என்ன? அக்கரை இல்லை! அழியா அமர வாழ்வு வந்து எய்தும்! நமது குறிக்கோளும் கதிரவனது கிரணம் போல எங்கும் விரியும்! தேசம் உயிருடன் வாழவேண்டி இலட்சிய புருஷன் சாகத்தான் வேண்டும். வேறு வழியில்லை.

"ஆதலின், பாரத தேசம் பல்லாண்டு பல் லாண்டு வாழவும், சுதந்தரமும் கீர்த்தியும் எய்திச் சிறக்கவும், நான் இன்று இறந்தாக வேண்டும்."

இவ்விதமெல்லாம் உடல் சிலிர்த்து, உள்ளம் கரைந்து உரையாடி, உயரிய ஊழியமே புரிந்து, இனிய உயிரைத் துறந்தவர் சுபாஷ் சந்திர வஸு!

அவரது வாக்கில் அவ்வளவு வீரமும் வலியும், தொண்டும் தியாகமும் தவழ்கையில், அவரது வாழ்க்கை எத்துணை மேம்பாடு உடையதாகும் என்பதை அடுத்த அதிகாரங்களில் பார்ப்போம்.

# 2. குடிப்பிறப்பு

"பரம்பரை ஆண்டியோ, பஞ்சத்து ஆண்டியோ?" என்று ஒரு பழமொழி உண்டு. மூன்று தலை முறை, ஏழு தலைமுறை என்று இல்லாமல், இருபத் தேழு தலைமுறையாக நேதாஜி சுபாஷ் பாபுவின் குடும்பம் சீரும் சிறப்பும் வாய்ந்ததாம்.

அப்பெருங் குடும்பத்தின் இருபத்தேழாவது தலைமுறையில் திகழ்ந்தவர் தசரதர் எனப்படுவார். பெயருக்கேற்ற பெருமையுடன் விளங்கினர் அத் தசரதர். ஆல விழுதே போல உற்றாரையும் உறவினரையும், அம்மரமே போல ஊராரையும்

அயலாரையும் அவர் பாதுகாத்துப் பெருமையுடன் வாழ்ந்து வந்தார்.

அத்தசரதருக்குப் பின், பதினோராவது தலைமுறையின் தலைவர் **மகிபதி** என்பவர். அவரது அறிவும் திருவும், அன்பும் ஆற்றலும் அந்நாளில் வங்கத்தை ஆண்டு வந்த வேந்தன் காதில் வீழ்ந்தன. உடனே அவ்வரசன், அவரை அழைத்துத் தன் பொக்கிஷ மந்திரியாராக அமர்த்திக் கொண்டான்; அப்பால் யுத்த அமைச்சர் பதவியும் உவந்து அளித்தான்; ஒரு ஜாகீரும் தந்து மகிழ்ந்தான்; இன்னும் சிறப்புப் பலவும் செய்து, சிந்தை களித்தான்.

அரசன், இஸ்லாமிய மதத்தினன். அமைச்சரோ, ஆரிய வேத மார்க்கத்தைத் தழுவியவர். மதம் வேறுபட்டிருந்தாலும் என்ன? மனம் ஒருமைப்பட்டிருந்தது. அவ்விருவரின் காலத்தில் வங்க பூமி வளமெலாம் சுரந்தளித்தது. மாந்தர் அமைதியும் மகிழ்ச்சியும் மிகுந்து விளங்கி வந்தனர்.

மகிபதிக்குச் **சுபுத்திகான்** என்னும் பட்டமும் அவ்வரசன் உவந்து அளித்தான். அது அமைச்சருக்கு ஒரு காரணச் சிறப்புப் பெயராகவே விளங்கி வந்தது. அவர் பெயரால் அங்கே ஒரு நகரம் (மகிநகரம்) எழுந்தது; சுபுத்திபுரம் என்னும் கிராமமும் தோன்றிச் செழித்தது. அவர் புதல்வரும் வங்க அரசவையில் விழுமிய பதவி எய்தினர்; பெருவாழ்வும் படைத்தனர்.

பதினைந்தாம் நூற்றாண்டிலே **கோபிநாத வஸு** என்பார் வங்க இஸ்லாமிய வேந்தனை ஹுஸேன் ஷா என்பானிடம் தனமந்திரியாராய்த் துலங்கினர்;

கடற்படையின் அதிபரும் ஆனார்; புரந்தர்கான் என்னும் விருதும் அடைந்தார். சிறந்த ஜாகீரும் வந்து வாய்த்தது. அப்பரம்பரையின் தீபம்போல அவர் திகழலானார்.

கோபிநாதர் அங்கே கான்புகார் என்னும் பெரிய நீர்நிலையொன்று நிருமித்தார். அது ஒரு மைல் சதுர அளவு கொண்டது. மக்களுக்கும் மாக்களுக்கும் அந்நீர்நிலை பலவகையிலும் பேருதவி யாயிற்று. இன்னும் அந்நீர் நிலையின் அறி குறிகள் அங்கே காணப்படும். அதன் கரையின் அமைப்பு, கண்ணைக்கவரும்.

வஸுக்கள் என்போர் காயஸ்தா என்னும் குலத்தினர். அவர்களில் இரு பெரும்பிரிவுகள் உண்டு; உட்பிரிவுகளும் பலவாம். அப்பிரிவார் தம்க்குள்ளே மணவினை கொள்வதில்லை. அதனால், 'தீமை பல விளையும், குலச்செழிப்புக் குன்றும், ஒற்றுமை உருவாகாது,' என்று புரந்தர்கான் கருதினார்; குறுகிய பான்மையை விடுத்து, மன ஒருமையும், மணத்தொடர்புங் கொள்ளச் செய் தார்.

புரந்தர்கான், கல்வியே கருந்தனம் என்று கொண்டவர்; பல நூல்களையும் பயின்றவர்; கல்வி வல்லாரை ஆதரித்து வந்தவர்; கவி புனையும் ஆற்ற லும் படைத்தவர்; பத்திரசம் ததும்பும் எண்ணி றந்த பாடல்கள் அவர் பாடியுள்ளார்.

புரந்தர்கானுக்குப் பின் பற்பல பெரியார் அக்குலத்தை அலங்கரிக்கத் தவறவில்லை. அவர் அனைவரும் பெருமையே பூஷணமெனக் கருதி நடந்து வந்தனர். சுபாஷ் பாபுவின் தாய் வழியும்

தனிச்சிறப்புடையது. கலை, காவியம், ஓவியம், சமயம் இவற்றில் வல்லவரான பலர் அத்தாயின் வழியில் தோன்றித் திசையெங்கும் இசை பரப்பினர்.

சுபாஷ் பாபுவின் பாட்டனர் ஹரிநாதர் எனப் பெயர் பெறுவார். அவருக்கு மைந்தர் நால்வர். அந்நால்வருள் கடைப்பிள்ளை ஜானகி நாதர். அவர் ஒரிஸா அல்லது ஒட்டரம் எனும் நாட்டிலே கடகம் (கட்டாக்) என்னும் நகரில் தங்கி வசித்தார்; தனிச்சிறப்பும் எய்தினர். அவரே சுபாஷ் பாபுவின் தந்தையார்.

## 3. ஜானகி நாதர்

தசரதரது வழிமுறையில், ஜானகி நாதர் தோன்றியது பொருத்தமுடையதேயாம். ஜானகிநாதர் கலாசாலையில் படித்துப் பட்டம் பெற்றதும், சிறிது காலம் கல்கத்தா நகரிலே பேராசிரியராய் இருந்தார். அப்பால் 1885-ஆம் ஆண்டில், கடக நகர் குறுகி, அங்கே வக்கீலாய் வேலை பார்க்கலானர்.

அவரது சட்ட ஞானத்தையும் நடையின் நேர்மையையும் அரசாங்கம் கண்டு வியந்து, அவரைத் தனது வக்கீலாகக் கொண்டது. அவர் வங்க சட்ட சபையில் ஓர் அங்கத்தினராகி, அரிய ஊழியம் புரிந்தார். அரசாங்கம் அதுபற்றி அவருக்கு ராய் பகதூர் என்னும் பட்டமளித்துப் பாராட்டியது.

சின்னள் சென்றபின், ஜில்லாக் கலெக்டருக்கும் ஜானகி நாதருக்கும் கருத்து வேற்றுமை உதித்தது. கலெக்டரின் கர்வத்தைக் கண்டதும், அரசாங்க வக்கீல் என்னும் பதவியை அவர்

விட்டொழித்தார். பின்னர் ஊருக்கு நல்லது கருதி உழைப்பதில் அவர் சிறிதும் தளர்ந்ததில்லை. கல்வி வளர்ச்சியில் அவருக்குக் கருத்து அதிகம்.

ஆதலின், கல்விக் கழகம், கல்விச்சாலை, தர்க்க சபை, தீனர்களின் பாடசாலை, சாஸ்திர விசாரணை சபை முதலியவற்றிற்கு அவர் தட்டாது மிக்க பண உதவி செய்து வந்தார். அவரிடம் திரவிய சகாயம் பெற்று வந்த ஏழை மாணவருக்கு ஒரு கணக்கு ஏது? அபரிமிதமான வருவாய் இல்லாவிடினும், கல்விதானத்திலும் அன்னதானத்திலும் அவர் பின் வாங்கியது இல்லை.

அவர் பெரிய குடும்பி. அவருக்குப் புதல்வர் எண்மர். புதல்வியரோ அறுவர். தவிர, அண்ணன் மாரின் மக்களுள் பலரும் அவரது ஆதரவில் வளர்ந்து வந்தனர். மேலும், ஏழை எளியவரான சுற்றத்தாருக்கு அவரது வீடு ஓர் இனிய உறைவிடமும் தாயகமுமாயிற்று.

பெரிய குடும்பம் ஆதலின், பணியாளரும் ஏவலாளரும் தோட்டக்காரரும் ஏராளமாய் இருந்தனர். அவர்களுக்கெல்லாம் அவரது வீட்டிலேயே தினமும் சாப்பாடு நடக்கும்; துணிமணியும் தாராளமாகக் கிட்டும். அன்றியும், அவரது வீட்டில் கறவை மாடுகளும் ஏறுகுதிரைகளும் பல வர்ணக் கிளிகளும் மயிலினங்களும் வண்டி மாடுகளும் பல வகையான ஆடுகளும் நிரம்பியிருந்தன.

“காக்கை குருவி எங்கள் ஜாதி,” என்றார் கவி பாரதியார். அவ்வாறே அக்கால்நடைகளையும் வாயில்லாப் பிராணிகளையும் தமது குடும்பத்தாரெனவே அவர் கருதி வந்தார். உணவு அளிப்பதி

லும், உரிய நலம் தேடித் தருவதிலும், தமது குழந்தையென்றோ வேலையாள் என்றோ விலங்கு என்றோ அவர் ஒருபோதும் வேற்றுமை காட்டியதில்லை.

குடும்பம் பெரியது. அத்துடன் வக்கீல் தொழிலில் அவரது நேரத்தில் பெரும்பகுதி கழிந்தது. ஆதலின், குழந்தை குட்டிகளுடன் கொஞ்சிக் குலாவவோ, புத்திர புத்திரிகளை அருகே அமர்த்திக் கொண்டு அன்பான உரையாடவோ, அவருக்கு அவகாசம் இருக்கவில்லை. அதுபற்றிச் சுபாஷ் பாபு தமது இளமையில் மிகவும் வருந்தியதுண்டு.

ஜானகி நாதர் ஆண்டுதோறும் காங்கிரஸ் மகா சபைக்குப் போவது உண்டு. ஆதிமுதல் அவருக்குச் சுதேசியத்தில் பற்று மிகுதி. ஆதலினால், காங்கிரஸ் நிர்மான வேலைகளில் அவருக்கு ஊக்கம் உயர்ந்தது. ஒத்துழையா இயக்கம் உதித்ததும், தமது பட்டத்தை அவர் துறந்தார். சுதேசியத்தைப் பரப்பப் பலவாறான வழிகளையும் அவர் மேற்கொண்டார். தெய்வப்பற்று அவரிடம் ததும்பி நின்றது.

## 4. பிள்ளைப் பெருமதி

சுபாஷ் சந்திர வஸு 1897-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இப்பூமியில் தோன்றினார். சிசுப்பருவத்திலேயே அவரிடம் மிகுந்த துறு துறுப்புக் காணப்பட்டது. எதையும் அக்குழந்தை ஊடுருவி நோக்கும்; யாரையும் உற்று உற்றுப் பார்க்கும். தாதியரும் பணியாளரும் அது கண்டு அதிசயமே பூத்து நிற்பர்.

சுபாஷுக்கு வயது ஐந்தாயிற்று. மூத்த சோதரரும் சோதரிகளும் தினம் பாடசாலைக்குப் போவதை அச்சிறுவர் கூர்ந்து நோக்குவார்; தாமும் பள்ளிக்கூடம் போக வேண்டுமென்று துடிதுடிப்பார். பெற்றோர் அது அறிந்து அக் குமரரைப் பள்ளிக்கு வைத்தனர். சிறுவரும் பரபரப்பும் ஆர்வமும் மிகுந்து, கல்விச் சாலைக்குச் சென்றார்.

அங்கே ஆசிரியரின் போதத்தையும் பாடங்களையும் பிள்ளை சுபாஷ் பரிவுடன் உணர்ந்தறிய முற்பட்டது ஒரு புறமிருக்கட்டும். பிற பையன்களின் நடை நொடிகளையும், ஆசிரியரின் போக்கையும், பாடசாலையின் சுற்றுப் புறங்களையும், சூழ்நிலைகளையும் அக்குமரர் கருத்துடன் கவனித்து வந்தார். பிறரது பேச்சையும் செயலையும் ஆழ்ந்தறியத் தலைப்பட்டார்.

ஆரம்பப் படிப்பு ஆனதும் மேல் படிப்புக்குச் சுபாஷ் பாபு வேறு பாடசாலைக்குப் போக நேர்ந்தது. எந்தப் பாடத்திலும், பரீட்சையிலும் சுபாஷ் சோடை போனது இல்லை. வயது ஆக ஆக, அவ்வாலிபருக்கு அரிய பெரிய சிந்தனைகள் உதிக்கலாயின.

'நாம் ஏன் பிறந்தோம்? பிறந்ததன் பயன் யாது? பிறருக்கு உபகாரியாக வாழ்வது எங்ஙனம்? அரும்பெருங்காரியங்கள் செய்வதற்கு உபாயங்கள் யாவை? ஆண்டவர் என்பவர் யார்? ஆன்மா என்பது என்ன?' என்றெல்லாம் அவர் சிந்தனை செய்து வந்தார்; பலபல புத்தகங்களையும் படித்தார்; சிந்தனைகளுக்கேற்ற சமாதானம் காண ஊக்கம் மிகுந்தார்; உற்சாகமும் கொண்டார்.

அந்நிலையில், **சுவாமி விவேகானந்தரின்** சொற்பொழிவுகள் அடங்கிய நூலொன்று அவர் கைக்கெட்டியது. இதற்கிடையில், துறவியார் ஒருவர் வந்து சமயக் கருத்துக்களை விளக்கிப் பலரையும் கவர்ந்தார்; துண்டுப்பிரசுரங்களும் வழங்கிவந்தார். அதன்மேல், 'யோகம் செய்தால் சிந்தனைகள் தெளிவுபடும்; நிம்மதியும் பிறக்கும்,' என்று அவருக்கு உறுதி பிறந்தது.

அவ்வாறே, பிறர் காணு வண்ணம் தோட்டத்தின் மரத்தடியிலும், வீட்டின் அறையிலும், இரவு நேரத்திலே இருட்டு என்று பாராமல் அவர் யோகம் செய்து வந்தார். தாயாரும் பிறரும் அதனை உணர்ந்து, அச்சமும் ஆச்சரியமும் எய்தினர். வகுப்பிலே முதல் மாணவராய் விளங்கி எல்லாப் பரீட்சைகளிலும் முதன்மையாய்த் தேறி வந்தமையால், அவரது யோகப் பயிற்சியைக் கண்டு அவர்களுடைய கவலை குறைந்து வந்தது. மெற்றிக்குலேஷன் பரீட்சையில் அவர் திறம்படத் தேறினர்.

அதனல் கலாசாலைப் படிப்பின் நிமித்தம் அவர் கல்கத்தா நகருக்குப் போக நேர்ந்தது. அங்கே சமய நூல்களையும், உபநிஷதங்களையும் அவர் விரும்பிப் படித்தார். சமயஞானம் படைத்தோரிடம் நெடுநேரம் தங்கி, மெய்ப்பொருளையுணர ஆவல் கொண்டார். 'உலகப் பற்றைத் துறக்க வேண்டும்; உள்ளன்பு கொள்ளவேண்டும்,' என்று **பகவான் இராமகிருஷ்ணர்** அருளியிருந்த உரைகள் அவர் மனத்தில் வேரோடின. அவரது முகப்பொலிவையும், சொல் திறமையும் கண்டு பேராசிரியரும் பிறரும் வியப்பும் களிப்பும் மிகுந்தனர்.

# 5. மனத் துறவு

சுபாஷ் பாபு யோகம் செய்யத் தொடங்குகையில் வாலிபப்பருவம் வந்துவிட்டது. ஆயினும், இச்சை அவரிடம் தலை காட்டவில்லை; பகவான் இராமகிருஷ்ணரின் போதம் படியப்படிய, இச்சையை அவர் அறவே கைவிட்டார். துறவு மனப்பான்மையும் கடுகி வந்து அவரை மூடிக் கொண்டது.

பட்டினத்தார் தமது திரண்ட செல்வத்தை வீசி எறிந்து, "காதற்ற ஊசியும் வாராது காண்," என்றுகூறி, உள்ளத்துறவுடன் வெளியே வந்தார் என்று இலக்கிய நூல்கள் இசைக்கும். சித்தார்த்தர் என்பார் தமக்குரிய அரச செல்வத்தையும் இள மனைவியையும் அருமைக் குழந்தையையும் துறந்து நள்ளிரவிலே மாளிகையை விட்டு வந்தார் என்று சரித்திரங்கள் சாற்றும்.

அவ்விருவரையும்விட மிக்க இளமையிலேயே இந்த உலகப்பற்றைத் துறக்க நேதாஜி சுபாஷ் நினைவுகொண்டார். சுகபோகத்துக்கு உரிய தமது செல்வ மாளிகையை அவர் சிந்திக்கவில்லை. நாவுக்கு இனிய உணவுகளையும் அவர் கருதின ரில்லை. மனத்துறவுடன் கானகத்தை நோக்கி அவர் புறப்பட்டுவிட்டார். மரங்களும் செடிகளும் தழையென்னும் கரங்களை நீட்டி, அவரை அழைத்தன. 'கடவுளைக் காணவேண்டும்; அல்லது கடவுளைக் காட்டுவாரைக் காணவேண்டும்' என்றே அவர் துணிவு கொண்டார். இமயமலையின் பெருங் கானகத்தூடே அவர் புகுந்தார்; குருநாதன் கிடைக்க வேண்டும் என்றே துடிப்பு மிகுந்தார். அம்மலைச்சாரலிலே உள்ள குகைகளையும் புதர்

களையும் அவர் உற்சாகத்துடன் ஊடுருவி நோக்கினார்.

கானகத்தின் நேர்த்தியும், மரங்களின் அடர்த்தியும், செடி கொடிகளின் செழிப்பும், அவரது கருத்தை அள்ளின. இரவும் பகலுமாக இருண்ட கானகத்தே அவர் எங்கும் திரிந்தார். மடமடவென்று ஓடிவரும் மலையருவிகள் அவருக்கு அச்சம் ஊட்டவில்லை. கொடிய வனவிலங்குகளும் அவரைக் கண்டு ஒதுங்கிச் சென்றன!

குளிர்ந்து வீசும் வாடைக்காற்றை அவர் சட்டை செய்யவில்லை. பாறை பாறையாக உருண்டு வரும் பனிக்கட்டிகளைக் கண்டும் அவர் சலிக்கவில்லை. மலைப்பாம்புகளையும் பயங்கரமான பிற உயிர்களையும் பார்த்து அவர் பேதுறவில்லை. அச்சம் என்பது என்ன என்றே அவருக்குப் புலப்படவில்லை. ஞானிக்கு அச்சம் ஏது?

அவ்விதம் அவர் ஆறு மாதகாலம் காடு மலை வனங்களில் சுற்றித்திரிந்தார். கருத்துக்கிசைந்த ஆசான் கிடைக்க வேண்டும் என்பதே அவரது குறிக்கோளாம். குகை தோறும் குருநாதனை அவர் தேடியதுடன் பிருந்தாவனத்திலிருந்து காசிவரையில் உள்ள புண்ணிய தலங்களையும் பலவாறான ஆலயங்களையும் அவர் அடைந்து பார்த்தார்.

ஆங்காங்குள்ள சாதுக்கள், சன்னியாசிகள், சாமியார்கள் முதலிய பலருடன் அவர் நெருங்கிப் பழகினார்; அவர்கள் போதங்களைச் செவிமடுத்தார். அவர்களிடம் உயரிய தூய்மையும் வாய்மையும் தென்படவில்லை. அது கண்டு, அவரது ஆன்மா சாந்தியடையவில்லை. ஆயினும், ஆசானை அடையும் ஆசை அவரை விட்டு அகலவில்லை.

இஃது இப்படியிருக்க அவரைக் காணவில்லையே என்று அவரது பெரிய குடும்பத்தாரனைவரும் கவலைக்கு ஆளாயினர். தாயாரும் தந்தையாரும் சோதிடரைத் தருவித்து, மைந்தரைக் குறித்து உசாவினர்; பல திக்குகளிலும் ஆட்களை விடுத்துத் தேடினர்; ஆங்காங்குள்ள அன்பர்களுக்கு எழுதி எங்கும் ஆராயச்சொல்லினர்.

" குருமுகம் கேளாத வித்தை பாழ்," என்பார்கள். ஆன்ம ஞானமும் அரிய ஆசானே புகட்ட முடியும் என்பார்கள். ஆனது பற்றியே, சுபாஷ் பாபு எவ்விடமும் அலைந்து திரிந்தார். "பருவத்தால் அன்றிப் பழா," என்பது போல, ஆசானை அடையும் பக்குவம் வாய்க்கவில்லையென்று எண்ணி அவர் நைந்தார். என்ன செய்வது என்பது அவருக்குத் தோன்றவில்லை. திகைப்பே மிகுந்தது.

பசி தாகமோ உறக்கமோ அவருக்கு ஊறு எதுவும் செய்யவில்லை. ஞானப்பசி கொண்டவன் வேறு பசிகளை ஒரு பொருட்படுத்துவானோ? காலமும் வேளையும் தவறாமல். கருதிய இனிய உணவு புசித்து வந்த அவ்விளைஞர் தமக்குப் பசி முற்றிய போது, காயும் கிழங்குமே அருந்தினார். அவை கிட்டாவிடின் ஒரு கையளவு நீரைப்பருகி ஆறுதலடைந்தார்.

## 6. தாயும் சேயும்

'இளையான் அடக்கம் அடக்கம்,' என்பர் பெரியார். காசின்மீது ஆசையும் காமசிந்தையும் நம் சுபாஷ் பாபுவிடம் இளமையிலேயே தலைகாட்டவில்லை. 'உலகம் உய்ய வழி தேட வேண்டும்; ஆன்ம உயர்வு அடைதல் வேண்டும்; ஆண்டவனைக்

காணுதல் வேண்டும்,' என்னும் ஆசையே அவரை ஆட்கொண்டது. அது பற்றி அவர் கொண்ட முயற்சி கூற ஒண்ணாது.

புத்த பகவானும் பட்டினத்துப் பிள்ளையும் சுபாஷ் பாபுவைப்போல இளமையிலேயே மனத்துறவு கொண்டனரில்லை. சுபாஷ் ஞானப் பித்துக்கு ஆளாகி, வனத்திலும் பனி மலையிலும் திரிந்தார் இளம்பருவத்திலே! காந்தி மகானும் ஜவாஹர்லால் நேருவும் அத்தகைய தமது இளம்பருவத்திலே யாது செய்திருந்தனர்?

காந்தி மகானோ, இல்வாழ்க்கையில் இன்பம் துய்த்து நின்றார். பண்டித நேருவோ, இங்கிலாந்திலே கிரிக்கெட்டு விளையாடிக் கொண்டிருந்தார். தவமும் தவமுடையார்க்கு ஆகும் என்னும் வசனம் சுபாஷிடம் புலப்படா நின்றது. அன்று உதித்த மனத்துறவு ஆயுள் அளவும் நிலைபெற்று நின்றதை இங்கே குறிப்பிடல் பொருந்தும்.

ஞான குரவர் கிட்டாமற் போகவே, 'மனத் துறவைக் கைவிடாமல் உலகிலே நடமாடுவோம்; உற்றாருடன் வாழ்ந்து வருவோம்,' என்று சுபாஷ் பாபு திடம் கொண்டார். "எங்குத் தேடியும் மைந்தன் அகப்படவில்லையே! இனிக் காணக் கிடைப்பானோ? கடவுளே அறிவார்!" என்று அவர் தாய் தந்தையாரும், உறவினரும் நண்பரும் மன மொடிந்து கிடந்தனர். அந்நிலையிலே அவர் கடக நகரிலுள்ள தமது இல்லம் சேர்ந்தார்.

"அப்பா, மகனே, சுபாஷ், என்னை உயிருடன் வதைக்கவா நீ பிறந்தாய்?" என்று அன்னையான பிரபாவதி தேவி கண்ணீர் விட்டுக் கதறினள். பெற்ற வயிறு சும்மா இருக்குமோ? மார்மீது

அணைத்துப் பாலூட்டிப் பாராட்டிய உடலமும் பதைக்கும் அன்றோ? பிள்ளையின் அருமையைப் பெற்றவள் ஒருத்தியே அறிய முடியும்! அன்னையின் மனநிலை கண்ட சுபாஷ், உடனே பூமியில் வீழ்ந்து, தாயின் பாதம் தொட்டு, "அம்மா, என்னை மன்னித்தல் வேண்டும்!" என தழுதழுத்துக் கூறினார்.

உடனே அத்தேவி தன் மகனுரை வாரி யெடுத்து, மார்போடணைத்து, உச்சி மோந்து, உள்ளம் குளிர்ந்து, ஆனந்தக் கண்ணீர் பெருக்கினாள். ஜானகி நாதரும் புதல்வரைக் கண்டு பெருங்களிப்புக் கொண்டு பரவசம் அடைந்தார். ஏனையோரும் புதையல் கிடைக்கப்பெற்ற ஏழையே போல மகிழ் பூத்தனர்; நண்பரும் பணியாளரும் அப்படியே.

ஆறு மாத காலம் அன்னபானமும் நித்திரையும் இல்லாமையால், சுபாஷின் உடம்பு வாடி வதங்கிப் போயிற்று. பெற்றோரைக் காணும் வரையில் அத்தகைய உடல்நிலையை அவர் நண்குணரவில்லை. வீடு சேர்ந்ததும், களைப்பும் அலுப்பும் பலவீனமும் நோயும் அவரை வந்தடைந்தன.

உடனே அவர் படுத்த படுக்கையாகிவிட்டார். நெடுநாள் படுக்கையை விட்டு அவர் அகல முடியவில்லை. விளையாட்டுத்தனமாக வீட்டை விட்டு அவர் சென்றாரில்லை; விழுமிய நோக்குடனேயே சென்றார். உடம்பில் இருக்கும் உத்தமனே அவரைத் தூண்டிவிட்டான்.

உடல் நலம் கை கூடியதும், 1915-ஆம் ஆண்டிலே அவர் தம் தோழர் ஒருவருக்கு எழுதியது இது: "குறிப்பான காரியம் ஒன்றைச் சாதிக்கவே பிறந்தேன்; அது பற்றியே இந்த உடம்புடன்

உலவுகின்றேன்; பிறர் மெச்ச வாழ வேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை. இத்தகைய உணர்ச்சியே நாளுக்கு நாள் என்னிடம் முதிர்ந்து வந்தது.

“எனது மனத்துறவையும் மகா யாத்திரையையும் மக்கள் புகழலாம் அல்லது இகழலாம். இதுவே உலக இயற்கை. அப்புகழையோ, இகழ்வையோ கண்டு நான் சலிக்கப் போவதில்லை. பிறவி எடுத்த பயனை அடைந்து தீரவே முனைந்து முயலுவேன். இத்துறையிலேயே எனது உடலிலுள்ள உயிர் மூழ்கிக் கிடக்கும். எதற்கும் எனது மனமே சாட்சி!”

தமக்கு ஞானப்பித்து மிகுதி என்பதைப் பிறருக்கு அவர் புலப்படுத்தவில்லை; தாமும் ஞான படாடோபம் கொள்ளவில்லை; ஆண்டவனை உணர்ந்து ஆன்ம பரிபக்குவம் அடைந்து, உடல் கொண்ட பயனை ஒருநாள் அடைந்தே தீரவேண்டும் என்பதில் அவர் சதா நாட்டம் கொண்டிருந்தார். சமய உண்மைகளையும், வாழ்க்கையின் தத்துவத்தையும் அறிவதிலேயே அவர் மனம் குவிந்து கிடக்கலாயிற்று. ‘கொக்குக்கு ஒன்றே மதி,’ என்பது ஒரு முதுரையாம்.

## 7. பெருங் கொந்தளிப்பு

உடல் நலம் கைகூடியதும், கல்கத்தாவிலுள்ள அரசாங்கக் கல்லூரியில் சேர்ந்து படித்துவரச் சுபாஷ் பாபு தலைப்பட்டார். நாட்டமும் நினைவும் நெஞ்சமும் சிந்தனையும் மெய்ப்பொருளில் ஊன்றிக் கிடந்தும், கலாசாலைப் படிப்பை அவர் அசட்டை செய்யவில்லை.

அவர் வெகு சுலபமாக எப். ஏ. பரீட்சையில் முதல்வராய்த் தேறினர். அவரது முகத்தோற்ற மும் இன்சொல்லும் மாணவரின் நெஞ்சத்தை அள்ளின. ஆதலின், அவரையே அம்மாணவ ரனைவரும் தமக்குத் தலைவராகக் கொண்டனர். அன்னருக்கு ஆசிரியரிடம் உள்ள மதிப்பைவிட, நம் சுபாஷிடம் மதிப்பு அதிகமாம்.

அக்கலாசாலையிலே ஓடன் என்னும் பேரா சிரியர் ஒருவர் இருந்தார். அவர் ஓர் ஐரோப்பியர். அரசாளும் இனத்தைச் சேர்ந்தவரென அவருக்கு மமதை உண்டு. இந்திய மாணவரைக் கண்டால் அவர் வெகு அலட்சியமாய் இருப்பார்; உதாசீன மும் செய்வார்.

ஒரு நாள் அவர் ஒரு மாணவனைக் கடுப்பு மிகுந்து கன்னத்தில் அறைந்தார். பிற மாணவர் அதை அறிந்து, மனம் புழுங்கினர்; சுபாஷை அடைந்து உத்தரவு நாடினர். ஒரு பாவமும் அறியாத மாணவனை அடிப்பதா என்று சுபா ஷுக்குச் சினம் பொங்கியது. ஐரோப்பியரின் அகந்தையை இதற்கு முன் பலதடவைகளில் அவர் நன்கு அறிந்தவர்; புத்தி புகட்டவும் முயன்றவர்.

சுருங்கச் சொன்னல் மாணவரனைவரும் கலாசாலைக்குப் போகாமல் நின்றுவிட்டனர். கலாசாலைத் தலைவரும் பிறரும் அப்பேராசிரியரின் பதட்டத்தை அறிந்து வருந்தினர். முடிவில் ஓடன் மன்னிப்பு வேண்டினர். அதன் மேல் மாணவர் மனமுவந்து கலாசாலைக்குத் திரும்பினர். எல்லா ருக்கும் நிம்மதி பிறந்தது.

நாட்கள் சில சென்றன. ஓடனது அகந்தை மீண்டும் தலை தூக்கியது. ஒரு நாள் இந்திய மாண

வரில் சிலரை அவர் வேண்டுமென்று தாக்கினர். கோபம் பொங்கிய அம்மாணவரோ அவரை நையப் புடைத்தனர். கலாசாலைத் தலைவர் அது கேட்டு, ஆர்த்தெழுந்தார். அதிகார அட்டகாசமெல்லாம் செய்தார்; ஆணை பல விடுத்தார்.

மாணவர் அது கண்டு, ஆத்திரம் கொண்டு, கலாசாலைக்குச் செல்ல மறுத்தனர். நகரிலுள்ள இதர கலாசாலை மாணவரும் அக்கல்லூரி மாணவ ரைப் பின்பற்றினர். அதனால், கல்கத்தா நகரமே கொந்தளிப்புக் கொண்டது. ஐரோப்பிய சமூகத் தினரை அச்சம் பிடித்தாட்டியது.

இவ்வளவுக்கும் சுபாஷ் பாபுவே காரண மென்று சர்வ கலாசாலை அதிகாரிகள் கருதி, இரண்டு வருடகாலம் எந்தக் கலாசாலையிலும் அவர் வாசிக்கக் கூடாதென ஆணையிட்டனர். அதனால் அவர் படிப்பு இரண்டு வருஷம் தடைப்பட்டது. ஆனாலும், அவரது உதவியில்லாமல் மாணவரின் கொந்தளிப்பை அடக்க அதிகாரிகளால் ஆக வில்லை.

அப்பால் அவர் ஒரு கலாசாலையில் சேர்ந்து படித்தார்; பெருமிதமாக, பி. ஏ. பட்டம் பெற்றார்; அதில் முதன்மையும் எய்தினர். அப்போது கலா சாலை மாணவருக்கு யுத்தப்பயிற்சி செய்விக்க அரசாங்கம் விரும்பியது. அப்பயிற்சியில் மனமு வந்து அவர் கலந்துகொண்டு, இராணுவ அதிகாரி களின் நன் மதிப்புக்குப் பாத்திரரானர். பின் னாளிலே இந்திய தேசீயச் சேனையின் தளபதி ஆவதற்கு அப்பயிற்சியே அவருக்கு அடிப்படை போலும்! படையின் நுணுக்கமெல்லாம் அவருக்கு எளிதில் புலனாயின.

இதற்கிடையில் தேசத்திலே அமளிகுமளி உண்டாயிற்று. ரௌலட்டுச் சட்டத்தை எதிர்த்து, மகாத்துமா காந்தி சத்தியாக்கிரக இயக்கம் தொடங்கினர். அங்கிலேயில் பஞ்சாபு மாகாணத்திலே அமிர்தசரஸ் நகரில் இராணுவ அதிகாரிகள் நம்மவரைப் படுகொலை புரிந்தனர். அது கேட்டு, நமது தேசம் வீரிட்டெழுந்தது. தங்களது புண்ணியத் தலங்களுக்கு ஆபத்து நேர்ந்ததைக் கேட்டு மூகம்மதிய சமூகத்தார் கொதிப்பு மிகுந்தனர். ஆங்கிலேயருக்கும் இந்தியருக்கும் இடையே மனக்கசப்பு மூற்றியது. ஆங்கில அதிகாரவர்க்கத்தார் அது அறிந்து ஆத்திரத்துக்கு ஆளாயினர்.

அதன் விளைவாக, இந்தியரில் பலரைப் பிடித்துச் சிறையில் இட்டனர். அதிகாரவர்க்கத்தார், பலருக்கு நீண்டகால தண்டனை கொடுத்தனர்; கண் மூடித்தனமாக ஜனங்களைச் சுட்டுத் தள்ளினர்; நடுத்தெருவிலே பெருமக்களை நிறுத்திக் கசையடி. கொடுத்தனர். இவ்விதம் அதிகார ஆணவம் தாண்டவமாடியது.

சுபாஷ் சந்திர போஸ் அவற்றையெல்லாம் உற்று நோக்கினர். அவரது இரத்தம் கொதிக்கத் தொடங்கிற்று. வாய் மூடி மௌனியாய் இருக்க, அவர் விரும்பவில்லை. அதிகார ஆணவத்தைக் குலைத்து, தமது தேசீய மானத்தைக் காக்க வேண்டுமென்று அவரிடம் பரபரப்பு விஞ்சியது.

இதனை அவர் தாய் தந்தையர் அறியலாயினர். தேசீய இயக்கத்தில் புகுந்துவிட்டால், தலைகால் தெரியாமல் அவர் மூழ்கிவிடுவார் என்றே பெற்றோர் அஞ்சினர். அரிய புதல்வரை ஒரு முறை இழந்து நின்ற பெற்றோர் மீண்டும் இழக்க மனம் ஒப்புவரோ ?

# 8. மனப் புரட்சி

தம் மைந்தர் சுபாஷ் சீமை சென்று, அங்கே ஐ. ஸி. எஸ். பரீட்சை கொடுத்து, இங்கே ஜில்லாக் கலெக்டராக உத்தியோகம் பார்த்து ஈடும் எடுப்புமின்றி வாழ்ந்து வரவேண்டும் என்பதே தந்தையார் ஜானகி நாதரின் பேராவலாம். ஆதலின், "நீ சீமை சென்று ஐ. ஸி. எஸ். பரீட்சையில் தேறி வரவேண்டும்," என்று சுபாஷை நோக்கி ஜானகி நாதர் கூறினர் ஒரு நாள்.

கொதிப்புண்டு கிடக்கும் தேசத்தை விட்டுச் செல்ல நேதாஜி சுபாஷுக்கு மனமில்லை; தந்தையார் சொல்லைத் தட்டி நடக்கவும் துணிவு இல்லை. 'சீமை சென்று அப்பரீட்சையில் தேறினல், ஆங்கிலேயரின் கையாளாக இங்கே வேலை பார்க்க வேண்டும். அன்னரின் ஆட்சியை ஒழித்துப் போட வேண்டுமென அனைவரும் பாடு படுகையில், அந்த ஆட்சியின் கையாளாக வேலை பார்த்தல் எங்ஙனம்? அன்றியும் நெடுநாளாகப் பூண்டுள்ள விரதம் என்னுவது? உயர்ந்த குறிக்கோளைக் காற்றில் பறக்க விடுவதா? பறக்க விடின், பிறந்த பயன்பெறுதல் எங்ஙனம்? இருபத்துநான்கு மணி நேரத்துக்குள் தந்தையாருக்குப் பதில் தர வேண்டுமே! என்று அவருடைய மனம் பலவாறு அலைபாய்ந்தது.

ஒரு ஜாம நேரம் அவர் தனியே இருந்து சிந்தனை செய்தார். அத்தறுவாயில், ஹேமந்தகுமார் என்னும் நண்பர் அங்கே வந்தார்; "சீமைக்குச் சென்று வா," என்றும் சொன்னர். சுபாஷும் நல்லது என்று தலையை அசைத்தார். முடிவிலே

தந்தையாரிடம் சென்று, வேண்டா வெறுப்பாக இங்கிலாந்து சென்று வர ஒப்பம் கொடுத்தார் சுபாஷ். பெற்றோர் அது கேட்டு மிக்க ஆறுதல் அடைந்தனர்.

சுருங்கச் சொன்னால், சுபாஷ் சீமை சென்றார் 1919-ஆம் ஆண்டின் பிற்பகுதியில்; அங்கே ஆங்கிலேயர் சர்வ சுதந்திர புருஷர்களாய் வாழ்ந்து வருதல் கண்டு களித்தார்; அவர்களுக்கஞ்சி, இங்கே இந்தியர் அடிமைகளாகக் கிடத்தல் கண்டு மனம் புண்ணானார். 'சொந்த நாட்டிலிருந்து விடுதலைக்குப் பாடுபடாமல், சீமை வந்து சேர்ந்தேனே!' என்றும் துக்கித்தார்.

அங்கே அவரது கால் ஜோடுகளை ஆங்கிலப் பணியாளர் வந்து சுத்தம் செய்து தருதல் வழக்கம். அது போழ்து, "இவ்விதம் வெள்ளையர் வந்து எனக்குப் பணி புரிகின்றனர். இது கண்டு மிக்க சந்தோஷம் அடைகின்றேன்," என்று அவர் கூற நேர்ந்தது. 'ஆங்கிலேயருக்குச் சரிநிகர் சமானமாக வாழாவிடின், இந்தியரின் வாழ்வு வாழ்வாமோ?" என்று அவர் அடிக்கடி கூறுவார்.

பரீட்சையில் தேறுவதற்குப் பற்பல பாடங்கள் படித்தாக வேண்டும். அவர் காலம் கடந்து இங்கிலாந்து சென்றதனால், படிப்பதற்குப் போதுமான அவகாசம் இல்லை. படித்துத் தேற வேண்டுமே என்ற ஆவலும் இல்லை. தந்தையாருக்குப் பத்தாயிரம் ரூபாய் செலவாகிறதே என்று கருதி, அரை குறையாகவும் அரை மனத்துடனும் பாடங்களைப் படித்து வந்தார் சுபாஷ்.

அப்போது சரோஜினி தேவியார் அங்குவந்து, அழகும் இனிமையும் ததும்பப் பேசினார். அது

கேட்டு, சுபாஷ் பாபு பரவசம் கொண்டார். சரோஜினி தேவியார், அரவிந்தகோஷ், பால கங்காதர திலகர் முதலிய பெருமக்களைப் படைத்த பாரத தேசம் பண்பு இழந்து கிடப்பதோ? பண்டைப் பெருமை எய்த வேண்டாவோ?' என்று பதை பதைத்தார்.

நாளடைவில் ஐ. ஸி. எஸ் பரீட்சை நாள் வந்தது. விதியின்றி அவர் அப்பரீட்சையில் புகுந்தார்; மனமின்றி எழுதிவிட்டு வெளியே வந்தார். பரீட்சையில் தேரு திருக்க வேண்டும் என்றே எண்ணி நின்ருர்; 'கொண்ட குறிக்கோளின்படி நடத்தல் எவ்வாறு?' என்றே சிந்தனை செய்து வந்தார்.

அங்கிலேயில், பரீட்சையிலே தேறிவிட்டதாக அவருக்குத் தகவல் கிடைத்தது. அதனை அவர் நம்பவில்லை; அது கேட்டு மகிழவும் இல்லை. மற்று, 'ஏன் தேறினேம்?' என்றே ஏக்கங் கொண்டார். பரீட்சையில் தேறியது பற்றி விரைவில் அவருக்கு வேலை கிடைத்துவிடும். இதுவும் அவருக்கு மிக்க துயரத்தை எழுப்பியது.

உடனே தமையனுரான சரத் சந்திர போஸுக்கு அவர் வரைந்த கடிதத்தின் ஒரு பகுதி: "அண்ணு, நமது தேசம் சுதந்திரம் எய்த வேண்டுமேயானல், அதற்குரிய விலை கொடுத்தாக வேண்டுமே! தியாகமே ஏற்ற விலையாகும்! தேசத்தைக் கைதூக்கி விடவேண்டுமேயானல், துன்பத்தில் ஆழ்ந்து தியாகத்தில் மூழ்கவேண்டும். எல்லோரும் சுயநலமே கருதி உத்தியோகத்தை நாடிக் கிடந்தால், ஐம்பது வருஷமானலும் நமக்குச் சுதந்திரம் கிட்டாதே!

ஒவ்வொரு குடும்பமும் தேசத்தாய்க்குத் தொண்டு புரிய ஓரோர் மகனைக் கொடுத்தாக வேண்டும்!

"ஆதலின், தியாகத்திலிருந்து நான் தப்ப முடியுமோ? கலெக்டர் வேலை எனக்கு எதற்கு? தியாகம் செய்வதாயின், வறுமையைத் தழுவ வேண்டும், துன்பத்தைக் கட்டியணைக்க வேண்டும்; இன்னல்களை இனிய முகத்துடன் வரவேற்க வேண்டும்; படாத பாடும் பட வேண்டும்! என்றாலும் தியாகம் செய்யவேண்டும் என்பதைத் தவிர எனக்கு வேறு மார்க்கம் தோன்றவில்லை. ஆதலின், நான் ஐ. ஸி. எஸ். உத்தியோகத்தை ராஜிநாமாச் செய்யப் போகின்றேன். அப்பாவுக்கும் எழுதியிருக்கிறேன், சமயம் வாய்த்தால், நீங்களும் அவருக்கு ஆறுதலும் தேறுதலும் அளித்தல் வேண்டும்."

1920-ஆம் ஆண்டின் தொடக்கத்திலே அவர் அப்பரீட்சையில் தேறினார். "என்ன துர்ப்பாக்கியம்! தேறிவிட்டேனே!" என்று ஓர் அன்பருக்கும் எழுதினார். பின்பு இந்தியா மந்திரியாராய் இருந்த மாண்டேகு என்பாரைக் கண்டு, ராஜிநாமா செய்தார். அவரும் பிற அதிகாரிகளும் வேண்டாவென்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தனர். அவர் எதற்கும் காது கொடுக்கவில்லை.

அந்நாளில் ஐ. ஸி. எஸ். உத்தியோகமென்றால் அது இந்திர பதவி போன்றதாகும். உயர்ந்த இலட்சியத்தைக் கடைப்பிடித்து நின்றவர் அப்பதவியைத் துரும்பாகவே மதித்தார். தமது ராஜிநாமாவைக் குறித்து அவர் எழுதியிருப்பது இதுவாகும்:

"எனது தேசம் ஒரு பக்கம், ஆங்கில அரசு ஒரு பக்கம், இரண்டினுக்கும் நான் தொண்டு

புரிவது எங்ஙனம்? எனது உயிரினும் வாழ்வினும் சிறந்தது என் தேசமே! ஆங்கில அரசு எம்மாத்திரம்? ஆதலின், 1921-ஆம் ஆண்டு ராஜிநாமா செய்தேன். எனது குறிக்கோளைக் கைவிட எண்ணம் இல்லை!"

## 9. பின் வாங்கேன்!

ஆண்டவனைக் கண்ணெதிரே காண்பதுதான் சுபாஷின் தீவிர சிந்தையாம். அவ்வாறு அவர் காண முடியவில்லை; காட்டுவாரும் கிட்டவில்லை. எனவே, ஆண்டவனுக்குப் பணியேனும் புரியலாமென அவர் தீர்மானித்தார். அனைத்துயிரும் ஆண்டவனது படைப்பு; எல்லா உயிர்களிலும் ஈசன் துலங்குகின்ருன் என்பதை அன்றே அவர் அறிந்தார். ஆனது பற்றியே மாணவர் மீது பாசம் வைத்துப் பணி புரியலானுர்.

ஐ. ஸி. எஸ். பரீட்சையில் அவர் தேறிய சமயம் இந்தியாவிலே சுதந்தரப்போர் தொடங்கி விட்டது. காந்தி மகான் முன்னின்று, அதனை நடத்தி வந்தார். ஆங்கில அரசு அசைவற்றுப் போகவேண்டுமேயானுல், அதற்கு யாரும் எவ்வித ஊழியமும் புரியக்கூடாது என்ருர் அம்மகான். அந்த அரசுக்கு ஆணிவேர் போன்ற ஐ. ஸி. எஸ், காரர் எவரும் தமது வேலையை விடவில்லை; தேசத்தையும் கவனிக்கவில்லை.

அதுகண்டு சுபாஷின் மனம் புண்ணுயிற்று. 'அந்த உத்தியோகத்தில் இருப்போர் தமது வேலையை விடாவிட்டாலும், கையில் கிடைக்கும் உத்தியோகத்தை நாமாவது விட்டெறிவோம்!'

என்றே சுபாஷ் தீர்மானித்தார். ராஜிநாமா செய்ததும், அவர் தம் தமையனார் சரத் சந்திரருக்கு ஒரு நிருபம் விடுத்தார். அதில் ஒரு பகுதி ஈதாகும்:

"ஓர் அரசை ஒழிக்கவேண்டுமாயின், அதனை விட்டு எட்ட விலகி நிற்பதே ஏற்ற உபாயமாம். ருஷிய ஞானியான டால்ஸ்டாயின் போதம் இது என்றோ, காந்தி மகான் இதனைக் கையாளுகிறார் என்றோ, நான் இவ்விதம் கூறவில்லை. ஆர அமர ஆராய்ந்து பார்த்ததில், இந்த உபாயத்தில் எனக்கு மெத்த நம்பிக்கை பிறந்துள்ளது.

"ராஜிநாமா செய்துவிட்டேன்! தியாகப் பாதையில் முன் காலை எடுத்து வைத்துவிட்டேன்! இனி நான் பின் வாங்கப் போவதில்லை. உள்ளன்புடன் உழைக்கும் உத்தமர் முன் வரவில்லை என்பதாக நமது சித்தரஞ்சன தாஸர் எனக்கு எழுதியிருக்கிறார். ஆதலின், நான் திரும்பி வந்ததும், என் மனத்துக்கு உகந்த தொண்டு நிரம்ப இருக்கிறது; முன் வைத்தகாலைப் பின் வாங்கப் போவதில்லை! உறுதி இது!"

தமையனாருக்கு அவ்விதம் எழுதிய பின்னர், அவர் தமது சொந்த தேசத்துக்குத் திரும்பினார்; 1921-ஆம் ஆண்டு நேரே பம்பாய் வந்து சேர்ந்தார்; அப்போது காந்தி மகான் சுதந்தரப் போர் முரசு கொட்டியிருப்பதனால், அவரைக்கண்டு பேச விரும்பினார். காந்தி மகானும் அதற்கு இசைந்தார். பம்பாய் வந்து சேர்ந்ததும், காந்தி மகானைக் கண்டு பேசுவதுதான் முதல் வேலையெனக் கொண்டார் சுபாஷ்.

மணி பவனம் என்னும் மாளிகையில் இருவரும் சந்தித்தனர். "போர் முரசு முழக்கியிருக்கிறீர்களே! அதன் வகை துறைகளையும் உபாயங்களையும் ஆதியோடு அந்தமாக எனக்கு விளங்க உரைக்க வேண்டும். போரின் முழுத்திட்டமும் எனக்குத் தெரியவேண்டும்," என்று சுபாஷ் வினவினர். அவரது உள்ளத்துடிப்பை மகாத்துமா உணர்திருக்க வேண்டும்.

ஆயினும் என்ன? 'திட்டம் என்ன இருக்கிறது? நான் சொல்லியபடி செய்' என்று அம் மகான் மொழிந்தார். 'முகத்திலே மீசை அரும்பாத பாலன் பெரும்போரின் திட்டங்களை உணர முடியுமோ? இவனிடம் சொல்லி என்ன பயன்?' என்று அம்மகான் கருதினரோ அல்லது அச்சமயம், உருவான திட்டமெதுவும் அம்மகான் வகுக்கவில்லையோ, யாது காரணமோ அறியோம். மகாத்துமாவைக் கண்டு பேசியதில் அவருக்குச் சிறிதும் திருத்தி பிறக்கவில்லை. ஏக்கமும் சலிப்புமே எழுந்தன.

"நான் சொன்னபடி நடவுங்கள். ஓராண்டில் சுயராஜ்யம் கிட்டிவிடும்," என்றே அப்பெரியார் அப்போது கூறிவந்தார்; தவிர, தேசம் எவ்வளவு தூரம் தயாராக இருக்கும் என்று அது போது அவருக்குத் திடநம்பிக்கை உதிக்கவில்லை. பெருமேதைகளான சித்தரஞ்சனரும் பண்டித மோதிலால் நேருவும் அத்தருவாயில் காந்தியின் போக்குக் கண்டு அவ்வளவாகத் திருத்தி கொள்ளவில்லை என்பதை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடவேண்டும்.

எனவே, பால மேதையான் சுபாஷ் சந்திர போஸ், அரும்பெருங்காரியத்தைச் சாதிக்க நிற்கு

சுபாஷ் சந்திர போஸ், மந்திரத்தால் மாங்காய் விழாது என்று கருதி நின்ற சுபாஷ் சந்திர போஸ், அப்பெரியாரின் போக்கில் அவ்வளவாகப் பற்றுக் கொள்ளாமல், அதிருத்தியுடன் திரும்பியது ஓர் ஆச்சரியமோ?

தந்தையாருக்குப் பத்தாயிரம் ரூபாய் செலவு வைத்து, சிரத்தையில்லாமல் படித்து, ஐ. ஸி. எஸ். பரீட்சையில் தெய்வச் செயலாகத் தேறி, அந்த உத்தியோகத்தை உதறி வந்த வாலிபருக்கு ஏற்ற பணி கிட்டவேண்டும்; அத்துடன் அவர் மூளைக்கும் மனத்துக்கும் உகந்த தலைவர் கிட்ட வேண்டும். ஆதலின், அவர் நேரே கல்கத்தாவுக்குச் சென்றார். பம்பாயில் ஓர் இரவு கூடத் தங்கவில்லை.

சித்தரஞ்சன தாஸரின் போக்கும் பிடிக்கா விட்டால், தாமே புதிய போர் முறையொன்று வகுத்து, அன்னை பாரதிக்கு அரும்பணி புரியவேண்டும் என்பதே சுபாஷின் சிந்தனையாகும். கல்கத்தா சேர்ந்ததும், பெற்றோருக்கு அவர் வணக்கம் செலுத்திவிட்டு, வங்க முடி சூடா மன்னராய் விளங்கிய தாஸின் மாளிகை குறுகினார்.

## 10. வஞ்சம் தீர்க்க

சித்தரஞ்சன தாஸர் பெருங் கல்விமான்; மிக்க மதியூகி; காலம் இடம் அறிந்து கருமம் செய்பவர். அவரது மதி நலத்தினுக்கு ஈடில்லை. ஆங்கில ராஜதந்திரிகளனைவரும் அவரிடமிருந்து ராஜதந்திரத்தை உணர்ந்துகொள்ள வேண்டும். அவர் தமது சொல்லாலும் செயலாலும் மகாத்துமா காந்தியையும் மயக்க வைத்தவர்.

அத்தகைய தலைவரைக் கண்டதும், சுபாஷ் சந்திர போஸ் தம் வயம் இழந்தார்; தாஸரிடம் தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் ஒப்படைத்தார். இட்ட பணியை இயற்றுவதாக அஞ்சனை மைந்தனைப்போல் அஞ்சலி செய்து நின்றார். அவரவரின் தகுதி, திறன் இரண்டையும் அறிந்து, ஏற்ற பணியை இயற்றச் சொல்லுவதில் தாஸருக்கு நிகர் தாஸர்தான்.

சுபாஷைத் தாஸர் வரவேற்று, இராம காரியத்தைச் செய்ய இராமதூதன் வாய்த்ததே போலத் தேச காரியத்தைக் கவனிக்கத் தேச தூதர்—பின்னாளின் தேசத் தலைவர் ஆகும் ஆற்றல் படைத்தவர்—கிட்டிவிட்டதைக் கண்டு தைரியம் மிகுந்தார்; உற்சாகமும் கொண்டார்.

காந்தி மகானது சுதந்தரப் போருக்கு மாறாக வேல்ஸ் இளவரசரை இங்கே வரவழைத்து, இந்திய மக்களை மயக்க முயன்றனர் ஆங்கில அதிகார வர்க்கத்தார். ஒரு சில இந்தியர் அம்மாய வலையில் பட்டாலும், பெரும்பாலான மக்களோ, சுதந்தரப் போரில் முனைந்து நின்றனர்.

காந்தி மகாத்துமா சொற்படி, வக்கீல்களில் பலர் தமது தொழிலை விட்டு, தேசப்பணியில் ஈடுபட்டனர். ஆங்கிலேயரின் ஆதரவிலுள்ள கலாசாலைகளைத் துறந்து, ஆயிரக்கணக்கான மாணவர் வெளியே வந்திருந்தனர். அம்மாணவர் அனைவருக்கும் படிப்பு ஊட்டவேண்டும் அல்லவா? அதற்காக மாகாணந்தோறும் தேசீய கலாசாலைகளுடன் பல்கலைக் கழகங்களும் ஏற்பட்டன.

வங்கத்திலே தேசீய கலாசாலையொன்றை சித்தரஞ்சன் தாஸர் நிறுவினார். அதற்குச் சுபாஷ்

ஏற்ற தலைவர் என்று கருதி, அவரையே தாஸர் நியமித்தார். முன்னம் மாணவரின் தலைவராய் விளங்கிய சுபாஷ் அதுபோது மாணவரின் பேராசிரியராய்ப் பிறங்கலானார். மாணவரும் சுபாஷ் பாபுவைக் கண் கண்ட தெய்வமென்றும், கலை பலவும் வல்ல ஆசானென்றும் கொண்டு கொண்டாடினர்.

வேல்ஸ் இளவரசரின் விஜயத்தைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. காத தூரத்துக்கு அப்பால் விலகி நிற்கவேண்டும் என்றே தேசம் முடிவு கட்டியிருந்தது. அப்போது, அதிகாரிகளோ, மாணவரின் பெற்றோர்களை அதட்டியும் உருட்டியும், ஆசை வார்த்தை காட்டியும், அவ்விஜயத்துக்குத் தம் பிள்ளைகளை அனுப்பும் வண்ணம் பகீரதப் பிரயத்தனம் செய்து வந்தனர்; அதற்கான சூழ்ச்சி பலவும் செய்து நின்றனர்.

'பணத்தினால் ஒருவன் பெருமை பெற முடியாது; குணத்தினால்தான் பெருமையெய்த இயலும்! சத்தியமும் கண்ணியமுமே சிறப்பளிக்கும்! அதிகாரிகளின் மிரட்டலும் வெருட்டலும் பசப்பும் பாசாங்கும் சிறப்பளியா? தேசத்தின் கௌரவத்தைக் காக்க வேண்டிய சமயத்தில், கஷ்டத்துக்கு அஞ்சி ஓடியொளிபவன் ஆண் மகன் ஆகான்; மனிதனும் ஆகான்!' என்னும் உரிய தத்துவங்களை மாணவருக்கு மட்டுமேயன்றிப் பிறருக்கும் பெற்றோருக்கும் சுபாஷ் ஊட்டி வந்தார்.

கல்கத்தாத் தேசீய சர்வ கலாசாலை வளர்மதி போல வளர்ந்து வந்தது; தேசாபிமானம் என்பது தழைத்துக் கிளைத்துத் துலங்கியது! ஊழியமும் தொண்டும் உருக்கொண்டு, உலகம் போற்றும்

வண்ணம் உயர்ந்து வந்தன. இவ்வளவுக்கும் சுபாஷ் பாபுவே காரணம் என்று வங்க அதிகாரிகள் பல்லைக் கடித்தனர்; கையைப் பிசைந்தும் நின்றனர்; சமயம் பார்த்துத் தாவிப் பாய்ந்து தவிடு பொடி பண்ண வேண்டுமென்றும் எண்ணிக்கிடந்தனர்.

'ஆங்கில அதிகார வர்க்க ஆணவம் ஒடுங்குவதா, தேசீய மானம் தலையெடுப்பதா?' என்றே கடும்போட்டியும் பரீட்சையும் ஏற்பட்டு விட்டன. அதிகாரிகளும் அவர்களின் குடும்பத்தாருமே அவ் விஜயத்தில் கலந்துகொண்டனர்; பொது மக்கள் கலந்துகொள்ளவே யில்லை. எங்கே சென்றாலும் வேல்ஸ் இளவரசருக்குக் கறுப்புக் கொடி தரிசனந்தான்.

கறுப்புக் கொடி என்பது துக்கத்தின் அறிகுறியாம். பெரிய பெரிய நகரங்களின் ராஜவீதிகளெல்லாம் சூனியமாகத் தென்பட்டன. மயானமா, நகரமா இவை என்றே அந்த இளவரசர் திகைக்க நேர்ந்தது. சர்க்கரை மிட்டாயும் பலவகைத் தின்பண்டங்களும் தருவதாகச் சொல்லியும், குழந்தைகள்கூட அவ்விஜயத்தைப் பகிஷ்கரித்தன.

முதல் உலக மகா யுத்த சமயத்தில் பேருதவி புரிந்ததற்காக இந்தியாவுக்கு வந்தனம் அளிக்கவே இளவரசரை வருவித்ததாக அதிகார வர்க்கம் பறைசாற்றியது. அவ்வந்தனத்தை ஏற்றுக்கொள்ள எவரும் முன்வரவில்லை; அவர் கண்ணிலும் தென்படவில்லை. கல்கத்தாவுக்கு அவ்விளவரசர் விஜயஞ் செய்தபோது, பகிஷ்காரத்தை முன்நின்று நடத்தியவர் சுபாஷ் சந்திரரே.

அரசாங்கத்துக்கோ, சுபாஷின் மீதுள்ள ஆத்திரம் பொங்கி வழிந்தது. "இளவரசரே, ஏன்

வந்தீர்கள்? திரும்பிப் போய்விடுங்கள். உம்மீது எங்களுக்கு விரோதம் இல்லை. உம்மையும் எங்களையும் ஏமாற்றி மயக்க முயலும் அதிகார வர்க்கத்தின் மீதே எங்களுக்குக் கடுப்பு, கோபம்," என்று மாணவர் சிலர் கூறி, அதன் அடையாளமான கறுப்புக்கொடி காட்டினர்.

அது கண்டதும், அதிகார வர்க்கத்தின் ஆத்திரம் தலைமிஞ்சி விட்டது. அவ்விதம் நகரை ஆக்கிப் படைத்த தலைவராம் சுபாஷின்மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றே அவ்வர்க்கம் முனைந்து நின்றது. 'மலை புரண்டு வரினும், வான் இடிந்து விழினும், வரவேற்போம்!' என்றே அவர் உற்சாகத்துடன் இருந்தார்.

சுபாஷின் திறமையைப் பல வகையிலும் கண்டறிந்த கல்கத்தா மக்கள், அவரைத் தமது சிரமீது கொண்டு கொண்டாடிக் குலவினர்.

## 11. இரு வகைப் பாராட்டு

**வேல்ஸ்** இளவரசரின் பகிஷ்காரம் கல்கத்தாவிலே வெற்றிகரமாக முடிந்தது. அதிகார வர்க்கத்தின் முகத்தில் அது கரியைப் பூசியது போலாயிற்று. அவ்வர்க்கம் அதனை ஓர் ஆதாரமாகக் கொண்டு, சுபாஷின்மீது வழக்குத் தொடர்ந்தது. கண்ணிமைப் பொழுதினுக்குள் விசாரணை முடிய, ஆறுமாதச் சிறைக்காவல் தண்டனை விதித்தார் மாஜிஸ்திரேட்டு.

நீண்டகாலத் தண்டனை வாய்க்கும் என்றே சுபாஷ் பாபு கருதியிருந்தார். ஆறு மாதம் என்று காதில் பட்டதும், "இவ்வளவுதானா! நான்

கோழிக்குஞ்சா திருடினேன்? கோழிக்குஞ்சு திருடியவனுக்கே ஆறு மாதத் தண்டனை கொடுப்பரே!'' என்று சுபாஷ் கர்ஜித்தார். சேவையின் பலன் இது என்று சிரித்த முகத்துடன் அவர் சிறைக்கூடம் புகுந்தார்.

தண்டனையை அனுபவித்துவிட்டு, அவர் வெளியே வந்ததும், 1922-ஆம் ஆண்டின் மத்தியிலே வங்கத்தின் பெரும்பாகத்தில் வெள்ளப்பாழ் உண்டாயிற்று. கங்கைமா நதியில் பெருவெள்ளம் புரளவே, பற்பல கிராமங்களும் நகரங்களும் நீரில் மூழ்கித் தத்தளித்தன. கணவனை இழந்தோரும், பிள்ளையைப் பறிகொடுத்தோரும், வீடு வாசலைத் துறந்தோருமாக எண்ணிறந்த மக்கள் ஓலமிட்டு நின்றனர்.

உடனே அம்மக்களுக்கு ஆறுதலளிக்கும் ஊழியத்தில் அவர் முனைந்தார்; இளைஞரை நான்கு திக்கிலும் ஏவி, வெள்ளத்துக்கு அஞ்சி மரக்கிளைகளில் தொத்திக்கொண்டிருந்தோரை மீட்டார்; மூழ்கிப்போன வீடுகளிலிருந்து துணிமணிகளைத் திரட்டிக் கொணர்ந்து உடையவருக்கு உதவினர்; கஞ்சி குடிக்கவும் வகையில்லாதிருந்தோரின் வயிற்றைக் குளிர வைத்தார்; தாய் தந்தையரை இழந்த அனாதைக் குழந்தைகளை யெல்லாம் சேகரித்து, விடுதியொன்றில் வைத்துக் காத்தார்.

வெள்ளக் கஷ்டத்தைப் போக்க நிதியொன்று திரட்டினர். நான்கு லட்சம் ரூபாய் சேர்ந்தது. மலை மலையாக ஆடைகளும் துணிகளும் வந்து குவிந்தன. கண் இழந்தோருக்குக் கோல் கொடுத்து உதவுவதே போல, ஏற்ற உதவியெல்லாம் அவர் புரிந்து வந்தார். 'நா அசைத்தால், நாடு அசையும்'

என்பதை அதிகாரவர்க்கம் அவர் மூலம் உணர்ந்து கொண்டது.

அவ்விதமெல்லாம் சுபாஷ் பாபு தொண்டாற்றி வருகையில், அதிகாரவர்க்கம் ஏனோதானோ என்றேயிருந்தது. மக்களின் கஷ்ட நஷ்டத்தைப் போக்கச் சிறிதும் கருத்துக்கொள்ளவில்லை. சுபாஷின் பணியைப் பாரெல்லாம் அறிந்து போற்றி வருகையில், முடிவிலே இருபதாயிரம் ரூபா கொடுத்து உதவினர் அவ்வர்க்கத்தார்.

அந்நாளிலே வங்காளத்தின் கவர்னராய் இருந்தவர் லார்டு லிட்டன் எனப்படுவார். தம் அதிகாரிகளின் போக்கினைக் கண்டு அக்கவர்னருக்கு வெட்கம் உதித்தது; சுபாஷின் கருணைப் பெருக்கையும் ஊழியத்தையும் உணர்ந்து உவகை பூத்து அதன்மேல் அவர் சுபாஷை நேரில் கண்டு, பாராட்டிப் பேசினர்; புகழ்மாலையும் சூட்டினர்.

அந்த ஆண்டின் கடைசியிலே கயா நகரில் காங்கிரஸ் மகாசபை கூடியது. காந்தியின் போர் முறையில் தேசம் ஈடுபட்டாலும், அரசாங்கத்தின் அடக்கு முறையினல் களைத்துப் போய்விட்டது. அதனல், போர் முறையைச் சற்றே மாற்றவேண்டும் என்று சித்தரஞ்சன தாஸ் வாதாடினர்; சட்ட சபைகளுள் காங்கிரஸ்காரர் புகுந்து, அங்கிருந்தும் போர் புரிய வேண்டும் என்பது அத் தாஸரின் முதன்மையான கருத்தாம்.

காந்தி மகான் வகுத்துச் சென்ற போர் முறையை இம்மியளவும் மாற்றக்கூடாது என்றனர் காந்தி பத்தர் பலரும். அச் சமயத்திலே தமது பேச்சு வன்மையினலும் எழுத்தின் திறத்தினலும் தாஸின் கொள்கையை எடுத்துரைத்து, எல்லாரும்

ஏற்கும் வண்ணம் செய்தார் சுபாஷ். அதன் பலனாக மக்களில் பலரும் அக்கொள்கையில் ஈடு பாடு மிகுந்தனர். அப்போது வெளி மாகாணத் தாருக்கும் சுபாஷின் திறமை புலப்பட்டது. 'தாஸ ருக்கு ஏற்ற சீடர் வாய்த்தார். இந்த இருவரையும் எதிர்த்தல் இயலாத காரியம்,' என்று காந்தி பக்த ரும் கூறினர்.

## 12. அரசின் அச்சம்

சித்தரஞ்சன தாஸரின் முயற்சியால், காங்கிரஸ் காரரிடையே **சுயராஜ்யக் கட்சி** என்பது உதித்தது. சட்டசபைகளில் புகுந்து, அதிகார வர்க்கத்தை ஆட்டிப் படைக்க வேண்டும் என்பது அக்கட்சியின் முக்கிய நோக்கமாகும். மேலும், அதிகாரவர்க்க ஆட்சிக்கு அரிய கோட்டைகள் போலுள்ள நகராண்மைக் கழகங்களில் புகுந்து, அவற்றின் தன்மையை மாற்றுவதும் ஒரு நோக் காகும்.

சுயராஜ்யக் கட்சியின் உதயத்திலே தாஸரின் வலக்கை போலச் சுபாஷ் பாபு விளங்கினர்; கல்கத்தா நகராண்மைக் கழகத்தைக் கைப்பற்ற வும் அருந்துணை புரிந்தார். அக்கழகத்தின் போக்கை மாற்றுவதாயின், அதன் பிரதம நிர்வாக அதிகாரி காங்கிரஸ்காரராய் இருத்தல் வேண்டும். சுபாஷின் தகவையறிந்ததும், அவரையே பிரதம அதிகாரியாக நியமித்தார் தாஸர்.

அந்த அதிகாரிக்கு மாதச் சம்பளம் மூவாயிரம் ரூபாய். அப்பதவியில் அமர்ந்ததும், "இவ்வளவு சம்பளம் எதற்கு? இதில் பாதிச் சம்பளம்

போதும்," என்று சுபாஷ் சொன்னார். அப்போது அவருக்கு வயது இருபத்தேழுதான். வேலையில் பழுத்து முதிர்ந்தவர்களே அந்த உத்தியோகத்தை வகிக்க முடியும். அந்த அதிகாரியின் நியமனத்தை அரசாங்கம் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பது சட்டமாம்.

போஸின் திறமை, தகுதி இவற்றை அரசாங்கம் நன்கு அறியும். ஆயினும், அவரது நியமனத்தை முதலில் அரசாங்கம் ஒப்புக்கொள்ளவில்லை; முடிவிலே விதியின்றி ஒப்புக்கொண்டது. அந்நாளிலே ஆங்கில ஏகாதிபத்தியத்தில் லண்டனுக்கு அடுத்தபடியில் உள்ள நகரம் கல்கத்தாவே! அத்தகைய பெருநகரின் நிருவாகத்தை அதிகார வர்க்கமும் மனத்தாரமெச்சும் வண்ணம் சுபாஷ் நடத்தி வந்தார். நகரமக்கள் பலவிதத்திலும் நலமெல்லாம் எய்தி வந்தனர்.

சித்தரஞ்சன தாஸர் அக்கழகத்தின் தலைவராய் இருந்தார். அவரது சுயராஜ்யக் கட்சியாரே அக்கழகத்தின் பெரும்பாலான அங்கத்தினர். ஆதலின், அதன் தன்மையை மாற்ற அச்சித்தரஞ்ஞர் முயலலானார். முன்பெல்லாம் கவர்னர்களோ பெரிய அதிகாரிகளோ வந்தாலும் போனாலும், அவர்களை ஆடம்பரமாக வரவேற்று உபசரித்துச் சொல்மாலை சூட்டுதல் அக்கழகத்தின் முறைமை. இதனை அடியோடு நிறுத்தினார் சுபாஷ்.

தேச ஊழியத்தில் கியாதி வாய்ந்த இந்தியரை வரவேற்று, உபசரித்தல் என்பது இல்லை. எனவே, பெயரும் புகழும் படைத்த இந்தியரை உரிய பருவத்தே வரவழைத்து உபசரிக்கும் வழக்கம் ஆரம்பமாயிற்று. கல்கத்தா நகரின் தெருக்கள் பல

வும் ஐரோப்பியரின் பெயர்கொண்டே துலங்கும். அப்பெயர்களை மாற்றி, தேசீயத் தலைவர்களின் பெயர் கொண்டு வழங்கவும் ஏற்பாடாயிற்று.

கழகத்தின் அதிகாரிகளும் சிப்பந்திகளும் அன்றளவும் சீமைத்துணியே தரித்திருந்தனர். அத்துணியை விடுத்து, சுதேசிய உடையே தரிக்க வேண்டும் என்று விதி பிறந்தது. ஆரம்பப் படிப்பை இலவசமாக எல்லாருக்கும் அளிக்க வகை உண்டாயிற்று. ஏழைச் சிசுக்களுக்கு இலவசமாகப் பசும்பால் கொடுக்கவும் வழி செய்தனர். இலவச வைத்தியசாலைகள் ஏற்பட்டன.

சாதாரணமாக வில்லைச் சேவகன் முதல் பெரிய அதிகாரி வரையில் அனைவரும் நமது வரிப் பணத்திலிருந்தே சம்பளம் பெறுவர். எனவே, அவர்கள் பொது ஜனங்களின் ஊழியர்களாம். ஆனாலும், பொது மக்களின் எஜமானர் என்றே அவர்கள் ஆர்ப்பரித்து வந்தனர். இந்த இறுமாப்பு அடியோடு ஒழிந்தது.

உடலின் நிறம்பற்றி ஐரோப்பியர் என்றால், ஓர் உயர்வு உண்டு என்றிருந்தது. இதற்கு நம் சுபாஷ் சிறிதும் இடந்தரவில்லை. ஐரோப்பியராகட்டும், இந்தியராகட்டும், எல்லாரும் சரிசமமே என்று அவர் நடைமுறையில் காட்டலானார்.

'எங்களது வாக்கினுக்கு எதிர் வாக்கு ஏது? எங்களது மதிப்பினுக்கும் பங்கம் உண்டோ? எங்களைத் தட்டிப்பேசுவார் யார்?' என்றெல்லாம் இறுமாப்புடன் இருந்த அதிகாரவர்க்கமும் ஐரோப்பியரும் அங்கிலகண்டு சகித்தல் எங்ஙனம்? 'இன்றளவும் கைகட்டி வாய்புதைத்து நின்ற இந்தியர்

தலைநிமிர்ந்து நடக்கத் தலைப்பட்டுவிட்டனரே! இவ்வளவுக்கும் சுபாஷின் நிருவாகமன்றோ காரணம்?' என்று அன்னவருக்குக் கடுப்பு மூண்டது.

எல்லாவற்றிற்கும் மேலாக, 'இந்தியர் இவ்வளவு திறமையுடன் நகராண்மைக் கழகத்தை நடத்துகின்றனரே!' என்ற பொறாமைக்கும் அன்னார் ஆளாயினர். பல சொல்லி என்ன? சுபாஷ் பாபுவைப் போக்கிவிடவேண்டும் என்று அவர்கள் முடிவு செய்தனர். எவ்விதம் போக்குவது? காரணம் கூறியல்லவோ காரியம் செய்யவேண்டும்?

அதிகாரிகளின் அடக்குமுறை கண்டு, வங்க வாலிபரிலே சிலர் வெடிகுண்டையும் கைத்துப்பாக்கியையும் கையாண்டு, பயங்கரச் செயல் நடத்தி வந்தனர். இதற்கு அடக்குமுறையே ஆதிகாரணம். அம்முறையைக் கைவிடாமல், மேலும் மேலும் அதனைக் கையாளவே அவர்கள் கருத, பயங்கர இயக்கமும் ஓங்கி வந்தது. அது பற்றி, மாகாணக் கவர்னர் தமது விசேஷ அதிகாரத்தைக் கையாண்டு, அவசரச் சட்டமொன்று செய்தார். அதன்படி யாரையும் கைது செய்து விசாரணையில்லாமல் சிறையில் அடைத்து வைத்துவிடலாம்.

சுபாஷ் பாபு மாணவராய் இருந்த காலத்திலேயே பயங்கரச் செயல் வேண்டா என்று தம் சகாக்களுக்கு அறிவித்தார். நகராண்மைக் கழகத்தின் முக்கிய அதிகாரியாய் வந்த பின்பு, பயங்கரச் செயலில் நம்பிக்கையுள்ளவர்களை நல்வழியில் திருப்ப, அவர்களுக்கு வேலை தேடிக் கொடுத்துப் பிழைக்கும் வழிகாட்டினர். பயங்கரச் செயலில் ஈடுபட்டுப் புளித்துப் போன இரண்டொருவருக்கு அக்கழகத்தில் உத்தியோகம்

கொடுத்தார். இவ்விதம் அவர் ஊழியம் புரிந்து வந்தும் பயன் என்ன ?

திறம்பட அக்கழகத்தை நடத்தி வருகையில், அதன் பலனாக ஆபத்து விளையுமென்று சுபாஷுக்குத் தெரியும். ஆதலின், எந்த நிமிஷமும் உத்தியோகத்தை விட்டொழிக்க நேரும் என்று அவர் தயாராகவே இருந்து வந்தார். அந்நிலையிலே, வங்காளச் சதியாலோசனைக் கட்சிக்கு அவரே பிதா என்று அரசாங்கம் கூறி, அவரைச் சிறை செய்ய ஆணையிட்டது.

1924-ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், 25-ஆந் தேதி அதிகாலையில் படுக்கையில் இருக்கும்போதே போலீஸ் அதிகாரியொருவர் வாரண்டு கொண்டு வந்து, சுபாஷ் பாபுவை எழுப்பினார். "வந்துவிட்டதா வாரண்டு! நல்லது !" என்று கூறிக்கொண்டே மலர்ந்த முகத்துடன் அவர் எழுந்தார். அவருடன் நகரிலே வேறு எழுவரையும் சதிக் கூட்டத்தாரென்று போலீஸார் சிறை செய்தனர்.

சுபாஷ் கைதியானது கேட்டு நகரம் திடுக்கிட்டது. 'என்ன பாவம் செய்தார் அவர் !' என்று பாமரர் திகைத்து வருந்தினர். 'சுயராஜ்யக் கட்சியின் சுறுசுறுப்புக்கண்டு, அரசாங்கத்துக்கு அச்சம் பிடித்துவிட்டது; சுபாஷின் திறமை கண்டு அதிகாரிகள் அச்சப்பேய்க்கு ஆளாகிவிட்டனர்; வேறில்லை' என்று பலரும் பேசிக்கொண்டனர்.

மகாஜனங்கள் சும்மா இருக்கவில்லை ; மக்களின் திலகமான சுபாஷை ஏன் கைதி செய்தீர்கள்? விசாரணை இல்லாமல் அவரை அடைத்து வைக்க முடியாது. குற்றமிருந்தால், குற்றஞ்சாட்டி விசாரணை நடத்துங்கள் !' என்று கல்கத்தா வாசி

கள் பெருங்கிளர்ச்சி செய்தனர். சட்டசபையிலும் கேள்விகள் பிறந்தன.

அதுகண்டு அரசாங்கம் திணறியது! அவரை விடுவிக்கவோ, மனம் இல்லை. அதன்மேல் கோர்ட்டிலே பிரபல வக்கீல்கள் தோன்றி, அவசரச் சட்டம் செல்லாதென்று, வாதாடினர். இதற்கு அதிகாரிகள் ஈடு கொடுக்க இயலவில்லை.

திடீரென்று அவரைக் கைது செய்ததனால், நகராண்மைக் கழகத்தின் அலுவல்கள் குந்தகம் அடைந்தன. உடனே வேறு ஒருவரை நியமிக்கலாம் என்றாலோ, திறமைசாலியான மனிதர் கிடைக்கவில்லை. ஆதலின், சிறைக்குள் இருந்த வண்ணம் நகராண்மைக் கழகத்தின் அலுவல்களைச் சுபாஷே நடத்தி வர விதியின்றி அரசாங்கம் ஒப்புக்கொண்டது.

"பெருமகனைப் பெற்றெடுத்தோம்! வயிறும் மனமும் குளிர்ந்தோம்! சிறைச்சாலை சுயராஜ்ய தவச் சாலையேயாகும்!" என்று ஜானகி நாதரும் பிரபாவதி தேவியும் பேசி மகிழ்ந்தனர். தம் மகனார் ஐ. சி. எஸ். உத்தியோகம் பார்க்கவில்லையே என்று ஜானகி நாதர் அன்று கொண்ட கவலை இன்று இருந்த இடம் தெரியவில்லை.

இனி, வக்கீல்களின் வாதத் திறமை கண்டு நெஞ்சுலர்ந்து போன அதிகாரவர்க்கம் நமது இளஞ்சிங்கத்தை அங்குள்ள அலிபூர்ச் சிறையிலேயே நெடுநாள் வைத்திருந்தது. ஒரு முடிவுக்கு வாராமல் எத்தனை நாள் அவ்விதம் வைத்திருக்க முடியும்?

# 13. அரசின் பணிவு

பின்பு சுபாஷ் பாபுவையும் அவர் சகாக்கள் எழுவரையும் அதிகாரிகள் நாடு கடத்தினர். பர்மாவில் உள்ள மாண்டலே நகரின் சிறையில் அவ் வீர வாலிபர்கள் வசிக்க நேர்ந்தது. அச்சிறையோ, பார்ப்பதற்கே பயங்கரமும் திகிலும் ஊட்டும். அத்தகைய சிறையில் அமர்ந்ததும் சுபாஷ் பாபு எழுதியது இது:

"இச்சிறையில் வதிதல் என் பாக்கியமேயாம்! ஏனெனில், முன்னம் ஆறு வருஷ காலம் பால கங்காதர திலகர் இச்சிறையில் தங்கியிருந்தார் அல்லவா? அல்லாமலும் பாஞ்சால சிங்கம் லாலா லஜபதியும் இங்குத்தானே இனிது காலங் கழித்தார்? அப்பெரியார்களின் பாததூளி பட்ட இடம் பெரும் பெருமை உடையதேயாம்."

தேச பத்தர் அச்சிறை சேர்ந்ததும், துர்க்க பூஜை விழா வந்தது. தென்னிந்தியாவில் நாம் நவ ராத்திரி விழாக் கொண்டாடினல், வங்காளியர் துர்க்க பூஜையை மிகவும் விசேஷமாகக் கொண்டாடுவர். அதற்கு உரிய பண்டமும் பொருளும் தேடித்தர அச்சிறை அதிகாரி இசைந்தார். வங்காள அரசாங்கம் அதற்கு ஒப்பவில்லை. அரசின் அற்பத் தனத்தைக் கேட்டு வங்கம் வெகுண்டது. அதன் மேல் அரசாங்கம் வழிக்கு வந்தது. பூசைக்குரிய பொருள்கள் அப்பத்தருக்குத் தட்டாது கிட்டின.

பல மாத காலம் அவ்வீர பத்தர்கள் மாண்டலே சிறையில் கிடந்தனர். இதற்கிடையில், வங்காள மாகாண சட்டசபைக்கு உரிய தேர்தல்கள் வந்தன. சுபாஷ் பாபுவையும் மித்திரா என்பவரையும் இரண்டு இடங்களில் அபேட்சகர்களாக வங்காள வாக்காளர்

நியமித்தனர். 'சிறையில் கிடக்கும் பேர்வழிகளையா அபேட்சகராக நிறுத்துவது?' என்று அதிகாரிகள் பூச்சாண்டி காட்டினர்.

"அதிகாரிகளின் சீற்றத்துக்கு ஆளாவோர் எங்களது புகழ்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் பாத்திர மாவார்," என்று வாக்காளர் கூறி, அவ்விருவரை யும் தேர்ந்து எடுத்தனர். அதுகண்டு, அதிகார வர்க் கம் வெட்கித் தலைகுனிய நேர்ந்தது. ஆனாலும், அப் பத்தரை விடுவிக்கவோ தண்டிக்கவோ அவ்வர்க்கத் தினருக்குத் துணிவு வரவில்லை.

மாண்டலே நகரின் சிறையோ, பூலோக நகரம் போன்றது ஆகும். அத்தகைய சிறைவாசம் சுபாஷுக்குச் சிறிதும் ஒத்துக்கொள்ளவில்லை. காசநோய் வந்து, அவரை வருத்தியது. அவர் படு கிடையாகப் படுத்துவிட்டார். அவரது உடலம் மிகவும் இளைத்துப் போயிற்று. அரை உடம்பு ஆகிவிட்டார். அவர் முகம் வெளுத்துவிட்டது. இரத்தமும் சுண்டிவிட்டது. எழுந்து நடக்கவும் அவரால் ஆகவில்லை.

அச்செய்தி வங்கத்துக்கு எட்டியது. உடனே வங்காளியர் வெகுண்டு வெருண்டு, 'உடனே அவரை விடுதலை செய்யவேண்டும்!' என்று கூக்குரல் கிளப் பினர். எருமையின்மீது மழை பெய்தது போல அதிகார வர்க்கம் அசைவற்றுக் கிடந்தது. ஜனக் கிளர்ச்சி வலுக்கவே, அதிகாரிகள் சற்றே விழிப்புக் கொண்டு, அவரை இரங்கூன் நகருக்கு மாற்றினர்.

அவரது நிலை கண்டு அவர்களுக்கும் கலக்கம் எடுத்தது. அரசாங்க வைத்தியரும் சுபாஷின் சோதரரில் ஒருவரான மருத்துவரும் அவரைப் பரீட்சை செய்தனர். உடல்நிலை கவலைக்கிடமே

என்பது அதிகாரிகளுக்கு வெட்ட வெளிச்சமாயிற்று. சில நிபந்தனைகளின்மேல், அவரை விடுவிப்பதாக அரசாங்கம் அறிவித்தது.

"நிபந்தனையின்மேல் விடுதலை பெறுவதினும், சிறையில் மாய்ந்து மடிவதே மேலாகும்," என்று சுபாஷ் உறுதிகொண்டார். வரவர, அவரது உடல் நிலை அரசாங்கத்துக்கும் அதிக அச்சத்தை ஊட்டா நின்றது. வங்கத்தின் வாலிப திலகமான சுபாஷுக்கு ஏதேனும் தீமை நேர்ந்தால் குடி முழுகிப்போய்விடும் என்று அதிகாரிகள் அஞ்சினார்கள்.

அதன் மேல், 1927-ஆம் வருடம், மே மாத மத்தியில் அவரைக் கல்கத்தா துறைமுகத்துக்கு அதிகாரிகள் அழைத்து வந்தார்கள். வங்கக் கவர்னரின் சொந்தப் படகு அவரைக் கப்பலிலிருந்து இறக்கிக் கரைக்குக் கொண்டு வந்தது. கவர்னரின் டாக்டர் வந்து, அவரது உடம்பைப் பரிசோதனை செய்தார். இரண்டு இந்திய டாக்டர்களும் அப்பரிசோதனையில் கலந்துகொண்டனர்.

மறு நாள் காலையில் யாதொரு நிபந்தனையும் இல்லாமல், சுபாஷ் பாபு விடுதலை அடைந்தார். மூன்று ஆண்டினுக்கு முன்னம் அவரை அதிகாலையில் சிறை செய்த போலீஸ் அதிகாரியே இப்போது மலர்ந்த முகத்துடன் விடுதலை உத்தரவை அவரிடம் நீட்டினார். எலும்பும் தோலுமாகவே சுபாஷ் பாபு தென்பட்டார். அவரது உயிரோ, ஊசலாடிக் கொண்டிருந்தது. அந்நிலையில் அவரது ராஜீய குருநாதரான சித்தரஞ்சன தாஸர் மறைந்துவிட்டார். அது பற்றி அவர் துடிதுடித்தது கொஞ்ச நஞ்சமன்று.

# 14. இளைஞரின் துடிப்பு

உடலின் நோயை மதித்து, நம் சுபாஷ் ஒரு சிறிது ஓய்வு கொண்டார். ஆயினும், தேசப் பற்றும் சர்வ சுதந்தரத் துடிப்பும் அவரை வீட்டிலிருக்க விடவில்லை. ஆதலினால், அரசியல் கிளர்ச்சியிலே அவர் மிகவும் முனைப்புக்கொண்டார். வங்காளியர் அவரை மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகக் கொண்டனர்.

1927-ஆம் ஆண்டு சென்னை நகரில் நடந்த காங்கிரஸ் மகாசபையில், "பரிபூர்ண சுதந்தரமே இந்தியாவின் இலட்சியம்" என்னும் தீர்மானத்தை அவர் ஆதரித்துக் கனல்பொறி கக்கும் வண்ணம் அழுத்தமாகப் பேசினார். அவரும் பண்டித ஜவாஹரும் காங்கிரஸ் மகாசபையின் பொதுக் காரியதரிசிகளாக நியமனம் ஆயினர்.

அப்பால் தேசத் தலைவர்கள் கூடி அரசியல் திட்டம் ஒன்று வரைந்து, குடியேற்ற நாட்டு அந்தஸ்து கிடைத்தால் போதும் என்றனர். பரிபூர்ண சுதந்தரமே வேண்டும் என்று சுபாஷ் கர்ஜனை புரிந்து, எங்கும் இளைஞரைத் திரட்டி, ஆங்காங்கே சங்கங்கள் நிறுவினார். அப்போது மகாத்துமா காந்தி அரசியலிலிருந்து விலகி, சபர்மதி ஆசிரமத்தில் நூல் நூற்றுக்கொண்டிருந்தார்.

1928-ஆம் வருடம், மே மாதம், சுபாஷ் பாபு அந்த ஆசிரமம் சென்று, காந்தி மகானைக்கண்டு பேசினார். "இளைஞரும் மகா ஜனங்களும் முடிவான சுதந்தரப் போர் நாடி நிற்கின்றனர். ஆதலின் நீங்கள் ஆசிரமத்தை விட்டு வெளியே வந்து, அரசியலில் புகுந்து புத்துயிர் ஊட்டவேண்டும்," என்று வேண்டிக் கொண்டார்.

அதற்கு மகாத்துமாவோ, "எல்லாம் இருள் சூழ்ந்து கிடக்கின்றது! பிரகாசம் என்பது தோன்ற வில்லையே! என்ன செய்வேன்!" என்ருர். "அதோ, பார்தோலி தாலூக்காவில் வரிகொடா இயக்கத்தை வெற்றியுடன் உழவர் நடத்தியுளரே!" என்று சுபாஷ் பாபு பதில் கொடுத்தார்.

அரசியல் கிளர்ச்சி அதிதீவிரமாக நடக்க வேண்டும் என்பதே சுபாஷின் துடிப்பு. மகாத்துமா காந்தியோ, "படபடப்பு வேண்டா. நிதானமாக நடப்போம்" என்று கருதி நின்ருர். அச்சமயத்தில் கல்கத்தாவிலே 1928-ஆம் வருடக் கடைசியில் காங் கிரஸ் மகாசபை கூடியது.

"உடனே குடியேற்ற நாட்டு அந்தஸ்து கிடைத் தால் ஆச்சு, இல்லையேல் போர் முரசு கொட்டு வோம்!" என்று காந்தி மகான் ஒரு தீர்மானம் கொணர்ந்தார். "உடனே பரிபூர்ண சுதந்தரம் கிட்ட வேண்டும். இல்லையேல், கடும்போராட்டம் நிகழும்," என்று சுபாஷ் போஸ் ஒரு திருத்தம் கொணர்ந்தார்; ஆணித்தரமாகவும் பேசினர். பண்டித ஜவாஹர் அதனை ஆதரித்து அற்புதமான சொற்பொழிவு நிகழ்த்தினர்.

திருத்தம் நிறைவேறும் போலிருந்தது. சபை யோரில் பெரும்பாலார் போஸையே ஆதரித்து நின்றனர். அவ்வேளை, "எனது தீர்மானம் தோற்று விடின், நான் காங்கிரஸிலிருந்து விலகிக்கொள் வேன்," என்று காந்தி மகான் கூறினர். அதனல், சுபாஷின் திருத்தம் தோற்றுப் போயிற்று; காந்தியின் தீர்மானம் நிறைவேறியது.

தமது திருத்தம் தோற்றதே என்று சுபாஷ் வருந்தவில்லை. "காந்தி மகான் உட்பட நம் தலைவர்

கள் தயங்குகின்றனரே!" என்றுதான் வருந்தினர். அடுத்த லாகூர்க் காங்கிரஸ் மகா சபைக்கு ஜவாஹரே தலைவராதல் வேண்டும் என்று காந்திமகான் தீர்மானித்தார். அது முதல் காந்தியைச் சார்ந்து நிற்க ஜவாஹர் நிச்சயித்துவிட்டார்.

'மகா சபையின் தலைவர் தமக்கு உரிய காரியக் கமிட்டியின் மெம்பர்களைத் தாமே தேர்ந்தெடுத்துக் கொள்ளக்கூடாது; அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியே தேர்ந்தெடுக்கவேண்டும்' என்று சுபாஷ் பாபு அச்சபையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். காந்தி பக்தர் அதனை எதிர்த்தனர். அதனால், அது தோற்றுப் போயிற்று. அதுகண்டு சுபாஷ் வருத்தம்கொண்டு, **காங்கிரஸ் ஜனநாயகக் கட்சி** என்று ஒரு புதிய கட்சியை நிறுவினர். இவ்விதமெல்லாம் காந்திக்கும், சுபாஷுக்கும் கருத்து வேற்றுமை வளர்ந்துகொண்டே வந்தது. இளைஞரின் மனமோ, கோபக்குறி கொண்டது.

ஆனாலும், 1903-ஆம் ஆண்டிலே சட்ட மறுப்புப் போரை அச்சபை துவக்க, அதில் சுபாஷும் அவரது கோஷ்டியாரும் பொதுவாக வங்காளியரும் கலந்துகொண்டனர். அப்போது சுபாஷ் பாபு ஒன்பது மாதத் தண்டனைக்கு ஆளானர். உடனே வங்கத்தில் அந்த இயக்கம் மேலும் வலுத்தது.

அந்நாளில் மகாத்துமா காந்தியின் வாக்கினுக்கு எதிர் வாக்கு ஏற்படுதல் கஷ்டம். எதிர் வாக்குக் கூறுவோர் அரசியல் செல்வாக்கு அடைய முடியாது. ஆயினும், "வருவது வருக!" என்று எதிர் வாக்குக் கூறி எடுப்பாய் இருந்தவர் சுபாஷ் பாபு ஒருவரே. தேச நலம் கருதி எதிர் வாக்கு உரைத்தாரேயன்றி, வேறன்று.

# 15. வாலிபன் வேலை

அலிபுரம் சிறையில் சுபாஷ் பாபு கிடந்தகாலையில், ஒரு வெடிகுண்டு வழக்கில் எதிரிகளும் அச்சிறையில் இருந்தனர். விசாரணைக்காக அவர்கள் கோர்ட்டிற்குப் போக வேண்டும். அரசாங்கத்தின் அக்கிரமத்தை மதித்து, அவர்கள் கோர்ட்டுக்குப்போக மறுத்தார்கள். உடனே சிறையதிகாரிகள் சேர்ந்து, அடியும் உதையும் கொடுத்து, அவர்களை வண்டியில் ஏற்ற அரும்பாடு பட்டனர்.

அச்சந்தடி கேட்டதும், சுபாஷ்பாபு அவ்விடத்துக்கு விரைந்து சென்று, அந்த எதிரிகளுக்காகப் பரிந்து பேசினார். அதுகண்டு பொறாத அதிகாரிகளோ, அவரையும் நையப் புடைத்தார்கள். அந்த அடியைத் தாங்க முடியாமல், அவர் மூர்ச்சையுற்று நிலத்தில் சாய்ந்தார். ஒரு மணி நேரம் வரையில் அவருக்கு நினைவு வரவில்லை. அப்பால் அவரை அதிகாரிகள் தூக்கிச்சென்று, அவரது அறையில் கிடத்தினர்.

அச்செய்தி வங்கமெங்கும் காட்டுத்தீப்போலப் பரவிற்று. மகாஜனங்கள் கோபங்கொண்டு, ஆங்காங்கே கூட்டங்கள்போட்டு, அக்கொடுஞ்செயலைக் கண்டித்தனர். வாலிபனொருவன் வெகுளி மிகுந்து, பழிக்குப்பழி வாங்குவதாக விரதம் பூண்டான். மறுநாள் காலையில் சிறைகளின் மேலதிகாரியைக் காண ஓர் இளைஞன் வந்தான். அந்த அதிகாரி தமது அறையில் வீற்றிருந்தார்.

அதிகாரியை நோக்கியதும், அவ்வாலிபன் வந்தனம் புரிந்தான். வந்த காரியம் யாதென அந்த அதிகாரி வினவினார். 'வந்த காரியமா?' என்று அவ்வாலிபன் கூறிக்கொண்டே, தனது

கைத்துப்பாக்கிகொண்டு, அந்த அதிகாரியைச் சுட்டு வீழ்த்தினன்; உடனே தனது சட்டப்பையிலிருந்த விஷத்தை எடுத்துக் குடித்துத் தானும் மாண்டு வீழ்ந்தான். பழி தீர்த்த விதம் விந்தை அல்லவா?

அச்செய்தி அம்பலமானதும் வங்க அதிகாரிகளுக்கு ஒரே அச்சம் உண்டாகிவிட்டது. சுபாஷை அடித்துத் துன்புறுத்திய சிறையதிகாரி சித்திரவதைக்கு ஆளாகிவிடுவார் என்று அரசாங்கம் பயந்து அவரை வேறு இடத்துக்குமாற்றிவிட்டது. "செத்தேன்! பிழைத்தேன்!" என்று அந்த அதிகாரியும் தப்பிச்சென்றார்.

சுபாஷ் சிறையில் இருந்த காலையிலே, கல்கத்தா நகராண்மைக் கழகத்தின் மேயராக அக்கழகப் பிரதிநிதிகள் அவரைத் தேர்ந்தெடுத்தனர். அகில இந்தியத் தொழிலாளர் மகாசபைக்கும் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பெற்றார். அரசாங்கம் அவரைச் சிறைக்குள் தள்ளியும் பயன் என்ன? மக்களோ, தமது மனக்கோயிலில் அவரை இருத்தி, ஏற்றமெல்லாம் செய்து வந்தனர்.

1930-ஆம் வருடம், செப்டெம்பர் மாதம், சுபாஷ்பாபு சிறையிலிருந்து விடுதலையடைந்தார். அடுத்த டிசம்பர் மாதத்தில் சுதந்திர விரதம்கொள்ளும் நாள் வந்தது. அன்று கூட்டமோ, ஊர்வலமோ, எதுவும் கூடாதென்று அதிகாரிகள் ஆணையிட்டிருந்தனர். ஆயினும், சுபாஷோ, ஊர் வலம் நடத்தி, ஒரு கூட்டம் கூட்டி, சுதந்திரப் பிரதிக்ஞையை வாசித்தார்.

அதிகாரிகள் அதுகேட்டு, ஆயுத பாணிகளாக வந்து, அவரையும் பிறரையும் பலமாக அடித்தனர்.

அதனால், அவர் படுகாயம் அடைந்தார். அவரை அதிகாரிகள் அத்துடன் விடவில்லை. அவரைச் சிறை செய்து அவர்மீது வழக்கு நடத்தித் தண்டனையும் கொடுத்தனர். சின்னாள் அவர் சிறையில் கிடந்தார்; சிந்தனையிலும் ஆழ்ந்தார்.

இதற்கிடையில் தேசத்திலே சட்டமறுப்பு இயக்கம் மும்முரமாய் நடைபெற்றது. அதன் வேகத்தை அரசாங்கம் தாங்கமுடியவில்லை. காங்கிரஸ் மகாசபையை அழைக்காமல், இங்கிலாந்திலே ஆங்கில மந்திரிகள் இந்திய அரசியல் சம்பந்தமாக நடத்திய **வட்டமேஜை மகாநாடும்** பலனற்றதாய் முடிந்தது. ஆனது பற்றி அரசாங்கத்துக்கும் காங்கிரஸுக்கும் ஓர் உடன்பாடு உண்டாயிற்று.

அப்போது இந்தியாவிலே அரசப்பிரதிநிதியாய் இருந்தவர் **லார்டு இர்வின்.** இவருக்கும் காந்திக்கும் இடையே ஏற்பட்ட சமரசம் **காந்தி—இர்வின் ஒப்பந்தம்** எனப்படும். அதன்படி அரசியல் கைதிகளனைவரையும் விடுவிக்க இர்வின் பிரபு ஒப்புக்கொண்டார். மகாத்துமா காந்தியும் சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்திவிட்டு, இங்கிலாந்திலே நடக்கும் இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டினுக்குப் போக ஒப்பினர்.

அந்த ஒப்பந்தத்தின் விளைவாக அரசியல் சிறையாளர் அனைவரும் விடுதலை பெற, நம் சுபாஷ் பாபுவும் விடுதலை ஆனர். அந்த ஒப்பந்தத்தை மறுத்து, சுபாஷ்பாபு, பண்டித ஜவாஹர், சென்னை **எஸ். சீனிவாச ஐயங்கார், வித்தல்பாய் பட்டேல்** ஆகிய நால்வரும் சேர்ந்து ஓர் அறிக்கை வெளியிட்டனர்.

அந்த ஒப்பந்தமும் அறிக்கையும் கண்டு தேசத்திலே ஒரு முகமான கருத்து உதிக்கவில்லை. இளைஞராய் உள்ளோர் அந்த ஒப்பந்தமும் வேண்டா என்றனர். வயது சென்றவர்களோ, 'பரிட்சை பார்க்கலாமே!' என்றிருந்தனர். இவ்விதம் தேசத்திலே குழப்ப மனப்பான்மை பரவலாயிற்று.

## 16. சுபாஷும் காந்தியும்

'கெஞ்சினல் மிஞ்சுவர்; மிஞ்சினல் கெஞ்சுவர்,' என்பது ஒரு பழமொழி. இது உலக இயற்கை; ஆங்கில ராஜதந்திரத்தில் ஓர் அமிசமும் ஆகும். ஆதலின், "ஆங்கிலேயரை நம்பிமோசம் போக வேண்டா; இரண்டாவது வட்டமேஜை மகா நாட்டினுக்கும் போதல் கூடாது; போவதில் யாதொரு பயனும் கிட்டாது; சுதந்தரப் போரைத் துவக்கி முனைப்புடன் நடத்துதலே நனிசிறந்தது," என்று போஸ் மகாத்துமா காந்திக்கு வற்புறுத்திக் கூறினர்.

'வெளுத்ததெல்லாம் பால்,' என்று கொள்வார் காந்தி மகான். அன்றியும், வட்டமேஜை மகா நாட்டிற்குச் சென்று பார்க்கலாமென்றும் அம்மகான் உறுதியோடு இருந்தார். அங்ஙனமாயின், தூக்குத் தண்டனைக்கு ஆளாகி நிற்கும் பகத் சிங்கு, சுகதேவ், ராஜகுரு ஆகிய மூவரையும் இர்வின் பிரபு விடுவிக்க முடியுமா? பாருங்கள்," என்று மீண்டும் போஸ் புகன்றார்.

காந்தி மகான் அவ்வாறே டில்லி சென்று, அப்பிரபுவுடன் நெடுநேரம் வாதாடினர்; அம்மூவரையும் விடுவிக்குமாறு மன்றாடினர். தூக்குத்

தண்டனை விதித்த பஞ்சாபு மாகாண அதிகாரிகளை மீறி அப்பிரபுவினுல் ஒன்றும் செய்ய முடியவில்லை. மூவரும் தூக்கிலிடப்பட்டுவிட்டனர். அது கேட்டு நம் தேசம் திடுக்கிட்டது. தேச இளைஞர் அனைவரும் பெருங்கொதிப்புக்கு ஆளாயினர்.

அத்தகைய நிலையில் கராச்சி நகரிலே காங்கிரஸ் மகாசபை கூடியது. காந்தி மகானைக் கண்டதும், இளைஞர் கருப்புக் கொடி காட்டித் தமது ஆத்திரத்தை அறிவித்தனர்; 'மூன்று உயிர்களைக் காக்க முடியாத ஒருவர் இங்கே அரசப் பிரதிநிதியாம்! மற்றவர் வட்டமேஜை மகாநாடு சென்று என்ன பலன் அடைய முடியும்?' என்றும் கோபாவேசம் கொண்டு கூறினர்.

இளைஞரின் பிரதிநிதி சபையான அகில இந்திய நவஜவான் சபையும் கராய்ச்சியில் கூடிற்று. அதற்குச் சுபாஷ் சந்திர போஸ் தலைவராய் இருந்தார். "காந்தி இர்வின் ஒப்பந்தம் கண்ணைத் துடைக்கும் வேலை; ஒன்றுக்கும் உதவாத குப்பைக் காகிதம்," என்று அச்சபை தீர்மானித்தது. சுபாஷும் காந்தியின் போக்கை அழுத்தமாகக் கண்டித்துப் பேசினுர்.

சுருங்கச் சொன்னல், மகாத்துமா காந்தி இங்கிலாந்து சென்ருர்; வட்டமேஜை மகாநாட்டில் தமது திறமையெல்லாம் காட்டி வாதாடினுர்; வெறுங்கையுடன் இந்தியாவுக்குத் திரும்பினுர்! மனம் ஒடிந்து திரும்பினுர் என்றே சொல்ல வேண்டும். காந்தியின் வருகையை முன்னிட்டு, பம்பாயிலே காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடிற்று. அதற்குச் சுபாஷுக்கும் அழைப்பு வந்தது.

காங்கிரஸ் காரியக் கமிட்டியும் சுபாஷும் ஒத்துப் போவதில் அரசாங்கத்துக்கு விருப்பம் இல்லை. அதனால், பழங்காலச் சட்டமொன்றின் உதவி கொண்டு, சுபாஷை அதிகாரிகள் கைது செய்து, விசாரணையில்லாமல் சிறையில் இட்டு வைத்தனர். முன்னமே காச நோய்க்கு ஆளாகி யிருந்த சுபாஷ், அந்நோயின் மிகுதியினால் பெரிதும் வாடி வதங்கினார். அதற்குரிய மருத்துவம் கொள்ள இந்தியாவிலே வசதி இல்லை. ஆதலின், அவரை ஐரோப்பா செல்ல அதிகாரிகள் அனுமதி கொடுத்தார்கள்.

ஆயினும், "இந்தியாவிலே அவர் எங்கும் தங்கக்கூடாது; தம் பெற்றோரையும் பார்க்கக் கூடாது; ஐரோப்பாவிலும் அவர் ஜெர்மனிக்குப் போகக் கூடாது; ஆஸ்திரியாத் தேசத்திலுள்ள **வியன்னா** நகருக்கே அவர் செல்லலாம்," என்றெல்லாம் அதிகாரிகள் நிபந்தனை விதித்தனர். நோய்க்கு இரையாகிச் சாக அவருக்கு இஷ்டமில்லை. சுதந்தரப் போரில் சாதலே அவரது கருத்தாம். அது வரையில் உயிர் தாங்கி நிற்கவும் அவர் விரும்பினார்.

ஆதலின், அவர் வியன்னா நகரம் சென்றார்; அங்கே தக்க சிகிச்சை பெற்றார். அந்நகரின் மேயரோ, கல்கத்தாவின் மேயரை வரவேற்று, நகரெங்கும் அழைத்துச் சென்று, நகர நிருவாகத்தை நன்கு விளக்கி உரைத்தார். **பிரேகு** நகரின் மேயரும் அவ்வாறே சுபாஷுக்கு மரியாதை பலவும் செய்து களித்தார். அவ்விதம் சென்ற இடமெல்லாம் சுபாஷுக்குச் சிறப்பே கிட்டியது.

டில்லிச் சட்டசபையின் தலைவராயிருந்த **வித்தல்பாய் பட்டேல்** என்பாரும் வியன்னா நகரிலே

காச நோய்க்குச் சிகிச்சை பெற்று வந்தார். அது போது சுபாஷும் பட்டேலும் மனமொத்த தோழர் ஆயினர். வழவழ, குழகுழ என்றிருக்கும் பேர் வழிகளைக் காங்கிரஸ் மகாசபையிலிருந்து விலக்கி, அச்சபையின் மிடுக்கை உலகெங்கும் பறை சாற்ற வேண்டும் என்று இருவரும் ஓர் ஏற்பாடு செய்ய எண்ணினர். பட்டேல் ஒரு லட்ச ரூபாய் அதற்காக ஒதுக்கி வைத்தார்.

நாளடைவில் பட்டேலுக்குக் காச நோய் முற்றிவிட்டது. 'இனி இவர் பிழையார்!' என்றும் தோன்றியது. அத்தறுவாயில் அருகே இருந்து புத்திரனைப்போலப் பணிவிடை பலவும் புரிந்து வந்தார் போஸ். அது கண்டு களித்த பட்டேல் சுபாஷை ஆசீர்வதித்துச் சென்றார்.

## 17. அரசின் சின்னத்தனம்

சுபாஷ் பாபு வியன்னா நகரில் இருந்தபொழுது, இங்கிலாந்திலுள்ள இந்தியரனைவரும் ஒரு மகா நாடு கூடினர். இந்தியாவின் அரசியலைக் குறித்து ஆராய்வதே அம்மகா நாட்டின் நோக்கம். அதற்கு வந்து தலைமை வகித்து, அரிய ஆலோசனை கூற வேண்டுமென்று சுபாஷை அவர்கள் அழைத்தார்கள். அதனை அறிந்ததும் இங்கிலாந்துக்கு வரக் கூடாது என்று அதிகாரிகள் தடுத்துவிட்டனர்.

ஆனாலும், அவர் தமது தலைமை உரையை எழுதி அனுப்பினார். அம்மகா நாட்டிலே அது வாசிக்கப்பட்டது. காந்தி மகானது போக்கை அவர் கண்டித்தார்; காந்தி இர்வின் ஒப்பந்தம் ஒரு

பெரும் பிழை என்றார்; 1933-ஆம் ஆண்டிலே காந்தி மகான் விட்டுக் கொடுத்தது பேரனர்த்த மாகும் என்றும் குறிப்பிட்டார்; 1920-ஆம் ஆண்டி லிருந்து 1933-ஆம் ஆண்டு வரையில் பாரத மக்கள் செய்த தியாகம் விழலுக்கிறைத்த நீராயிற்று என் றும் சுட்டிக்காட்டி வருந்தினர்; உலக நிலையை மதித்து, இந்தியாவின் அரசியலை எண்ணிப் பார்க்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

சுபாஷின் தந்தையார் மரணப் படுக்கையில் கிடப்பதாகத் தகவல் எட்டியது. அதை அறிந்த தும், சுபாஷ் பாபு ஓர் இத்தாலியக் கப்பலில் ஏறி இந்தியாவுக்கு வரலானர். வந்ததும், அவருக்கு அதிகாரிகள் ஆக்ஞை ஒன்று செய்தனர். நேரே கல்கத்தாவுக்குச் சென்று, அங்கே தந்தையார் வீட்டிலேயே மறு உத்தரவு வரையில் இருக்க வேண்டும். தவிர அந்த வீட்டை விட்டு வெளியே போகக்கூடாது. அயலார் எவரையும் கண்டுபேசக் கூடாது. சுற்றத்தாரைத் தவிர்த்து வேறு யாருட னும் எவ்விதத் தொடர்பும் கொள்ளக்கூடாது; தவறினல், ஏழு வருடம் சிறை வாசம் கிடைக்கும். இதுவே அந்த ஆக்ஞையின் கருத்தாம்.

சுபாஷ் வந்ததும், அவர் தந்தையார் பரத்தில் கலந்துவிட்டார். பின்பு சில நாள் இத்தேசத்தில் தங்கியிருக்கச் சுபாஷ் விரும்பினர். ஒரு வார காலத் துக்குள் இந்தியாவைத் துறந்து ஐரோப்பாவுக்குப் போய்விட வேண்டும் என்று அரசாங்கத்தார் கட்டளை இட்டனர். "வெளித் தேசத்தில் சுதந்த ரத்துடன் உலவுவதைவிட, இந்தியாவிலே சிறை யுண்டு கிடத்தல் மேலாம்," என்றே சுபாஷ் மனங் கரைந்து கூற நேர்ந்தது.

ஆயினும், காசநோய் கடுமை காட்டியது. உடனே வியன்னாவுக்குப் போய்விடுதல் நலம் என்று மருத்துவர் மொழிந்தனர். அவ்வாறே அவர் 1934-ஆம் வருடம், ஜனவரி மாதம், 10-ஆந் தேதி, இந்தியாவை விட்டுப் புறப்பட்டார். ஐரோப்பாவில் தங்கியிருந்த காலையில், உலக நிலையை அவர் கூர்ந்து அறிந்தார். அவர் உடல் நலிந்திருந்தாலும் உள்ளம் நலியவில்லை.

அங்கே அவர் **இந்திய சுதந்தரப் போராட்டம்** என்ற ஓர் அரிய நூலை எழுதினார். அது இங்கிலாந்தில் அச்சாயிற்று. அதனை வாசித்தோர் அனைவருக்கும் பரபரப்புடன் படபடப்பும் உதித்தது. ஆதலின், அப்புத்தகத்தை இந்தியாவுக்கு வாரா வண்ணம் அதிகாரிகள் தடுத்துவிட்டார்கள். அந்நூலின் அரிய வாசகத்தை இன்று எல்லாரும் படித்து இன்புறலாம்.

ஐரோப்பாவில் இருந்த பொழுது அவர் **உரோமாபுரி** சென்று, ஆப்கானிஸ்தானத்தின் மாஜி சக்ரவர்த்தியைக் கண்டு பேசினார். **ஜினீவா** நகரிலே மக்களின் விருப்பை மதித்து, அங்கே விட்டல்பாய் பட்டேலின் படத்தைத் திறந்துவைத்தார். இந்தியாவின் மதிப்பிற்குப் பங்கம் உண்டாகும் வண்ணம் வெளியான ஐரோப்பிய சினிமாப் படங்களைக் கண்டித்துப் பேசினார்; கருப்பு மனிதர் வெள்ளையரால் ஆளப்படவே பிறந்தனர் என்று **ஹிட்லர்** பேசியதை அழுத்தம் திருத்தமாக ஆட்சேபித்தார்; அரிய கட்டுரைகளும் வரைந்தார்.

அப்பால், அவர் **அயர்லாந்து** சென்று, அதன் சிறந்த தலைவரான **டிவேலரா** என்பவரைச் சந்தித்தார். அவர் நம் சுபாஷுக்கு **டப்ளின்** நகரிலே

பெருவிருந்தும் உபசாரமும் நடத்திப் பாராட்டினர். இந்தியாவுக்கும் அயர்லாந்துக்கும் உள்ள உறவு அது பற்றி அதிகரித்தது. 'இந்தியாவிலே அதிகாரிகளால் வெறுக்கப்படும் மனிதர் ஐரோப்பாவிலே எங்கும் புகழ் பெறுகிறாரே!' என்று இங்கிலாந்தின் மந்திரிகளும் பிறரும் வியப்பும் வெறுப்பும் கொள்ள நேர்ந்தது.

'தேசத்தின் அருமந்த தலைவர் எத்தனை நாள் வெளியிடங்களில் கிடந்துழலுவது!' என்று இந்தியர் பொங்கினர். இலட்சுமணபுரி காங்கிரஸின் அக்கிராஸனராக நியமனமான பண்டித ஜவாஹர்லால் நேரு, சுபாஷுக்கு ஓர் அழைப்பு விடுத்தார்; காங்கிரஸ் மகா சபைக்கு வந்தாக வேண்டும் என்றும் வேண்டிக்கொண்டார்.

அதற்கிணங்கிச் சுபாஷ் பாபுவும் 1936-ஆம் வருடம், ஏப்பிரல் மாதம், இந்தியாவுக்கு வந்தார். பல்லாயிரக்கணக்கான ஆடவரும் மாதரும் அவரை வரவேற்கக் குழுமியிருந்தனர். அரசாங்கத்துக்கோ அவரது வருகை பிடிக்கவில்லை. ஆதலின், 1818-ஆம் வருடச் சட்டத்தின்படி, அவரை அதிகாரிகள் கைது செய்து எரவாடாச் சிறைக்குக் கொண்டு போயினர்.

## 18. ராஷ்டிரபதியாதல்

சுபாஷ் பாபுவைச் சிறைக்குக் கொண்டுபோகையில், "சுதந்தரக் கிளர்ச்சி அந்தரமளாவட்டும்; மக்கள், மனம் தளரவேண்டா," என்று சொல்லிப் போனார். அவரது சிறைவாசம் கண்டு,

குறித்து எங்கும் கூக்குரல் கிளம்பி, வானை முட்டியது. பண்டித ஜவாஹரும் மனம் கொதித்தார். டில்லிச் சட்ட சபையிலே கேள்விமேல் கேள்விகள் பிறந்தன. கண்டனத் தீர்மானமொன்றும் கடுகி எழுந்தது.

'பயங்கரவாதிகளின் தலைவர் அவர். அவரை அடைத்து வைக்காமல், என்ன செய்வது!' என்று அதிகாரிகள் சாக்குப் போக்குச் சொல்லினர். தேசமக்கள் அதனை நம்பவில்லை. அரசாங்கம் நடுங்கும் வண்ணம் அவர்கள் கிளர்ச்சி செய்து வந்தனர். வெகு ஜன வாக்கின் வன்மை கண்டு அதிகாரிகள் திகைக்க நேர்ந்தது.

முடிவிலே, 1937-ஆம் வருடம் மார்ச்சு மாதம் அவரை விடுவித்தனர். உடனே அவர் தமது உடல் நலம் கருதி, மீண்டும் ஐரோப்பா சென்றார். இப்போது சுதந்தரப் புருஷராகச் செல்லவே, லண்டனிலுள்ள நம்மவர் ராஜோபசாரத்துடன் அவரை வரவேற்றனர். பல இடங்களில் அவர் சொல் மாரி பொழிந்து அரசாங்கமளித்த அரசியல் திருத்தத்தை அக்கு அக்காகப் பிரித்துக்கூறி, அதன் குறைபாடுகளை வெட்டவெளிச்சமாக்கினர்.

1938-ஆம் வருடம் ஹரிபுரா நகரில் நடந்த காங்கிரஸுக்கு அவரே ராஷ்டிரபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உடனே அவர் இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். அது ஐம்பத்தோராவது காங்கிரஸ் மகாசபை. ஆதலின், காங்கிரஸ் பந்தலுக்கு 51 வாசல்கள் ஏற்பட்டன! 51 தேசீயக் கொடிகள் உயர்த்தப்பட்டன! 51 எருதுகள் கொண்ட இரதத்தில் அவரை ஏற்றி ஊர்வலம் செய்வித்தனர்! 51 தேசீயப் பாடல்கள் பாடப்பெற்றன!

"பிறந்த நாள் முதல் இடைவிடாமல் துன்பத் துக்கும் தியாகத்துக்கும் ஆளான பெருமான் நம் ராஷ்டிரபதியாக வந்திருக்கிறார்," என்று களிப் படையாதார் இல்லை. "இங்கிலாந்து தேசம் இரண்டாவது உலக மகாயுத்தத்தில் ஈடுபட்டிருப் பதால், அதற்கு நாம் தீமையெதுவும் புரியக்கூடாது. தீவிர சுதந்திரக் கிளர்ச்சிக்கு இது காலமன்று," என்றார் காந்தி மகான்.

"போரிலும் காதலிலும் நேர்மையே பார்த்து நின்றால் கருதிய காரியம் கைகூடாது. நம்மைக் கேளாமல் யுத்தத்திலே நம் தேசத்தை இழுத்து விட்டு, நம் நலபலன்களையெல்லாம் பறித்து வரும் இங்கிலாந்தை எதிர்த்துச் சுதந்தரமடையத் தவறு தல் சரியாகாது," என்று சுபாஷ் பாபு விளங்க உரைந்தார். இதனை மகாத்துமா ஏற்கவில்லை. காந்தி பத்தரும் அப்படியே. ஆதலின், சுபாஷுக் கும் காந்தி பத்தருக்கும் இடையே வேற்றுமையும் வெறுப்பும் வளரத் தலைப்பட்டன.

அடுத்த 1939-ஆம் வருடத்திற்கும் ராஷ்டிர பதியாக வந்தார் சுபாஷ். அவர் ராஷ்டிரபதி ஆகக் கூடாதென்றே காந்தி மகான் கருதினார்; பட்டாபி சீதாராமய்யாவையும் போட்டியாக நிறுத்தி வைத்தார்; சுபாஷைத் தோற்கடிக்கக் காந்தி பத்தர் பெருமுயற்சி செய்தனர்; ஆயினும், சுபாஷ் வெற்றி பெற்றார். அது கண்டு காந்தி மகான் எழு தியது இது:

"மீண்டும் சுபாஷ் ராஷ்டிரபதியாகக்கூடாது என்பதே ஆதிமுதல் எனது கருத்தாம். வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டாமென்று பட்டாபி சீதாராமய்யாவை வற்புறுத்தினவன் நானே.

ஆதலின், பட்டாபியின் தோல்வி எனது தோல்வி யாகும். எனது கொள்கை கோட்பாடு இவற்றை காங்கிரஸ் பிரதிநிதிகள் ஏற்கவில்லை என்பதற்குப் பட்டாபியின் தோல்வியே போதும். இத்தோல்வி கண்டு நான் மகிழ்கின்றேன்! சிறுபான்மையின ராய் உள்ள என் கோஷ்டியார், வேறு விதியின் றேல், காங்கிரஸை விட்டு வெளியே வந்துவிட வேண்டும்.''

இவ்விதம் மகாத்துமா எழுதின உடனே அவர் பத்தரனைவரும் சுபாஷுடன் ஒத்துழைக்க மறுத் தனர். அந்நிலை கண்டு, சுபாஷ் கலங்கவில்லை. அச்சபையைவிட்டு விலகி வெளியே நின்று, வேலை செய்தலே மேலென்று தீர்மானித்தார். இதற்கிடை யில் அவரை அம்மகாசபையிலிருந்து காந்தி பத்தர் விலக்கிவிட்டனர். அவரைச் சார்ந்துநின்ற வங்க மாகாணக் காங்கிரஸ் கமிட்டியினரையும் அங்கீ கரிக்கவில்லை. அதுகண்ட சுபாஷ் **முன்னேற்றக்கட்சி** என்ற ஒரு கட்சியை நிறுவினர். வங்கமாகாணமும் தேச இளைஞரும் அவரைச் சார்ந்து நின்றனர்.

சுபாஷுக்குக் காங்கிரஸின் ஆதரவு இல்லை என்பதைக் கண்டதும், அவரை அரசாங்கம் சிறை செய்து, விசாரணையின்றி அடைத்து வைத்தது. அவர் சிறையில் கிடந்தும் பயன் என்ன? மக்களின் மதிப்பும் அன்பும் குறையவில்லை. டில்லிச் சட்ட சபைக்கு நடந்த உபதேர்தலில் போட்டியின்றி அவர் தேர்ந்தெடுக்கப்பெற்றார். அப்போதும், அர சாங்கம் அவரை விடுவிக்கவில்லை. அவர் உண்ணா நோன்பு கொண்டு, உயிரைத் துறக்கவும் உறுதி கொள்ளலானர். அவ்வாறே வங்காளக் கவர்னருக் கும் கடிதம் ஒன்று வரைந்து விடுத்தார். அதன் விவரத்தை அடுத்த அதிகாரத்தில் பார்க்கலாம்.

# 19. ஆருயிர் துறப்பேன்!

மகா ஜனங்களின் ஆவேசத்தையும், ஜனத் தலைவர்களின் சீற்றத்தையும், சட்டசபைப் பிரதிநிதிகளின் கண்டனத்தையும், வங்க அரசாங்கம் மதியாமல், மதோன்மத்தாய் இருந்தது. குற்றம் எதுவும் சாட்டாமலும், கோர்ட்டில் விசாரணை நடத்தாமலும், தம்மை அடக்கி வைத்திருத்தல் அநியாயம் என்றே சுபாஷ் பாபு கருதினார்; தாம் யாதொரு பாவமும் பண்ணவில்லை என்பதே அவரது உறுதியாம்.

அன்றளவும் பதினொரு முறை அவர் சிறையில் கிடந்து உழன்றிருக்கிறார். இடையிலே காசநோய் தோன்றி அவரது உடலை உருக்கிவிட்டது. மீண்டும் சிறைக்குள் தள்ளினதால், அவரது தேக ஆரோக்கியம் பெரிதும் கெட்டுப்போயிற்று. வாழவும் வகை இல்லாச் சங்கடத்தில் சாதலே நன்று என்று அவர் துணிந்தார்; உண்ணா நோன்பும் கொண்டார். வங்கக் கவர்னருக்கு விடுத்த கடிதத்தின் கருத்து இது:

"வெட்டவெளிச்சமான அநீதியும் அக்கிரமுமே காண்கின்றேன். அரசாங்கம் இவ்விதம் நடப்பதற்கு ஒரேயொரு முகாந்திரமே கூற முடியும். வேண்டுமென்று என்னை வதைக்க வேண்டும் என்னும் பாதையிலேயே அரசாங்கம் புரளுகின்றது. இதற்குப் புத்தி புகட்ட வேண்டும். அரசின் போக்கை அகில உலகமும் அறிதல் வேண்டும். ஆனது பற்றி உண்ணா நோன்பு கொண்டு உயிரைத் துறக்கப் போகின்றேன்!

"கைக்கு மெய்யான பலன் காணாவிடினும், தியாகம் என்பது வீண் போகாது. துன்பத்தில்

உழன்று, தியாகத்தில் திளைத்தால்தான், நமது இலட்சியம் அல்லது குறிக்கோள் ஓங்கி வளரும்; பரந்தும் பெருகும்! அன்றும் சரி, இன்றும் சரி, என்றும் சரி. தியாகமே அரிய பெரிய சாதனைகளுக்கு அடிப்படையாம்.

"இது மண்ணுலகம். இந்த உலகிலே எல்லாம் மடிந்துபோம். ஆனல், இலட்சியம் அல்லது குறிக்கோள் என்பது என்றும் மடியாது! மறையாது! ஒருவன் தனது குறிக்கோள் கருதி, உயிரை இழந்துவிடலாம். ஆனல், அக்குறிக்கோளோ, பல்லாயிரவரின் மனத்தில் பரிணமிக்கும்; பரிமளிக்கும்! இஃதே இயற்கையின் விசேஷம். சோதனையும் தியாகமும் விளைக்காமல், எத்தகைய குறிக்கோளும் உலகத்திலே நிலைத்தோங்கியது இல்லை.

"ஒரு குறிக்கோளுக்காக வாழ்ந்தோம்; உயிரைக் கொடுத்தோம்," என்னும் உணர்ச்சியினும் உயர்ந்த ஆறுதல் உண்டோ? "கடமையை ஆற்றினேம், கண் மூடினேம்," என்னும் திருத்தியினும் பரம திருத்தி ஒன்று உளதோ? தான் புகட்ட விரும்பிய செய்தி இத்தேசத்திலே காடு மேடு, மூலைமுடுக்கு, வீடு வாசல் எங்கும் பிரதிபலிக்கும் என்னும் பெரும்பயனைவிட ஆன்மாவுக்கு வேறு பயன் இருக்குமோ?

"எனவே, துன்பமும் தியாகமும் வீணுகிவிடும் என்று எவரும் கருத வேண்டா. துன்பமும் தியாகமும் காரணமாக நமது காசோ பணமோ, உயிரோ உடலோ போனலும் என்ன? அக்கறை இல்லை! அழியா அமர வாழ்வு வந்து எய்தும்! நமது குறிக்கோளும் கதிரவனது கிரணம் போல எங்கும் விரியும்! தேசம் உயிருடன் வாழ வேண்டி,

இலட்சிய புருஷன் சாகத்தான் வேண்டும். வேறு வழியில்லை.

"ஆதலின், இந்தப் பாரததேசம் பல்லாண்டு பல்லாண்டு வாழவும், சுதந்தரமும் கீர்த்தியும் எய்திச் சிறக்கவும், நான் இன்று இறந்தாகவேண்டும்!"

அக்கடிதம் வங்க சர்க்காருக்கு மிகுந்த கலக்கம் ஊட்டியது. சுபாஷ் பாபு உயிர் துறந்து விடுவார் என்றே அவர்கள் திகில் கொண்டனர். அவரது உயிருக்கு ஆபத்து நேர்ந்தால், அனர்த்தமே விளையுமென்று அதிகாரவர்க்கம் அஞ்சி அறிவிழந்துவிட்டது. ஆதலின், அவரை விடுவிக்க வேண்டுமென்று முடிவாயிற்று.

ஆனாலும், தமது வீட்டிலேயே அவர் இருத்தல் நலம் என்று கூறினர். அவ்வாறே அவர் தமது மாளிகையிலேயே வதியலானார். "இந்த இரண்டாவது உலக மகாயுத்த சமயம் தவறினால், மறுசமயம் வாய்க்காது. பாரத தேசம் பின்னால் சுதந்தரம் அடைய நெடுங்காலம் ஆகும்," என்று அவர் கருதியே சட்டமறுப்புப் போரை மும்முரமாக நடத்த வேண்டுமென்று காந்தி மகானிடம் வற்புறுத்தி வந்தார். அதற்கு மகாத்துமா இசையவில்லை.

எனவே, யுத்த சமயத்தில் இங்கிலாந்தின் எதிரிகளான ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் இத்தேசங்களோடு உறவு பூண்டு, இவற்றின் துணை கொண்டு, படையுடன் இந்தியாவில் புகுந்து, சுதந்தரத்தை நிலை நாட்ட வேண்டும் என்று சுபாஷ் பாபுவுக்கு யோசனை உண்டு. அதற்கு முன்னதாகவே ருஷ்யாவின் துணையை நாடி அடைந்து கருதிய

காரியத்தை நிறைவேற்ற வேண்டும் என்று அவர் எண்ணியிருந்தார்.

அதுபற்றி அவர் ருஷ்யாவுக்கு அறிமுகமான ஒரு கோஷ்டியுடன் தொடர்பு கொண்டார். அக் கோஷ்டியாரும் அவரை மாயமாக இந்தியாவிலிருந்து வெளியேற்றவும், அவரை ருஷ்யாவில் கொண்டு சேர்க்கவும், அரிய ஏற்பாடுகளையெல்லாம் செய்து வந்தனர். அவரும் அதற்கு ஆயத்தமானார்.

## 20. மாய மறைவு

இந்தியாவைத் துறந்து போவதாயின், மாறு வேஷத்தில் செல்லல் வேண்டும். செயற்கை வேஷத்திலும் இயற்கை வேஷம் எளிதில் பயன் தரும். ஆனது பற்றி அவர் தாடி, மீசை வளர்க்க நினைத்தார். அதனைத் தம் உறவினரும் அறியா வண்ணம் ஓர் உபாயமும் கையாண்டார்:

" உடல் நிலை மிகவும் கெட்டுவிட்டது. ஆதலின், பூர்ண ஓய்வு கொள்ள வேண்டும். இது டாக்டர்களின் கட்டளையாம். என்னை எவரும் வந்து பார்க்கக்கூடாது. என் உறவினரும் எனது அறைக்குள் புகுதல் ஒண்ணாது. தினம் உணவு கொணரும் பணியாளனும் அறைக்கு வெளியேயுள்ள மேஜையில் உணவை வைத்துவிட்டு, யாதொரு சந்தடியுமின்றிப் போய்விடுதல் வேண்டும்."

அங்ஙனமே காரியம் நடந்து வருகையில், தாடியும் மீசையும் அழகாக அவருக்கு வளர்ந்துவிட்டன. '1941-ஆம் வருடம், ஜனவரி மாதம், 15-ஆந்

தேதி இரவு 8 மணிக்கு அவர் முகம்மதிய **மௌல்வி**யைப் போல உடை கொண்டார். உடனே வீட்டை விட்டு வெளிக் கிளம்பினார். வாசலிலே ஒரு மோட்டார்வண்டி காத்து நின்றது. அதில் ஏறி அமர்ந்து, கல்கத்தாவிலிருந்து நாற்பது மைல் தூரத்திலுள்ள ஒரு ரயிலடி சேர்ந்தார். போவது யார் என்பதை எவரும் கவனிக்கவில்லை.

அந்த ரயிலடியிலே புகை வண்டியில் அமர்ந்து, **பிஷாவர்** நகருக்கு அவர் பிரயாணமானார். அப்போது அவர் கொண்ட பெயர் **ஜெயதீன்.** 17-ஆம் தேதி இரவு 9 மணிக்கு அவர் பிஷாவர் நகரம் சேர்ந்தார். அங்கும் ரயிலடியில் அவருக்கென ஒரு மோட்டார் வண்டி தயாராய் இருந்தது. அதில் ஏறி உட்கார்ந்து குறித்த இடம் குறுகினார். இரண்டு நாள் அவர் அந் நகரில் தங்கியிருந்தார்.

19-ஆம் தேதி அவர் ஒரு பட்டாணியனைப் போல ஆடை பூண்டார். உடனே ஆப்கானிஸ்தானத்தின் தலைநகரான **காபூலை** நோக்கினார். அவருடன் துணையாகச் சென்றவன் **ரஹ்மத்கான்** என்றவன் தவிர, இரண்டு பட்டாணியர் ஆயுத பாணிகளாக உடன் சென்றனர். மோட்டார் வண்டியோ வழக்கமான பாதையில் செல்லாமல், வேறு வழியில் சென்றது ; ஒரு கிராமத்தை நண்ணியது.

அக்கிராமத்துடன் மோட்டார் பாதை முடிந்து விட்டது. அவர் அன்றிரவு அங்கே தங்கினார். மறு நாள் கால் நடையாக அவர் புறப்பட்டார். துணைவனும் காவலாளரும் உடன் சென்றனர். மறுநாள் மாலையில் இந்தியாவின் எல்லையை அவர் கடந்து விட்டார். அதற்கப்பால் எல்லைப்புற ஜாதியினர்,

வசித்து வந்தனர். அங்குள்ள ஒரு மசூதியே இரவில் அவருக்கு இருப்பிடமாயிற்று.

அம்மசூதியின் பீர் என்னும் அதிகாரி, அவருக்கு வேண்டிய வசதி அனைத்தும் செய்து வைத்திருந்தார். கரடு முரடான பாதையில் நடந்து வந்த களைப்பினால், அவர் அயர்ந்து தூங்கினர். மறுநாள் காலை அவர் அயல் கிராமம் சேர்ந்தார். ஆப்கன் அரசினால் குட்டியரசர் என மதிக்கப்பட்ட ஒருவர் நம் சுபாஷ் பாபுவுக்கு உதவிகளையெல்லாம் செய்தார்.

அச்சிற்றரசர் ஓர் அறிமுகக் கடிதமும் அவருக்கு அளித்தார். வழியிலே அக்கடிதத்தைக் கண்ட பலரும் சுபாஷ் பாபுவுக்கு வேண்டிய நன்மையெல்லாம் தேடிக் கொடுத்தனர். குறுக்கே காபூல் நதி தென்பட்டது. அதனைத் தாண்டி அக்கரை சேர்ந்ததும், ஆப்கன் எல்லையை அவர் அடையலானர். கரடு முரடான வழியும் சிற்றரசரின் கடிதமும் அவருக்கு ஒரு துணை ஆயின. எவரும் அவருக்குத் தடை புரியவில்லை.

ஆப்கன் எல்லையில் காலடி வைத்ததும், மோட்டார் லாரி ஒன்றில் ஏறி, காபூல் நகரம் சேர்ந்தார். இரவு முழுவதும் அந்த லாரியில் பிரயாணம். மறுநாள் பட்கார் என்னும் இடம் சேர்ந்தார் சுபாஷ் பாபு. வழி நடப்போரின் பிரயாண அனுமதிச் சீட்டுகள் அங்கே சோதனை செய்யப்படும். 'காபூல் நகரை நோக்கிப் போவதின் கருத்து யாது?' என்று சோதனை அதிகாரிகள் வினவினர்.

அதற்கு ரஹ்மத்கான், "ஜெயதீன் என் மூத்த சகோதரர். இவருக்குக் காது கேளாது; வாயும் பேசாது. சாஹிசாகிபு என்னும் மசூதிக்கு யாத்திரை

நிமித்தம் இவரை அழைத்துச் செல்கின்றேன். நாங்கள் எல்லேப்புற மலேப் பிரதேசத்தில் வசிப்பவர்கள் !''

இவ்விதம் ரஹ்மத்கான் கூறிவிட்டு, அச் சிற்றரசர் தந்த கடிதத்தையும் அந்த அதிகாரிகளிடம் நீட்டினன். அது கண்டதும் அந்த அதிகாரிகள் மிக்க மரியாதை காட்டி, அவருக்குத் தேநீரும் கொடுத்து வழியனுப்பினர். மறுநாள் மாலே ரஹ்மத்கானும் ஜெயதீனும் காபூல் நகரம் சேர்ந்தனர். முதல் இரண்டு நாள் அவ்விருவரும் அங்குள்ள சத்திரத்தில் குகைபோல உள்ள ஓர் அறையில் தங்கியிருந்தனர்.

அப்போது ஆப்கன் இரகசியப் போலீஸ்காரன் அவர்களேச் சந்தேகித்து, வேண்டிய பணம் வாங்கிக்கொண்டு அவர்களே விட்டகன்றன். இனி அங்கிருத்தல் தகாதெனச் சுபாஷ் கருதி உத்தம சந்திரரின் மாளிகை சேர்ந்தார்.

## 21. மறைவுக்குப் பின்

சுபாஷ் பாபுவைக் காணவில்லே என்ற செய்தி கல்கத்தா நகரில் காற்றுப் போல எங்கும் பரவியது. அறுபது நாழிகையும் அவரைக் கண்காணித்து வந்த இரகசியப் போலீஸாருக்கு வெட்கம் ஒரு புறம், வியப்பு ஒரு புறம் வந்து சூழ்ந்தன. பொதுமக்களில் பலரும் பலவாறு பேசிக்கொண்டனர். சிலரோ, கவலேக்கு ஆளாயினர்.

' இங்குள்ள அரசியல் அவருக்குப் புளித்துவிட்டது. அரவிந்த கோஷைப்போல அவரும் தனியிடம் நாடிப் போய்விட்டார்,' என்றனர் சிலர். 'தனியே

தமது அறையில் யோகப் பயிற்சியில் மூழ்கியிருந்த சுபாஷ் பாபு, அதன் வலியைக்கொண்டு ஒருவரும் அறியாமல் வெளியே போய்விட்டார்!' என்றனர் வேறுசிலர். 'உலகத்தையே அவர் வெறுத்து இமய மலைக்குத் தவம் புரியச் சென்றுவிட்டார்,' என்றனர் வேறு சிலர். உலகம் பலவிதம் அல்லவா?

அதிகார வர்க்கத்தார் அவரை எவ்விடத்தும் ஆராய்ந்து தேட ஆட்களை விடுத்தனர். அவரது வீட்டைச் சுற்றியும் இரகசியப் பாதுகாவல் செய்தனர். அவர் உறவினர் பலரும் திகைப்பும் தவிப்பும் கொண்டு துடித்தனர். வாலிபரின் திலகம், ஆண்மையின் வடிவம், வீரத்தின் அவதாரம், ஏதோ அரும்பெருஞ்செயல் புரியவே அதிகாரிகளின் கண்ணில் மண்ணைத்தூவி, மறைந்திருத்தல் வேண்டும் என்றே எண்ணி நின்றனர்.

ஈதிங்ஙனமிருக்க, காபூல் நகரின் பிரபல வர்த்தகரும் இந்திய தேச பத்தருமான உத்தம சந்திரரின் வீட்டில் நெடுநாள் தாமதிக்கச் சுபாஷ் பாபு விரும்பவில்லை. தலைமீதுள்ள கடமையை ஆற்ற வேண்டி விரைந்து புறப்படவேண்டும் என்று அவர் பரபரப்புடன் இருந்தார்; காபூல் நகரிலுள்ள ருஷ்ய ஸ்தானீகரிடம் தொடர்பு கொள்ள முனைந்தார். இது கைகூடவில்லை. இத்தாலிய ஸ்தானீகருடன் தொடர்பு கொண்டும், நாள் பல செல்லுதல் கண்டு நிம்மதி கொள்ளவில்லை. எண்ணுதெல்லாம் எண்ண நேர்ந்தது.

காபூல் நகரை விட்டு, ருஷ்ய எல்லைக்குள் புகுந்து சிறையாதலும் மேலாம் என்றுகூட ஒரு சமயம் அவர் துணிந்தார். இதற்கிடையில், அந்நகரிலிருந்த ஒரு ஜெர்மன் வர்த்தகரின் உதவியை நாடியும்

அது உடனே பலன் அளிப்பதாகத் தோன்ற வில்லை. வீணே நாள் கழிகிறதே! இந்திய சுதந்தர முயற்சியில் பொழுதைக் கழிக்க வகை காண வில்லையே!' என்றுதான் அவர் மனம் புழுங்கி மறுகினர்.

மாதம் ஒன்று ஆன பின்பு, இத்தாலிய ஸ்தா னீகரிடமிருந்து 1941-ஆம் வருடம், மார்ச்சு மாதம், 16-ஆந் தேதி நல்ல பதில் ஒன்று வந்தது. 18-ஆந் தேதி கிளம்பிவிடலாம் என்பதே அச்செய்தியின் சாரம். 17-ஆந் தேதி மாலை அந்த ஸ்தானீகரின் மனைவியார் வந்து சுபாஷ் பாபுவின் பெட்டி படுக் கைகளை எடுத்துச் சென்றார். அன்று இரவு அவர் களது வீட்டிலேயே அவருக்கு உண்டி வழங்கி, உபசாரம் பலவும் செய்தனர்.

மார்ச்சு 18-ஆந் தேதி காலை சுபாஷ் பாபு ஜெர்மனியின் தலைநகரான **பேர்லி**னுக்குப் புறப் பட்டார். அவருடன் இரு ஜெர்மானியரும் ஓர் இத்தாலியரும் சென்றனர். அப்பிரயாணத்தில் **காரண்டைன்** என்று அவர் பெயர் பூண நேர்ந்தது. இத்தாலியரும் ஜெர்மானியரும் அவரைத் தம் தம் தேசத்துக்கே கொண்டு போக விரும்பி நின்றனர். அவர் ருஷ்ய எல்லை சேர்ந்ததும், ரஹ்மத்கான் இந்தியாவுக்குத் திரும்பிவிட்டார். அந்த ரஹ்மத் கானும் மாறு வேடமும் பெயரும் பூண்டவர். உண் மையில் அவர் ஓர் ஹிந்து.

மார்ச்சு 27-ஆந் தேதி சுபாஷ் **மாஸ்கோ** சேர்ந் தார்; மறு தினமே தமக்காகக் காத்து நின்ற விமானத்தில் பேர்லினுக்குப் புறப்பட்டார். பிற நாடுகளின் கையாளாகவோ, கைப்பொம்மையா கவோ இருக்கச் சுபாஷ் பாபுவின் உணர்ச்சி சிறி

தும் இடம் கொடாது. யுத்த சமயத்திலே இங்கிலாந்தை மடக்கி, அதன் பகை நாடுகளின் துணையால் இந்தியாவின் விடுதலையை அடைவதே அவரது துடிப்பாம் என்பதை மீண்டும் குறிப்பிடவேண்டும்.

சுபாஷ் பாபு பெர்லின் நகரம் சேர்ந்து பல நாட்கள் ஆகும் வரையில், அவரது நடமாட்டத்தை அதிக வல்லமை படைத்த ஆங்கில அரசும் அறியக் கூடவில்லை. ஜெர்மனியிலிருந்து வெளிவந்த ஒரு துண்டுப் பிரசுரத்தைப் பார்த்த பின்புதான் அந்த அரசுக்கு உண்மை புலப்பட்டது. உடனே ஓர் நடுக்கமும் எடுத்தது. அவரது ஜெர்மன் விஜயத்தை இந்தியரும் முதலில் நம்பவே இல்லை.

இதற்குள்ளாகக் கல்கத்தாவிலே சுபாஷ் பாபுவுக்குள்ள சொத்துச் சுதந்தரங்களை அதிகாரிகள் பறிமுதல் செய்தார்கள்; கண்ட இடத்தில் அவரைக் கைது செய்ய வேண்டும் என்று வாரண்டுகளும் பிறப்பித்தார்கள். அவர் சொத்துக்களை ஏலம் போட்டும் ஒருவரும் ஏலம் எடுக்க முன் வரவில்லை. அவர் பகை நாடுகளின் கையாள் ஆகிவிட்டார் என்று ஆங்கிலேயரின் பத்திரிகைகளும் ஆங்கில நிருபர்களும் அவதூறு கூறினும், அக்கூற்றை நம்பும் இந்தியரும் கிடைக்கவில்லை. 'சொன்னால் வெட்கம்; அழுதால் துக்கம்,' என்னும் வசனத்திற்கு அதிகார வர்க்கம் ஆளாயிற்று.

## 22. ஜெர்மனியில் சிறப்பு

'இந்தியாவின் சுதந்தர வீரர், இணையிலாத் தலைவர், நம் ஜெர்மனிக்கு விஜயம் செய்திருக்கிறார்!' என்று பெர்லின் நகரெங்கும் செய்தி

பறந்தது. அவரது முகதரிசனம் செய்து மகிழ ஜெர்மன் மக்கள் அனைவரும் ஆவல் மிகுந்தனர். அவரது வீரதீர நடவடிக்கை அனைத்தையும் முன்னமே ஜெர்மானியரில் பலரும் அறிந்திருந்தனர் அல்லவா?

தமது அந்தரங்கக் காரியதரிசியை அனுப்பி, சுபாஷ் பாபுவை ஹிட்லர் வரவழைத்தார். அப்போது ஜெர்மனியின் தனித் தலைவர்—சர்வாதிகாரி—ஹிட்லரே. மேலும், அச்சமயத்தில் அவரது ஜெர்மன் சேனைகள் நான்கு திக்கிலும் வெற்றி மேல் வெற்றி எய்தி வந்தன. ஹிட்லர் என்ற பெயரைக் கேட்டாலே, இங்கிலாந்தும் அமெரிக்காவும் அஞ்சி நின்ற சமயம் அது.

அத்தகைய ஹிட்லர் என்பார் நம் சுபாஷ் பாபுவுக்குச் சரியாசனம் கொடுத்தார்; தாம் பூண்டுள்ள '**பியூரார்**' என்னும் பட்டம் அளித்தார்; பியூரார் என்ருல், தனித்தலைவர் என்று பொருள்படும்; தவிர, '**எக்ஸலென்ஸி**' என்னும் விருதும் புரிந்து சூட்டினர்; இதர சிறப்புப் பலவும் செய்து மகிழ்ந்தார்.

இந்தியாவின் விடுதலைப் போரைக் குறித்து அம் மாபெருந்தலைவர்களிடையே பேச்சு நிகழ்ந்தது. தோழர் என்ற முறையில் தம்மாலான துணை பலவும் புரிவதாக ஹிட்லர் வாக்களித்தார். அப்பால், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய மூன்று தேசங்களுடன் சுபாஷ் பாபு ஓர் ஒப்பந்தம் கொண்டார். இந்தியாவிலிருந்து அன்னிய ஆட்சியை அகற்றுவதில் எல்லா உதவிகளையும் புரிவதாக அம்மூன்று தேசங்களும் மனமுவந்து வாக்களித்தன.

இந்தியாவின் சார்பாக அந்த ஒப்பந்தத்தில் சுபாஷ் பாபு கைச்சாத்து நாட்டினர். 'இந்தியாவை விடுவிக்கக் கிளம்பி வரும் சேனைகளிலே ஒன்று இந்தியாவின் மேற்குப் பக்கத்திலிருந்து டில்லியை நோக்கிப் போகும்; மற்றென்றோ, இந்தியாவின் வடகீழ் எல்லை வழியே புகுந்து, டில்லியை நோக்கும்.' இத்தகைய வாசகம் ஒன்று ஒப்பந்தத்தில் காணப்பட்டது.

சுபாஷுக்கு அங்கே விருந்துகள் பல நடந்தன. பெருந்தளபதிகள் அவரைப் பற்பல போர் முனைகளுக்கும் இட்டுச் சென்று காட்டினர்; போர் முறை, அதன் போக்கு, படை நிலை முதலியவற்றையும் விளக்கி உரைத்தனர். பண்பட்ட தளபதியே போலச் சுபாஷும் அவ்விவரங்களை உணர்ந்து நுணுக்கமான. கேள்விகள் கேட்க, அப் பெருந்தளபதிகள் வியந்து திகைக்க நேர்ந்தது.

பின்பு அவர் ஜெர்மனியிலுள்ள இந்தியரையும் கூட்டுவித்து, **இந்தியச் சுதந்தரச் சங்கம்** என்ற ஒன்றை நிறுவினர். ஆங்கிலேயருக்கு உதவிபுரியச் சென்று போர் முனையில் பிடிபட்டு, பெர்லினில் சிறைபட்டுக் கிடந்த இந்திய சிப்பாய்களைக்கொண்ட இந்திய சுதந்தரப் படை ஒன்றும் அவர் திரட்டினர். அப்படையில் ஏறக்குறைய நாலாயிரம் பேர் இருந்தனர். சுதந்தர இந்தியாவின் சார்பாக அப்படையினர் பிரான்ஸ் தேசத்திலுள்ள போர் முனைகளில் சமர் செய்தனர். அவர்களின் போர்த்திறங் கண்டு ஜெர்மன் தளகர்த்தர்கள் தகவுரை கூறியது ஒருபுறமிருக்கட்டும். ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரருமோ, ஈதென்ன இந்திய மாயப்படை என்று மறுகினர்.

பெர்லின் நகரிலே இருந்த காலையில் சுபாஷ் பாபு உலக நிலையையும், போரின் போக்கையும்

கூர்ந்து கவனித்து வந்தார்; அடிக்கடி இத்தாலிக்கும் சென்றார். அங்கும் அவருக்குச் சிறப்பெல்லாம் கிட்டின. 'அவரைத் தமது தேசத்தின் விருந்தினராகக் கொள்ளும் பாக்கியம் ஜெர்மனிக்கன்றோ கிடைத்தது! நமக்குக் கிடைக்கவில்லையே!' என்று இத்தாலியப் பிரமுகரில் பலரும் ஏங்கி வருந்தினர். ஜெர்மனியிலும் சரி, இத்தாலியிலும் சரி, சுபாஷின் நடையும் உடையும் நேர்மையும் உயர்வும் இந்தியாவின் புகழை மேலும் பெருக்கின. அவ்விரு தேச அதிகாரிகளும் அவருடன் பழகும் காலையில் இந்தியாவின் ஒப்பற்ற தலைவருடன்—வருங்கால சுதந்தர இந்தியாவின் தனித் தலைவருடன்—பழகுவதாகவே கருதி, மரியாதையுடன் நடந்துவந்தனர். இத்தாலிய மக்களும் அவரைக் காணும் போது ஆனந்த ஆரவாரம் செய்தனர்.

1941-ஆம் வருடம் மார்ச்சு மாதக் கடைசியில் பெர்லின் நகரம் சேர்ந்த சுபாஷ் பாபு, இரண்டு வருடத்துக்கு மேலாக அங்கே தங்கியிருந்தார். இதற்கிடையில் ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் போர் மூண்டு, மும்முரமாக நடைபெற்று வந்தது. ஆசியாவின் கிழக்கிலே ஜப்பான் தேசம் சீறியெழுந்து, ஆங்கிலேயரின் உயிர் நிலை போன்ற **சிங்கப்பூர்த்** துறைமுகத்தையும் மலாய்த் தீவுகளையும் **பர்மா** தேசத்தையும் ஒன்றன் பின் ஒன்றாகப் பிடித்துக்கொண்டு, எதிர் பாராத வெற்றி பெற்று வந்தது.

அங்கெல்லாம் ஆங்கிலேயர் தம்மிடம் சேவகம் செய்து வந்த இந்தியத் துருப்புகளை ஜப்பானியரிடம் காட்டிக் கொடுத்துவிட்டுத் தலை தப்பியது தம்பிரான் புண்ணியமென ஓடி வந்துகொண்டிருந்தனர். ஆதலால், அவ்விடங்களிலுள்ள இந்தியரின்—

அவர்களின் தொகை 30 லட்சம் இருக்கும்—சொத்துச் சுதந்தரங்கள் ஆபத்துக்கு உள்ளாயின. அது பற்றி அவர்கள் தங்களது பிற்கால வாழ்வினுக்கு வகை துறை தேட நேர்ந்தது.

## 23. முதல் தேசியச் சேனை

கிழக்காசியாவில் வெள்ளையரின் ஆதிக்கத்தை வேரோடு களைந்தெறிய வேண்டும் என்பதே ஜப்பானியரின் நோக்கமாம். இதற்கு அங்குள்ள இந்தியரின் ஆதரவு அவர்களுக்கு அவசியமாயிற்று. ஆதலினால், வெற்றி கொண்ட பிரதேசங்களில் வசித்து வந்த இந்தியரின் நல்லுறவிலும் நல்லெண்ணத்திலும் அவர்களது நாட்டம் குவிந்து கிடந்தது.

யுத்த சமயத்திலும் சரி, போர் முனையை விட்டு ஓடிய பொழுதும் சரி, இந்தியச் சிப்பாய்களைக் குறித்து ஆங்கிலேயர் எள்ளளவும் கவலை கொள்ளவில்லை. பல்லாயிரக்கணக்கான இந்திய வீரர் அதுபற்றி ஜப்பானியரிடம் சிக்கிக்கொள்ள நேர்ந்தது. மனம் புழுங்கி நின்ற அவர்களை நோக்கி, 'நீங்கள் ஆங்கிலேயருக்கு விரோதமாக, உங்களது தாய்நாட்டின் நலங்கருதி முயல்வதாயின் எங்களிடம் சிறைப்பட்டுக் கிடக்க அவசியம் இராது,' என்று ஜப்பானியத் தளபதி கூறினர்.

பின்னர் அப்பிரதேசங்களில் வசித்து வந்த இந்தியப் பெருமக்களையும் வரவழைத்து, "இந்தியாவின் விடுதலையை நாடியடைய இதுவே தருணம். நீங்கள் முனைந்து முயன்றால் நாங்கள் எங்களாலான உதவி புரிவோம்," என்றும் அந்த ஜப்பானியத்

தளபதி வற்புறுத்தினர். தம்மவரது சொத்துச் சுதந்தரங்களைக் காக்கக் கருதிய அப்பெருமக்கள், அதுவே தக்க சமயமெனக்கொண்டு, 1942-ஆம் வருடம், மார்ச்சு மாதம், 9, 10 தேதிகளில் சிங்கப்பூரில் கூடினர்; ஜப்பானியரின் நல்லுறவை எதிர்பார்த்து, அதன் தலைநகரான **டோக்கியோ**வுக்கு ஒரு தூது அனுப்பவும் தீர்மானித்தனர்.

அதே மார்ச்சு மாதக் கடைசியில் டோக்கியோ நகரிலே இந்தியரின் மகாநாடு ஒன்று நடைபெற்றது. நெடுநாளாக அந்நகரிலேயே வசித்து இந்தியச் சுதந்தரத்துக்காகப் பல வழியிலும் உழைத்து வந்த **ராஷ்பிஹாரி போஸ்** என்பார் அதற்குத் தலைமை தாங்கினர். கிழக்காசியாவின் பற்பல பாகங்களிலிருந்தும் இந்தியப் பிரதிநிதிகள் சென்று, அம்மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

“இந்தியாவின் விடுதலையைக் கருதி, கிழக்காசியாவில் வசிக்கும் இந்தியமக்கள் ஒரு சுதந்தர இயக்கம் துவக்க இதுவே ஏற்ற சமயம்! அந்நியரால் யாதொரு விதமான தலையீடும் இல்லாத பரிபூர்ண சுதந்தரமே இயக்கத்தின் இலட்சியமாம்! இந்தியாவின்மீது படையெடுத்துச் செல்லவும் வேண்டும்! அப்படை இந்தியரின் அதிகாரத்துக்கே உட்பட்டிருக்கும்.”

மேலே கண்டவாறு அம் மகாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேறின. அவ்வாறே காரியம் நடத்துவது பற்றி முடிவு கட்ட ஜூன் மாதத்திலே இந்தியரின் மற்றொரு மகாநாடு சயாம் நாட்டிலுள்ள ‘பாங்காக்கு’ நகரில் நடந்தது. ஜப்பானியரிடம் சிக்கியுள்ள இந்தியச் சிப்பாய்களையும் பிறரையும் சேர்த்து, **இந்தியத் தேசீயச் சேனை**யொன்று நிறுவப்

பெற்றது. ஜெனரல் மோகன் சிங்கு அச்சேனையின் தலைவரானார்.

இந்தியச் சுதந்தரச் சங்கமும் இந்தியத் தேசியச் சேனையும் அவ்விதம் தோன்றி, சுதந்தரமாக வேலை செய்து வருதல் கண்டு, ஜப்பானிய தளபதி பொறுக்கவில்லை; அடிக்கடி தலையிடலானார். ஜெனரல் மோகன் சிங்கு மனம் பிணங்கினார். ராஷ் விகாரி போஸ் என்பாரோ, ஜப்பானியரை விரோதித்துக்கொள்ள விரும்பவில்லை. ஆதலின், அவர் வாளா இருந்தார். அந்நிலையில் மோகன் சிங்கை ஜப்பானியர் சிறை செய்துவிட்டனர்.

ஆதலின், சுதந்தரச்சங்கமும் தேசீயச் சேனையும் கலகலத்துப்போயின. சின்னாளில் தேசீயச் சேனை கலைபட்டுப் போயிற்று. போகவே, இந்திய மக்களுக்குள் கலக்கமும் கவலையும் உதிக்கலாயின. காலம் இடம் கருதி ஏற்ற கருமம் புரிய வேண்டுமென மீண்டும் இந்தியர் முயலாநின்றனர்; தக்க தலைவன் இல்லையே யென்றும் தவித்து நின்றனர்.

## 24. தலை காத்தல்

முத்தரின் மனம் மோனத்திலேயே குவிந்து கிடக்கும். சுபாஷின் மனமோ, இந்தியரின் விடுதலையையே நாடிக்கிடந்தது. பெர்லின் நகரில் இருந்தாலும், கிழக்காசியாவில் நடப்பன அனைத்தையும் அவர் கூர்ந்தறிந்து வந்தார். ராஷ் விஹாரி போஸின் தலைமையில் கிளைத்த சுதந்தர சங்கமும் சேனையும் தத்தளிக்கும் நிலை கண்டு அவர் தாளவில்லை; உடனே ஜப்பானுக்குப் புறப்பட்டார்.

அவருடன் அவர்க்கு அந்தரங்கச் சீடனாகிய கர்னல் ஹஸன், ஒரு ஜப்பானிய அதிகாரி, ஒரு ஜெர்மன் அதிகாரி இவர்கள் புறப்பட்டனர். எல்லாருமாக ஒரு ஜெர்மன் சப்மரீனில் அமர்ந்து பயணமாயினர். ஜப்பானுக்கு வரும் வழியில் உள்ள கடல்களில் எல்லாம் ஆங்கில அமெரிக்க யுத்தக் கப்பல்கள் எங்கும் நடமாடிக்கொண்டிருந்தன. புலியின் வாயில் புகுந்து புறப்படுவதேபோல இருந்தது அவரது பிரயாணம்.

1943-ஆம் வருடம், ஜூன் மாதம், அவர் டோக்கியோ சேர்ந்தார். எல்லாரும் அவ்வீர கேசரியை மனமார வரவேற்றனர். கிழக்காசியாவிலுள்ள இந்தியரின் நிலையை எடுத்துரைக்கச் சில பிரதிநிதிகளும் டோக்கியோவுக்கு வந்திருந்தனர். அங்கே பத்திரிகைகளுக்கு அவர் ஓர் அறிக்கை விடுத்தார். அதன் கருத்து யாதெனில், "இந்தியர் சுதந்தரம் எய்த வேண்டிய காலம் இதுவே. இதனைக் கைவிடின் இன்னும் நூறு வருடங்களுக்குக் கிடைப்பது அரிது. வறுமைப் போரின் எல்லையையும் காணுதல் வேண்டும். நமது உதிரத்தை வாரி இறைத்தால் அல்லாமல், சுதந்தரம் கைகூடுமோ? வாளுருவி நிற்கும் பகைவனை வாள்கொண்டு தாக்குதல் வேண்டும். வெறுஞ் சட்டமறுப்பு இயக்கம் செல்லாது," என்பது.

அவ்விதம் அறிக்கை செய்த பின் டோக்கியோ நகரில் ரேடியோவிலிருந்து உலகறிய அவர் பேசத்தொடங்கினர். சிங்கப்பூர் வீழ்ச்சி பர்மா பறிபோனது முதலியவற்றை அவர் குறிப்பிட்டார். "இந்தியாவிலிருந்தே ஆங்கில ஏகாதிபத்தியம் வளர்ந்ததனுல் அந்த இந்தியாவைக் கைவிட அவர்

கள் ஒரு நாளும் விரும்பார்கள். இந்தியாவிலிருந்து அவர்கள் மூட்டை முடிச்சுடன் வெளியேறினால் தான், ஆசியா மக்கள் இனிது வாழ முடியும்,'' என்றும் சுட்டிச் சொன்னார்.

ஆதலின், 'ஆங்கிலேயரை வெளியேற்ற ஒரு படை திரட்டப்போகிறேன். அதில் அனைவரும் தாராளமாக வந்து சேர்ந்து, சேவை செய்தல் வேண்டும். நம் பகைவரோ, ஆயுதவலி அனைத்தும் படைத்தோர்; அன்றியும், மிகக் கொடியவர். தங்களது தலை போகும் நிலையில் அவர்கள் எதை யும் செய்ய முற்படுவர். சட்ட மறுப்பு, நாசவேலை இவை கொண்டு அவர்களை அசைக்க முடியாது. சரிசமானமான ஆயுதவலி கொண்டே அவர்களை வாட்டி விரட்ட வேண்டும். ஆதலின், ஒவ்வோர் இந்தியனும் போர் முனையில் குதிக்க வேண்டும். சுதந்தரத் தாகமுள்ள இந்தியரின் உதிரம் பெருக் கெடுத்துப் பெருவெள்ளமாகப் புரளுகையில், இந்தியா சுதந்தரம் அடைந்தே தீரும்,' என்றும் அவர் பேசியுள்ளார்.

அப்பால் அவர் ஜூலை மாதம், 2-ஆம் தேதி சிங்கப்பூர் சேர்ந்தார். சுதந்தரச் சூரியனைக் கண்டதுபோலச் சிங்கப்பூர் வாசிகள் அனைவரும்—ஆண் பெண் குழந்தை அடங்கலாக—அவரை வரவேற்க ஆயத்தமாயினர். அன்று அந்நகரில் வேறு அலுவல் எதுவும் நடைபெறவில்லை. மலாய் மக்கள், சீனர், ஜப்பானியர் முதலியோரும் மகிழ்ந்து வந்தனர்.

பிரமாண்டமான அக்கூட்டத்தில், 'ஜப்பானியரை நம்பலாமா?'' என்று ஒரு கேள்வி பிறந்தது. அதற்கு அவர் கொடுத்த பதில் இது: ''ஜப்பானி

யரிடம் ஏமாறாமல் பார்த்துக்கொள்ள எனக்கு மூளை யுண்டு. அவர்கள் நம்மை வஞ்சிக்க இயலாது. நாம் ஒன்று படாமலும், சுதந்தரப் போரை நடத்த ஒரு படை திரட்டாமலும் இருந்தால், அவர்கள் நம்மை வஞ்சித்தல் சுலபம்.

"நாம் எப்போதும் விழிப்புடன் இருந்தால், ஆங்கில ஆதிக்க ஆசைக்காரர், அத்தகைய ஆசை கொண்ட ஜப்பானியர், நம்மிடையே இருக்கும் துரோகியர் ஆகிய பலரையும் நாம் புறம் காண முடியும். எல்லாரும் தியாகிகளாகத் துலங்க வேண் டும்; ஊக்கமுள்ள உழைப்பாளராதல் வேண்டும். வேண்டிய வேலை எவ்வளவோ உளது. செய்யும் பொறுப்பு உங்களது. அதனை உணர்த்தும் பொறுப்பு எனது."

அவ்வார்த்தைகளைக் கேட்டதும் பலரும் மகிழ் வுற்றனர். மறுநாள், முதல் இந்திய தேசீயச் சேனையின் தலைவர்களைச் சுபாஷ் சந்தித்தார். அதற்கு மறுதினம் மற்றொரு பெருங்கூட்டத்தில் அவர் சொல்மாரி பொழிந்தார். சுதந்தரச் சேனை யின் வீரரை நோக்கி அவர் கூறியது:

"பாரத மாதாவின் சுதந்தரத்துக்காகப் போராடும் சேனை திரண்டுவிட்டது. எனது வாழ்க் கையில் இதுவே நன்னாள். இந்தியத் தேசீயச் சேனை நமக்குத் தலைகொடுக்கும்; நமது மானத் தைக் காக்கும்; இந்தியரனைவருக்கும் மகிழ்வை ஊட்டும். டில்லிமாநகரை அடைதலே அச்சேனை யின் குறிக்கோளாம்.

"சுதந்தரச் சேனை வீரர்களே, டில்லிமாநக ரிலே, நமது தேசீயக்கொடி பறக்க வேண்டும். டில்லி சேரும் வரையில் நமது கொதிப்புத் தீராது.

நாம் இரத்தம் சிந்துதலும் தவறாது. சுதந்தரப் போரின் முடிவிலே நம்மில் எத்தனை பேர் உயிருடன் இருப்பவர் என்று என்னாலும் எவராலும் இயம்ப ஒண்ணாது. இறுதியிலே நமக்குத்தான் வெற்றி என்பது உறுதி. ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கும் டில்லியே சவக் குழியாகும். அங்கே வெற்றிக்கொடி நாட்டி வீர அணி வகுப்பு நடத்தும் வரையில் மானமுள்ள இந்தியரின் கடமை முற்றுப் பெறாது.''

இவ்வாறெல்லாம் சுபாஷ் பாபு பேசி வருகையில் கூட்டத்தினரிடையே சுதந்தர ஆவேசம் பொங்கி எழுந்தது. 'டில்லி செல்வோம்! அங்கே கொடி போடுவோம்!' என்னும் உரைகள் வானை எட்டின. 'படைச் செலவுக்கு வேண்டிய அனைத்தையும் பரிந்து தருவோம்!' என்னும் வாக்குகளும் செவியிற்பட்டன.

'சுபாஷ் பாபு வந்து மானம் காத்தார்; தலை கொடுத்தார்; தலையும் காத்தார்,' என்று ஆனந்தத்துடன் பேசிக்கொண்டே மக்களனைவரும் தம் தம் வீடு சேர்ந்தனர். ஜூலை 6-ஆம் தேதி இரண்டாவது இந்தியத் தேசீயச் சேனையின் அணி வகுப்பு நடைபெற்றது. அன்று நூறாயிரத்துக்கு மேற்பட்ட ஜனங்கள் கூடியிருந்தனர். ஜப்பானது பிரதம மந்திரி ஜெனரல் டோஜோ என்பவர் மனமுவந்து வந்து அந்த அணி வகுப்பைப் பார்வையிட்டுப் பரவசம் அடைந்தார். டோஜோவும் சுபாஷும் சரி சமானமான புருஷரே போலத் தோன்றினர்.

# 25. சேனையின் சிறப்பியல்பு

ஆங்கிலச் சேனையில் சேர்ந்து சேவகம் செய்து, ஜப்பானியரிடம் சிறைப்பட்ட இந்தியச் சிப்பாய்களின் தொகை 40,000 என்பர் சிலர்; 90,000 என்பர் வேறு சிலர். முதலில் அத்தனை சிப்பாய்களும் தேசீயச் சேனையில் சேர்ந்துகொண்டனர். பெருஞ்சேனை தேவையென்று சுபாஷ் சொன்னவுடனே, இலட்சக் கணக்கில் மக்கள் வந்து குவிந்தனர்.

அவ்விதம் வந்து குவிந்த மக்களின் தொகை ஏழரை இலட்சம் ஆகும். புதியராக வந்த அனைவருக்கும் பயிற்சியளிக்கவும் ஆயுதம் கொடுக்கவும் ஆரம்பத்தில் வசதி போதவில்லை. ஆனாலும், சுபாஷ் பாபு பெருமுயற்சி செய்து, ஆயுதங்கள் சேகரித்து, அனைவருக்கும் பயிற்சி அளிக்க வகை செய்தார்; சில மாதங்களுக்குள்ளாக இரண்டு இலட்சம் வீரரைத் திரட்டி அணி வகுப்புச் செய்தார்.

சிங்கப்பூர் மலாய் நாடு தாய்லாந்து பர்மா இந்த இடங்களில் தேசீயச் சேனையின் பட்டாளங்களை நிறுத்தி, ஆங்காங்குள்ள இந்திய மக்களின் சொத்துச் சுதந்தரங்களைக் காக்கவும் ஜப்பானியத் துருப்புகளால் கொடுமை நேராதவாறும் பற்பல ஏற்பாடுகள் செய்தார். ஆயுதங்கள் கிடைக்கக் கிடைக்க அத்தேசீயச் சேனையின் தொகையும் பெருத்து வளர்ந்துகொண்டே வந்தது.

நெருக்கடியான சமயத்தில் இங்கிலாந்தைத் தாக்கி இந்தியச் சுதந்தரத்தை அடைய வேண்டும் என்று சுபாஷ் பாபு சுட்டிச் சொன்ன காலையில் மகாத்துமா காந்தி, மௌலானா ஆஸாது, பண்டித

நேரு முதலியோர் எதிரிடையாய் இருந்தனர்; ராஷ்டிரபதி பதவியிலிருந்து சுபாஷை விலக்கவும், உபாயமெல்லாம் கையாண்டனர். ஆனாலும், அவர்களின்மீது அவர் பகைமை காட்டவில்லை; அவர்களின் தேசப்பற்றையும் மறக்கவில்லை.

உதாரணமாக, தேசீயச் சேனை திரண்டவுடன் அதன் பலவாறான படை வகுப்புக்களுக்கும் தனித் தனி பெயர் கொடுக்க நேர்ந்தது. அப்போது **மகாத்துமா படை, ஆஸாது படை, நேரு படை** என்றெல்லாம் அவர் பெயர் கொடுத்தார். அச்சேனைக்கு உரிய பயிற்சியை இந்தியரே அளித்தனர் என்பது ஒருபுறமிருக்க, இந்தியத் தளகர்த்தரே அவற்றை நடத்தி வந்தனர். ஜப்பானியரின் தலையீடு என்னும் காற்றுச் சிறிதும் வீசவில்லை.

அச்சேனைக்கு நம் சுபாஷ் பாபுவே **சேனாதிபதி**யானார். பயிற்சி கொடுப்பது முதல் போர் நடத்துவது வரையில் உள்ள கடமையனைத்தும் அவரால் கவனிக்கப்பட்டு வந்தன. சேனா வீரரனைவரும் அவரையே கண்கண்ட தெய்வமெனக் கொண்டு நடந்து வந்தனர்.

அச்சேனையில் **ஜான்ஸி ராணிப்படை** என்னும் ஒரு பிரிவு ஏற்பட்டது. இப்படையினர் அனைவரும் இள மாதரேயாவர். ஆயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட மாதர் சேர்ந்திருந்தனர். இனி, **பாலர் படை** என்னும் ஒரு பிரிவும் அச்சேனையில் உண்டு. பன்னிரண்டு வயதிற்குமேல் பதினெட்டு வயதிற்குட்பட்ட வாலிபர் அப்படையில் ஆயிரத்துக்கு அதிகமாய் இருந்தனர்.

போர் முனையிலே தேசீயப் படை வகுப்பொன்றும் பிரிட்டிஷ் இந்தியப்படை வகுப்பொன்

றும் நேருக்கு நேரே சந்தித்த சமயம், "எங்கள் பக்கம் வந்து சேர்ந்து தாய் நாட்டின் விடுதலைக்குப் பாடுபடுங்கள்," என்னும் பெரிய விளம்பர அட்டை யொன்றை தேசீயப்படை வகுப்பு உயர்த்திக் காட்டியது.

அது கண்டதும், "நீங்கள் ஜப்பானியரின் கை யாட்கள்; உணவு கிட்டாமல் வருந்துகிறீர்கள். எங்கள் பக்கம் வந்து சேர்ந்தால், வயிறு நிரம்ப உணவு கிட்டும்," என்று பிரிட்டிஷ் இந்தியப் படை ஞர் பதில் கொடுத்தனர்.

"நாங்கள் ஜப்பானியரின் கையாட்கள் அல்ல. அடிமைகளும் ஆகோம்; சுபாஷ் பாபுவின் படை வீரர். கோதுமை மாவையும் நெய்யையும் கலந்து புசித்து, உங்களைப்போல அடிமைகளாய் இருப்ப திலும், சுதந்தர வீரராய் நின்று வயிறு காய்ந்து புல்லைப் புசித்தலும் புனிதம் உடையதாம்," என்று தேசீயப் படைஞர் பதில் அளித்தனர்.

தேசீயச் சேனையிடம் விமானங்கள் இல்லை; மோட்டார் லாரிகள் இல்லை. தளகர்த்தரிடமும் மோட்டார் கார் இல்லை. படைஞரோ, எதையும் தமது தோளிலேயே சுமந்து செல்ல நேர்ந்தது. எதிரிகளிடமோ, அவ்வகையான வசதிக்கு ஒரு குறைவும் இல்லை.

இங்கிலேயிலும் தேசீயப் படைஞர் சளைக்க வில்லை. போர் முனையிலே வீராவேசத்துடன் சண்டை செய்து பகைவரிடமிருந்தும் புகழுரையே பெற்றனர். இவ்வளவுக்கும் சுபாஷ் பாபுவின் சீரிய வீரிய உரைகளே காரணம்; படைஞரின் தேசப் பற்றும் ஒரு காரணமாம் என்பதை மறப்பதற் கில்லை. மனவலி மகிமையுடையதன்றோ?

தேசீயப்படைஞர் இலட்சக்கணக்கு அல்லவா? அவர்கள் பலவாருன ஜாதி மதம் வகுப்பு வர்ணத்தைச் சேர்ந்தவர்கள். "எல்லாரும் ஓர் இனம். எல்லாரும் ஓர் குலம். எல்லாரும் ஓர் நிறை. எல்லாரும் இந்திய மக்கள். எல்லாரும் இனிய சோதரர்," என்னும் உயரிய உணர்ச்சியும் ஒழுக்கமுமே அவர்களிடம் மேம்பட்டு விளங்கின. பொதுவான ஒரு சமயலறையில் தயாரான உணவையே எல்லாரும் பங்கிட்டுக்கொண்டு இனிது புசித்தனர்.

விதியின்றி அப்படையினர் யுத்த சன்னத்தராய் வடகீழ் எல்லையின் வழியே இந்திய மண்ணில் காலடி வைத்ததும், " அன்னை பாரதியே, நாங்கள் உன் அருமைக் குழந்தைகள். சுதந்தர மக்கள் ஆகும் வரையில் சோம்பிக் கிடவோம். உனது அடிமை விலங்கை உடைத்தெறியவே வந்துள்ளோம். இது உறுதி. எனவே, உனது ஆசி எங்களுக்குத் தேவை," என்று கூறி எல்லாருமாக அப் பூமியில் வீழ்ந்து அங்கமெல்லாம் மண்பட வணங்கினர்; பின்பே சண்டையில் புகுந்தனர்.

அப்படையினர் ஒருவரை ஒருவர் சந்திக்கும் பொழுதும், அணிவகுப்புக்கு ஆயத்தமாகும் பொழுதும், ஆயுதங்களைக் கைதனில் ஏந்தும் பொழுதும், சேனதிபதியைக் காணும் பொழுதும், ' ஜெய் ஹிந்த் ' என்னும் வீர மொழியைச், சுதந்தர தாரகமான வாசகத்தை விளம்பி மகிழ்வர். நம் முதல் மந்திரியார் பண்டித ஜவாஹர்லால் நேரு தமது சொல் மாரியின் முடிவில் ' ஜெய் ஹிந்த் ' என்றே கூறுவதை வாசகர் கவனிக்கவேண்டும். காங்கிரஸின் கொடியே அவர்களின் கொடியாயிற்று. தாகூரின் தேசீய கீதமே அவர்களின் வீர கீதமாயிற்று.

# 26. ஜான்ஸி ராணிப்படை

இந்தியத் தேசீயச் சேனையில் ஒரு பிரிவு ஜான்ஸி ராணிப் படையாம். ஜான்ஸி நாட்டின் தலைவியான லட்சுமி பாய் என்பாள், 1857-ஆம் ஆண்டிலே ஆங்கிலேயருடன் அரும்போர் விளைத்தாள்; ஆங்கில தளகர்த்தர் அனைவரையும் அலற வைத்தாள்; ஆங்கில வீரரில் பலரையும் வெட்டிச் சாய்த்தாள்; முடிவிலே வேறு விதியில்லாமல் தனது வாளுக்குத் தானே இரையானாள்.

அத்தகைய வீர ராணியின் பெயரால் ஒரு படைவகுப்பை நிறுவினார் சுபாஷ் பாபு. மாதர் என்போர் சத்தியின் வடிவம். 'சத்தியின்றேல், சிவம் இல்லை,' என்பர் பெரியோர். மாதரின் கூட்டுறவு இன்றி ஆடவர் எதனையும் சாதிக்க இயலாது. ஆதிமுதல் பற்பலத் துறைகளிலும் மாதர் திறம்பட சேவை செய்துள்ளனர்; அரசை ஆண்டு உள்ளனர்; அரும்போர் புரிந்துள்ளனர்.

இவற்றையெல்லாம் நினைவு ஊட்டவே சிங்கப்பூரில் தோன்றிய இந்தியச் சுதந்தரச் சங்கத்தில் மாதர் கிளை ஒன்று ஏற்பட்டது. அக்கிளையின் ஆதரவில் நடந்த கூட்டத்திலேதான் அப்படை உதித்தது. மாதரில் பலரும் மிகுந்த உற்சாகத்துடன் அப்படையில் வந்து சேர்ந்தனர். சேலை கட்டும் மாதரும் சீறியெழுவர். வளையல் பூணும் மாதரும் வாள் தாங்கிப் போர் புரிவர். இதனை உணர்த்துவதே அம்மாதரின் நோக்கமாம்.

ஏழை, பணக்காரர், இளமாதர், கிழவியர், மணம் ஆனோர், மணமாகாதோர் ஆகிய பலரும் வந்து குவியவே, அவர்களுக்குப் பயிற்சியளிக்க

, தனி இடம் அமைந்தது. மூன்று மாத காலம் புத்தப்பயிற்சி, ராணுவப்பயிற்சி அளிக்கப்பட்டன. மிடுக்கான விதிகளுக்கு உட்பட்டு அவர்கள் நடக்க நேர்ந்தது. கால் சட்டையும் ஷர்ட்டும் அணிந்து பயிற்சி முகாம்களில் அவர்கள் தங்கியிருந்தார்கள்.

இலகுவில் அனைவரும் பயிற்சி பெற்றனர். ஹிந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள் முதலிய பல வகுப்பான மாதரும் ஒருமையுடன் கூடியிருந்தனர். கைத்துப்பாக்கி, சுழல் துப்பாக்கி, இயந்திரத் துப்பாக்கி, குத்தீட்டி, எறிகுண்டு முதலிய ஆயுதங்களை அவர்கள் திறம்படக் கையாண்டனர். முன்னேறித் தாக்குதல், தற்காப்பில் நிற்றல், வேவு பார்த்து வருதல், காவல் வேலை செய்தல், காடுகளில் மறைந்து சண்டை செய்தல் முதலியவற்றிலும் அப்படையினர் பயிற்சி பெற்றனர்.

அப்படையில் சேர்ந்த மாதரின் தொகை ஆயிரத்து ஐந்நூறுக்கும் அதிகமே. சென்னை நகரவாசியான லட்சுமி சுவாமிநாதன் என்னும் மாதே அப்பட்டாளத்தின் தலைவி. அவர்களில் தாதி வேலைக்கும் மருத்துவ வேலைக்குமாக ஐந்நூறுபேர் போக, பாக்கி ஆயிரவர் அசல் வீரமாதராயினர். ஆரம்பத்திலே அவர்களைப் போர்முனைக்கு அனுப்பச் சுபாஷ் பாபு கருதவில்லை. அதுபற்றி அவர்களுக்கு ஏமாற்றம் உண்டாயிற்று. உண்டாகவே, பிரதம சேனாதிபதிக்கு அவர்கள் விடுத்த கடிதத்தின் கருத்து இவ்வாறும்:

"எங்கள் ஜான்ஸி ராணிப்படையைத் திரட்டுகையில், போர்முனை சென்று சேவகம் புரிய எங்களுக்கு வசதி கிட்டும் என்று உறுதி கூறினீர்கள். எங்களது உயிரையும் சுதந்தரத் தீயில் ஆகுதி

செய்ய ஒப்பியே நாங்கள் இப்படையில் புகுந்தோம். எனவே, எங்களை யுத்தமுனைக்கு அனுப்பாதது ஏன்? எங்களது மனவுறுதியில் உங்களுக்கு ஐயம் பிறக்கக் காரணம் இல்லையே! எங்களது மனவலிக்கு உதாரணமாக எங்களது உடம்பிலுள்ள உதிரத்தையே மையாகக்கொண்டு இம்மனுவை எழுதியுள்ளோம்.''

அக்கடிதம் கண்டதும் சுபாஷ் பாபு திடுக்கிட்டார்; சற்றேவருந்தினார்; 'விரைவில் போர் முனையில் பாய ஆணை வரும்,' என்று பதில் விடுத்தார். அவ்வாறே அவர்கள் போர் முனைக்கு அனுப்பப்பெற்றனர். போர் முனையின் நடுவே ஆகாய விமானத்திலிருந்து வீரரைக் கீழே இறக்கி எதிரிகளைத் திடீரென்று தாக்குதல் யுத்த தந்திரத்தில் ஒன்றும்.

தேசீயப் படையினர் தங்கியிருந்த இடத்தைத் தாக்கும்பொருட்டு ஆகாய விமானத்திலிருந்து பிரிட்டிஷார் பல போர் வீரர்களை இறக்கினர். அவ்வீரர் ஒவ்வொருவரிடமும் வேண்டிய ஆயுதங்கள் இருந்தன. அத்தகைய வீரர் அனைவரையும் ஜான்ஸி ராணிப்படையினர் சூழ்ந்துகொண்டு அழித்துப் போட்டனர்.

பர்மாத் தேசத்திலுள்ள மோல்மீன் என்னும் நகருக்கு அருகே பிரிட்டிஷ் வீரர் பிரமாதமாக முன்னேறி வந்தனர். ஆங்கிருந்த தேசீயப் படைஞரைத் தாக்கி அழிப்பதே பிரிட்டிஷ் வீரரின் நோக்கமாம். அப்போது முன்னணியிலே ஜான்ஸி ராணிப்படையினர் இருந்தனர். பகைவரைக் கண்டதும் வெகுண்டெழுந்து கடும்போர் புரிந்தனர்.

முனைந்து முனைந்து முயன்றும் பிரிட்டிஷ் வீரரால் முன்னேற முடியவில்லை. பதினாறு மணி

நேரம் பிரிட்டிஷார் போரிட்டு மறிவுண்டு கிடந்தனர். முடிவிலே அவ்வீர மாதர் பின் வாங்க நேர்ந்தது. பிரிட்டிஷார் பெருமிதத் துணைவலி பெற்றதே அதற்குக் காரணமாம். அவ்வீர மாதரின் வீரம் கண்டு பிரிட்டிஷ் வீரர் மெச்சிப் பேசினர். வீரத்திற்கும் அழிவுண்டோ?

இவ்விதம் ஜான்ஸி ராணிப்படையினர் போர் முகத்தே காட்டிய வீரச்செயல்கள் எத்தனையோ உண்டு. இங்கே விரித்துரைக்க இடம் ஏது?

## 27. சுதந்தர அரசு

முப்பது லட்சம் கிழக்கு ஆசிய இந்திய மக்கள் திரண்டு நிற்பதை உலகம் அறிய வேண்டிச் சுபாஷ் பாபு ஓர் உபாயத்தை மேற்கொண்டார்: தமது தனிப் பொறுப்பில் மட்டும் காரியத்தை நடத்த அவர் விரும்பவில்லை. அம்மக்களுக்கும் பொறுப்பை அளிக்க எண்ணியே **இந்தியச் சுதந்தர அரசு** ஒன்றை அவர் அங்கே ஏற்படுத்தினர். முன்னதாகவே அம்மக்களின் பிரதிநிதிகளுடன் கலந்து பேசியே அந்த அரசு ஓர் உருக்கொண்டது.

சுபாஷ் பாபு அந்த அரசின் பிரதம மந்திரி, யுத்த மந்திரி, அயல் நாட்டு மந்திரி, போக்கு வரவு மந்திரி முதலிய பதவிகளை ஏற்றார். பொக்கிஷ மந்திரியாகக் கர்னல் சட்டர்ஜீ அமர்ந்தார். மாதர் இலாக்காவுக்கு லட்சுமி சுவாமிநாதன் மந்திரியாக நியமனம் பெற்றார். ஸ்ரீ எஸ். ஏ. ஐயர் என்பார் விளம்பரம், பிரசாரம் ஆகிய இலாக்காக்களின் அமைச்சரானர். தலைமை ஆலோசகராக ராஷ் விஹாரி போஸ் அமரலானர்.

1943-ஆம் வருடம் அக்டோபரில் அந்த அரசு முளைத்தது. தேசியச் சேனையின் துணையும் ஜப்பான் ஜெர்மனியின் ஆதரவும் கொண்டு இந்தியாவில் புகுந்து அதனை ஆங்கில ஆதிக்கத்தினின்று விடுவித்தலே அந்த அரசின் முதல் நோக்கமாம். அந்நோக்கத்தினைத் தழுவி இங்கிலாந்து அமெரிக்கா இவற்றின்மீது யுத்த அறிக்கை இட்டது. ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகிய தேசங்கள் அந்த அரசை ஒப்புக்கொண்டன. அயர்லாந்தின் தலைவரான டி'வேலரா என்பார் ஆசிச் செய்தி ஒன்று அனுப்பினார்.

இங்கிலாந்து அமெரிக்கா இவற்றின்மீது யுத்த அறிக்கை இட்டதை அவர் ஒரு பொதுக் கூட்டத்தில் அறிவித்தார். உடனே அங்கிருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் தம் இரு கைகளையும் கூப்பி உயரத்தூக்கி, 'ஜெய்ஹிந்த்' என்று ஆனந்த ஆரவாரம் செய்தனர். தேசீயப் படைஞரும் தமது பட்டாக்கத்தியை உருவி நீட்டி, "இந்த உடைவாள் வீரம் விளைக்கும்!" என்றனர்.

அந்த அரசின் காரியாலயம் ஆதியிலே சிங்கப்பூரில் அமைந்தது; அப்பால், தற்காலிகமாக இரங்கூனுக்கு மாறியது. அந்த அரசில் 19 இலாக்காக்கள் அமைந்தன. பண்பட்ட பெருமக்கள் அந்த இலாக்காக்களை நிர்வகித்து வந்தனர். தான் பிடித்திருந்த **அந்தமான், நிகோபார்த் தீவுகளை** அந்த அரசுக்கு ஜப்பான் அளித்தது. அத்தீவுகள் அன்றும் இன்றும் இந்தியாவுக்கே சொந்தம்.

அரசின் காரியாலயம் உள்ள இரங்கூன் நகரிலே ஐம்பது சதுர மைல் உள்ள பூமியை அவர் விலைக்கு வாங்கினார். அப்பால் அந்தமான் தீவிற்கு

விஜயம் செய்து, அரசியல் கைதிகளின் சித்திர வதை ஸ்தலமாய் விளங்கிய அந்த இடத்தில் சுதந்தரக் கொடியைப் பறக்கவிட்டார். அந்த அரசுக்கு நிதிவேண்டுமே!

ஆதலின், அந்த அரசுக்கு அவசியமான தன சாலை (பாங்கு) ஒன்று அவர் ஏற்படுத்தினர். வெறுங் கைகொண்டு முழம் போடுவது எப்படி? இரங்கூன் கோடீசுவரரில் ஒருவர் உடனே ஐம்பது இலட்சம் ரூபாய் கொடுத்து உதவினர். அத்தனசாலை ஆஸாது ஹிந்து தனசாலை என வழங்கப்பட்டது.

1944-ஆம் வருடம் ஜுலை மாதத்திற்குள் ஒரு கோடியே அறுபது இலட்ச ரூபாய்கள் சேர்ந்தன. தங்கம், வெள்ளி, நகை, நட்டு முதலிய வகையில் சேர்ந்த தொகையும் ஏராளம். கையிருப்பில் ஏராள மான பணம் இருக்கவே, அந்த அரசே நாணயங் களை அச்சிட்டு வழங்கியது. கரன்ஸி நோட்டுகளை யும் அச்சடித்து வழங்கத் தவறவில்லை.

1945-ஆம் வருடம் ஜனவரி மாதத்தில் அத் தனசாலையின் மூலதனம் முப்பத்தைந்து கோடி ரூபாயாக உயர்ந்துவிட்டது. சுபாஷ் பாபு பொதுக் கூட்டங்களில் பேசும்போது அவருக்கு மாலைகள் சூட்டப் பெறும். கூட்டம் முடிந்ததும் ஒவ்வொரு மாலையும் ஏலத்தில் விடப்படும். அப்போது அவற்றுள் ஒவ்வொன்றும் ஆயிரம், பதினுயிரம், இலட்சம் என்று ஏலத்தில் போகும். ஒரு கூட்டத் திலே மாலை ஒன்று பன்னிரண்டு இலட்ச ரூபாய்க்கு ஏலம் போயிற்று.

அந்த அரசின் அமைப்பையும் சிறப்பையும் கண்டு ஒரு முஸ்லீம் தமக்குச் சொந்தமான நகை

நட்டு, பூமி, காணி எல்லாவற்றையும் அந்த அரசுக் களித்துவிட்டார். அந் நன்கொடையின் மதிப்பு ஒரு கோடி. இவ்விதம் எத்தனையோ பேர் அந்த அரசை ஆதரித்து நின்றனர்.

யுத்த நிலையை முன்னிட்டுப் பண வீக்கமும் விலை உயர்வும் மிதமிஞ்சி நின்ற காலத்தில் அங்கே பொருளாதாரக் குழப்பம் உண்டாயிற்று. அந்நிலையில் சுதந்தர அரசு முன் வந்து வேண்டுவாருக்கு அத் தனசாலையின் மூலம் பணம் கொடுத்து உதவிற்று. மேலும், உணவு, உடை இவற்றை மொத்தத்தில் வாங்கி, வாடும் மக்களுக்கு விநியோகம் செய்தது.

# 28. முனை முகத்தில்

**பா**ரத பூமியிலும் இரத்தக்களரி ஆகும் படியான போர் மூளவோ, போரை மூட்டவோ சுபாஷ் பாபுவுக்குச் சிறிதும் விருப்பம் இல்லை. பெருவாரியான படையுடன் இலங்கைத் தீவிலோ தமிழகத்திலோ இறங்கி அருஞ்சமர் செய்து இலகுவில் இந்தியாவை வசம் செய்ய வேண்டும் என்று ஜப்பானியர் துடிப்புடன் இருந்தனர். அதற்கான படைகளும் சண்டைக் கப்பல்களும் திரண்டன.

பகட்டிலும் பயத்திலும் காரியத்தைச் சாதிக்கப் பார்த்தல் போர் முறையின் உபாயங்களில் ஒன்றும். அவ்வாறே ஜப்பானியரின் உட்கருத்தை ரேடியோவின் மூலம் மறைமுகமாக நமது சுபாஷ் பாபு அறிவித்து, ஆங்கிலேயருக்குத் திகில் ஊட்டி வந்தார். ஆங்கிலேயரும் அதனை உணர்ந்து பரபரப்பும் பரம கவலையும் எய்தினர். இச்சந்தர்ப்

பத்திலே இந்தியாவின் கிழக்குக்கரையிலுள்ள துறைமுகங்கள் பலவும்—சென்னை நகரம் உட்பட—காலியானதைக் குறிப்பிடலாம்.

இங்கே மகாத்துமா காந்தியும், "வெள்ளையரே, வெளியேறுக!" என்று போர் முரசு கொட்டியும், செயலாற்றுதல் அல்லது செத்து மடிதல் என்று பாரத மக்கள் பதைப்புடன் எழுந்தும் இந்தியாவுக்குச் சுதந்தரமளிப்பதில் ஆங்கிலேயர் அதிக அக்கறை காட்டவில்லை. ஆதலினால், 'முனை முகத்தில் இறங்கி அச்சுறுத்துவோம்!' என்று சுபாஷ் பாபு முடிவு கட்டினார்.

அதற்கு முன்னதாகவே இந்தியத் தேசியப் படைஞர் பற்பல போர் முனைகளில் ஜப்பானியருடன் தோளோடு தோள் கலந்து சண்டை செய்து வந்தனர். முடிவில் விதியில்லாமல் போகவே, அப்படைஞரை அவர் இந்தியாவின்மீது ஏவ நினைத்தார். அதுபற்றி 1944-ஆம் வருடம் ஜனவரி மாதம் படையெடுப்புத் திட்டத்தைக் குறித்து அப்படைஞரின் பிரதம தளகர்த்தரான ஷா நவாஸ்கான் என்பாருடனும் ஜப்பானிய தளபதியுடனும் கலந்து ஆலோசனை செய்தார்.

இந்தியாவின் வடகீழ் எல்லை வழியே மார்ச்சு 18-ஆந்தேதி தேசியப்படைகள் இந்திய மண்ணில் காலடி வைத்தன. வைத்ததும் அப்படைஞர் பத்தி விசுவாசத்துடன் பாரதத் தாயைத் தொழுது முன்னேறினர். நாகமலைப் பிரதேசத்தின் தலைநகரான **கோஹிமா**, மணிபுர ஸமஸ்தானத்தின் தலைநகரான **இம்பால்** இவற்றைக் குறிக்கொண்டு அப்படைஞர் பாய்ந்தனர்.

சுருங்கச் சொன்னால் பிரிட்டிஷ் இந்தியப் படைகள் சுபாஷ் படையின் முன்னே ஆற்றாது போயின ; பல இடங்களில் பின் வாங்கி ஓடின. சில இடங்களில் சரணாகதியடைந்தன. பெரிய பிரிட்டிஷ் படையொன்றை ஜான்ஸி ராணிப்படைகள் திடீரென்று தாக்கின. பிரிட்டிஷ் படை அந்த எதிர் பாராத தாக்குதல் கண்டு திக்குமுக்காடியது. சண்டையிலே ஒப்பாரியேது? இராணிப் படைஞர் படபடவென்று அவர்களைச் சுட்டு வீழ்த்தினர். உயிருக்கு அஞ்சிய பிரிட்டிஷ் வீரர் தம் ஆயுதங்களைக் கீழே போட்டு இராணிப் படையிடம் பணிய நேர்ந்தது.

இந்திய மண்ணில் புகுந்த இரண்டொரு மாதத்திற்குள் மணிபுர ஸமஸ்தானத்தின் பாதிப்பாகம் தேசீயப் படைஞரின் கைக்குள் அடங்கிவிட்டது. உடனே இம்பால் பள்ளத்தாக்கைத் தாண்டி அதன் அருகேயுள்ள **விஷ்ணுபுரம்** என்னும் நகரை அப்படைஞர் நோக்கினர். அந்நகரம் பிடிபட்டு விட்டால் தாராளமாக முன்னேறி வங்காள மாகாணத்தை அடைந்துவிடலாம். அத்தகைய ஆபத்தான நிலைமை கண்டு ஆங்கிலேயர் தொடை நடுக்கம் கொண்டனர். உடனே அமெரிக்கப் படைகளும் பிரிட்டிஷ் படைகளும் அப்போர் முனையில் வந்து குவியத் தொடங்கின.

அச்சமயத்திலே தூரக்கிழக்கில் வெகு விரைவாக அமெரிக்கர் முன்னேறி ஜப்பானியரின் வசமான தீவுகளை ஒன்றன் பின் ஒன்றாக மீட்டு வந்தனர். அதனால், ஜப்பானியரின் நிலைமை பேராபத்துக்கு இடமாயிற்று. ஆகவே, இந்தியப் போர்முனைக்கு வேண்டிய தளவாடங்கள், உணவுப் பொருள்கள், விமானங்கள் இவற்றை ஜப்பானியர்

அனுப்ப முடியவில்லை. மேலும், தேசீயப் படைஞருக்குத் துணையாய் வந்த ஜப்பானியத் தளபதியும் தம் துருப்புகளுடன் பிறர் அறியா வண்ணம் பின் வாங்கத் தலைப்பட்டார்.

இந்த இக்கட்டான நிலைமையில் அப்போர் முனையிலே பெருமழை பொழியத் தலைப்பட்டது. எங்கும் ஒரே வெள்ளக்காடு. தேசீயப் படைஞர் அம்மழையில் நனைந்துகொண்டே போர் புரிய வேண்டும். மாற்று உடைகள் இல்லை. உணவுப் பொருள்கள் தட்டிவிட்டன. ஓரிடமிருந்து மற்றோரிடம் செல்லலாம் என்றால், மோட்டார் லாரிகள் இல்லை. பகை விமானங்கள் பரிபவம் இழைத்து வருகின்றன. முழங்கால் அளவுள்ள சேற்றில் நின்று அப்படைஞர் போர் புரிதல் வேண்டும்.

உள்ள நிலைமை அனைத்தையும் சுபாஷ் பாபு அறிய வந்தார். வீணே தம் வீரரைப் பலி கொடுக்க அவர் விரும்ப வில்லை. ஆதலின், பின் வாங்கும் வண்ணம் தம் வீரருக்கு விதியின்றி வேண்டுகோள் விடுத்தார்; அதில், "முதல் ஆட்டத்திலே நாம் தோல்வி கொண்டுவிட்டாலும் பின்னால் வெற்றி பெறுவோம். உங்களது வீரமும் தியாகமும் வீண் போகா. நமது இந்தியா தேசம் சீக்கிரம் சுதந்தரம் அடைந்தே தீரும்," என்று குறிப்பிட்டார்.

ஏறக்குறைய ஒன்றரை வருடகாலம் தேசீயச் சேனை தீரமுடன் போர் புரிந்து வந்தது. பின் வாங்கவேண்டுமேயென்று கண்ணீர் வடித்துக் கொண்டே அவர்கள் பின்வாங்கினர். அப்போதும் எதிரியை அலறவைக்கவும் அலக்கழிக்கவும் அவர்கள் தவறவில்லை. இந்திய எல்லையிலிருந்து சிந்து

சிறிதாகப் பின் வாங்கி, நூற்றுக்கணக்கான மைல் தூரமுள்ள பர்மா வரையில் சண்டை செய்யத் தவறவில்லை. முடிவிலே அவர்கள் வகையின்றிப் பணிந்தார்கள்.

1945-ஆம் வருடம், ஆகஸ்டு மாதம், 14-ஆந் தேதி ஜப்பானே, அமெரிக்காவின் அணுக்குண்டுக்கு அஞ்சிச் சரணாகதி அடைந்துவிட்டது. அப்போது மலாய்த் தீவுகளிலும் தாய்லாந்திலும் தேசீயப் படைகளிருந்தன. அவையோ, சரணாகதியடையச் சம்மதிக்கவில்லை. விதியை மீறி எத்தனை நாள் தலை தூக்கி நிற்க முடியும். கடைசியில் அவையும் சரண் புகுந்தன. இந்தியத் தேசீய ராணுவத்தின் முதல் யுத்தம் அவ்வாறு முடிந்தது.

பர்மாத் தேசத்திலிருந்து சிங்கப்பூருக்குத் திரும்பிய சுபாஷ் பாபுவோ, ஜப்பானது சரணாகதி கண்டு தயங்கினாலும், மேற்கொண்டு சுதந்தரப் போரை நடத்துவதற்கான வழி துறைகளை ஆராயவே கருதினார். முப்பது இலட்சம் இந்தியரின் பக்கபலத்தை முன்னிட்டு மீண்டும் போரில் முனையலாம் என்பதே அவரது துணிபாம்.

## 29. தியாக வீரக்கனல்

“பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானினும் நனிசிறந்தனவே,” என்று சுப்பிரமணிய பாரதியார் பாடிப் போனார். தேசீயப் படையில் சேர்ந்த ஒவ்வொருவரும் அப்பாட்டை மெய்ப்பிக்கவே முனைந்தனர். அவர்களின் பான்மை கண்டதும் சுபாஷ் பாபு சித்தம் குளிர்ந்தார். சீரிய உரை பகர்ந்தார்; செம்மை நெறியே புகட்டினார்.

இந்தியப்போர் முனையிலே தம் படைஞர் போர் புரிகையில் சுபாஷ்பாபு உடனிருந்து உயரிய தலைவர் என்பதை உலகறியச் செய்தார். ஒரு முனையிலே முன்னணித் துருப்புகளை அவர் காணச் சென்றார். தலைக்கு மேலே நான்கு பக்கத்திலும் துப்பாக்கி ரவைகள் பறக்கின்றன. வான வீதியில் நின்று விமானங்கள் வெடி குண்டு வீசுகின்றன.

'அனர்த்தம் விளையும்! முன்னணித் துருப்புகளைக் காணச் செல்ல வேண்டா!' என்று பலரும் தடுத்தனர். "என் வீரர் இனிய வீரர், இணையிலா வீரர், பேரனர்த்தத்திற்கு ஆளாகி ஆவியை வழங்க நிற்கையில் என் உயிர் எம்மாத்திரம்? என் வீரத் தோழருடன் இம்மண்ணில் எனது உடலம் புரண்டால் அதுவே இம்மாமிசக் கோசத்துக்கு மகிமை தரும்," என்று அவர் கூறினார்.

முனை முகத்தே ஓர் அரணில் பதுங்கியிருந்த வீரருக்கு அவசியமான தேயிலைப்பானம் தயாராய் இருந்தது. அதனை எடுத்துச் செல்லும் ஆள் வரத் தாமதமாயிற்று. அவ்வளவில் அவர் அப்பானத்தை எடுத்துச் சென்று அவ்வீரருக்கு அளித்து மகிழ்ந்தார். அப்போது அவரது தலைக்கு மேலாக மயிரிழை உயரத்தில் எதிரியின் துப்பாக்கியின் ரவைகள் பறந்து சென்றன.

அம் முனையிலே ஒரு பட்டாளத்தின் தலைவர் தில்லன் எனப்படுவார். அத் தலைவர் நம் சுபாஷுக்கு எழுதிய ஒரு கடிதம் இது: "அருந்தலைவரே, குறிக்கோளை அடையும் வரையில் ஓய்வு என்பதை நாங்கள் கருதோம். நமது தேசீயச் சேனையின் மதிப்பையும் சிறப்பையும் நிலை நாட்ட எங்களது ஆருயிரையும் வழங்குவோம். குடிக்கத் தண்ணீர்

கிடைத்தாலென்ன, கிடைக்காமல் போனால் என்ன? வாடும் வயிற்றினுக்கு உணவு கிடைத்தால் என்ன? கிடைக்காது போனால் என்ன? எங்களது போராற்றல் இம்மியும் குறைவுபடாது. சத்தியம் இது.''

பாலர் படையிலே தியாகப்படை என்பது ஒரு பிரிவு. அப்பிரிவைச் சேர்ந்த வீரக் குழந்தைகள் எத்தகையத் தியாகம் செய்தனர்! பிரிட்டிஷாரிடத்திலே டாங்கு என்னும் மோட்டார் வாகனம் உண்டு. அது வரும்பொழுது அனலையும் துப்பாக்கி ரவைகளையும் வாரி இறைத்துக்கொண்டு வரும். அதனை ராக்ஷஸ ஆயுதம் என்றே கூற வேண்டும். அதுகொண்டு தேசியப் படைஞரை அழிக்க எதிரிகள் முயன்றனர். அதனை மறித்து நிறுத்தி அழிப்பது எப்படி?

அந்த ராக்ஷஸ ஆயுதங்கள் புறப்படுகின்றன என்று புலப்பட்டதும் வீரக் குழந்தைகளில் இருவர் அல்லது மூவர் தமது முதுகிலே பலமான வெடி குண்டுகளைக் கட்டிக்கொண்டு வழியிலே படுத்துக் கிடப்பர். அவர்களைப் பிணமென்றே நினைக்க நேரும். வேகமாக ஓடி வரும் அந்த ஆயுத வண்டி படுத்திருக்கும் பையன்கள்மீது ஏறிச்செல்லும். பலமான வெடி குண்டுகள் உடனே வெடிக்கும். அது கண்டு அந்த ஆயுத வண்டியை நடத்துவோர் அறிவிழப்பர். ஆயுதமும் சத்தியற்றுப் போகும்.

மற்றொரு மகத்தான சம்பவம் கூறுவோம்: ஒரு நூறு பேர் தேசீயப் படைஞர் ஓர் அரணின் அருகே இருந்தனர். அந்நூற்றுவரை அப்புறப் படுத்தப் பகைவர்களால் இயலவில்லை. ஆனது பற்றி இயந்திரக் கை பீரங்கிகள் வெடி குண்டெறி

யும் வாகனங்கள் இவற்றை டஜன் கணக்கில் துணை கொண்டு பகைவர் புறப்பட்டு வந்தனர். அளவற்ற ஆயுதபலம் தாங்கிய அப்பகைவரை அந்நூற்றுவர் எதிர்த்து நின்றால், அத்தனை பேரும் மாண்டு மடிவர் என்பது திண்ணம்.

அந்நூற்றுவரின் தலைவன் அது அறிந்ததும், "நேதாஜிக்கு ஜே! புரட்சி நீடுழி வாழ்க! ஆஜாது ஹிந்துஸ்தான் ஓங்குக! டில்லியை நோக்குக!" என்று கோஷங்கள் கிளப்பினான். ஆவேசம் கொண்டவர்கள் போல நூற்றுவரும் துள்ளியெழுந்து துப்பாக்கியைத் தூக்கிக்காட்டி எதிரிகளின்மீது பாய்ந்து பறந்தனர்.

அந்த ஆவேச எழுச்சி கண்டதும் பகைவர் திகைத்துப் போயினர். உடனே கை கலந்த சண்டை நடந்தது. பகைவரின் தொகையோ, மூந்நூறு. அப்பகைவரில் நூறு பேரை மாய்த்த பின்பே நூற்றுவரில் நாற்பது பேர் மாண்டு வீழ்ந் தனர். கை கலந்த சண்டையையும் சேதத்தையும் கண்ட பகைவர், கருத்தழிந்து வந்த வழியை நோக்கினர்.

முனைமுகத்தின் நிலை கண்டு, "பின் வாங்குக," என்று சுபாஷ் பாபு அறிக்கையிட்ட காலத்தில், 'அந்தோ!' என்று அழுது அரற்றினோர் ஒரு புற மிருக்க, "முன் வைத்த காலைப் பின் வாங்குவதோ! டில்லி சேர்ந்த பின்பே திரும்ப வேண்டும். செங் கோட்டை மீது சுதந்தரக் கொடியை நாட்டிய பின்பே காலைப் பெயர்க்க வேண்டும்," என்று பேசியவர்களாய் அங்கேயே ஆவியை விடுத்துப் பிணமாய் விழுந்தோறும் பலர் ஆவர்.

# 30. நமன் ஒழிக!

வெற்றியும் தோல்வியும் வீரருக்கு ஒரு விளையாட்டேயாகும். இந்திய எல்லையிலிருந்து தம் படையினர் பின்வாங்க நேர்ந்தது குறித்துச் சுபாஷ் பாபுவுக்கு வருத்தம் அதிகமே. ஆயினும், அவரது மனம் ஒரு சிறிதும் தளரவில்லை. காலமும் இடமும் கருதிப் போர் புரிதலே அவர் கருத்து. வேண்டுமளவு யுத்தத்தளவாடங்கள் சேகரிக்கும் உபாயங்களில் அவர் மனம் குவிந்தது. இதற்குள்ளாக ஜப்பானியர் சரணுகதி ஆகிவிட்டனர்.

எனவே, கிழக்காசியாவில் தன்னந்தனியே நின்று அவர் போர் முறுக்குதல் வேண்டும். ஜெர்மனியும் ஜப்பானும் சரணுகதி ஆனது கண்டு தைரியம் கொண்டு முழுப் பலத்துடன் போர் புரிய பிரிட்டன் முயலா நிற்கும். அதற்கேற்ற போர் வலி கொள்ளவே தம் தோழருடன் ஆலோசிக்க அவர் சிங்கப்பூர் சேர்ந்தார். போர் வலி திரட்டி முனை முகத்தில் பாய நாட்கள் பல பிடிக்கும். இடைநடுவே என்ன செய்வது?

பர்மாவிலிருந்தும் இதர இடங்களிலிருந்தும் ஜப்பானியர் பின் வாங்குகிறுர்கள். வாங்குகையில் கையில் கிடைத்ததைச் சுருட்டிக்கொள்ள அவர்களில் சிலர் முயலக்கூடும். மேலும், முன்னேறி வரும் ஆங்கிலத் துருப்புகளும் அக்கிரமத்தில் இறங்கலாம். அப்போது ஆங்காங்குள்ள இந்தியரின் சொத்துச் சுதந்தரங்களுக்கு ஆபத்து நேரக்கூடும். ஆதலினுல், அங்கங்கேயிருக்கும் இந்தியருக்குப் பல வகையிலும் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று தம் தேசீயப் படைஞருக்குச் சுபாஷ் பாபு அறிக்கை யிட்டார்.

ஒரு சேனை பின் வாங்க மற்றொரு சேனை முன்னேறுகையில் எவ்வளவோ குழப்பங்களும் இடையூறுகளும் நேரக்கூடும். ஜன சமூகத்திலே கயவர்களாய் உள்ளோர் அதுவே சமயமெனக் கொண்டு கொலையும் கொள்ளையும் நடத்த எண்ணு வர். அவ்வாறு நேரா வண்ணம் ஆங்காங்கே இருந்த இந்திய மக்களைப் பாதுகாத்த பெருமை தேசீயப் படைஞருக்கே உரியதாம். சுபாஷின் பெருந்தன்மை கண்டு, அவரிடம் ஜப்பானிய வீரரும் பெருமதிப்புக் காட்டி வரவே இந்தியரிடம் சுமுகமாக நடந்து வரலாயினர்.

சுபாஷின் ஒப்பற்ற செல்வாக்கினுக்கு ஓர் உதாரணம் கூறுவோம்: சீனாவிலுள்ள **ஹாங்காங்** நகரின் இந்தியவர்த்தகரில் சிலருக்கு ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் மரண தண்டனை விதித்திருந் தனர். குற்றமோ, மிக அற்பமானது. அச்செய்தி சுபாஷ் பாபுவுக்கு எட்டியது. அவர் என்ன சொன் னார், யாது செய்தார் என்று அறியோம். ஆனாலும், சில நாட்களுக்குள் அவ்வர்த்தகரின் தண்டனை இரத்தாயிற்று. அவர்களின் உயிர் தப்பியது. இதற்கு அவரது செல்வாக்கே காரணம் என்று பேசாதார் இல்லை.

சிங்கப்பூர் நகரமே சுபாஷின் தலைமை ஸ்தலம். தேசீயச் சேனைக்கும் அதுவே தலைமை ஸ்தலமாம். அங்குள்ள ஒரு கோடீசுவரரின் மாளி கையே அத்தகைய ஸ்தலமாய் விளங்கிற்று. அம் மாளிகையில் சுபாஷுக்கு ஒரு ரேடியோ நிலையமும் ஜப்பானியருக்கு ஒரு ரேடியோ நிலையமும் இருந்தன.

1945-ஆம் வருடம், ஆகஸ்டு மாதம், 15-ஆந் தேதி இரவு அவர் தமது ரேடியோவில் பேச

எண்ணினர். ஜப்பானிய அதிகாரியோ, முணு முணுத்தார். அது கண்டதும் அவர் சினம் பூத்து நெற்றியில் ஏறிய புருவத்துடன் அவரைக் கடிந்து பேசினர். உடனே அந்த அதிகாரியின் அங்கங்கள் எல்லாம் நடுங்கின.

ரேடியோ நிலையத்தை அணுகியதும், "என்ன பேசப்போகிறீர்கள்? நான் முன்னதாக அறிய லாமோ?" என்று மற்றொரு ஜப்பானிய அதிகாரி சுபாஷை வினவினர். உடனே சுபாஷ் அந்த அதிகாரியை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, நேரே ரேடியோ சேர்ந்து, தாம் கருதிய வண்ணம் பேசி னர். மலாய்த் தீவு, தாய்லாந்து, ஜாவா, சுமத்திரா, போர்னியோ, பிலிப்பைன் தீவுகள், பர்மா இந்த இடங்களிலுள்ள நம்மவருக்கு அவர் ஆறுதலும் தேறுதலும் கூறினர். அதைரியம் வேண்டா என்று வற்புறுத்தினர். விரைவில் சுதந்தரப் போரை மும்மரமாக முறுக்க முயலுவேன்," என்று திட்டமாக அறிவித்தார்.

ஜப்பான் சரணுகதியடைந்த மறுதினம் அவர் ஒரு விமானத்தில் ஏறி டோக்கியோ என்னும் அதன் தலைநகருக்குப் புறப்பட்டார். எதற்காக அவர் அந்நகருக்குப் பிரயாணமானர்? ஜப்பானிய ருடன் மிக முக்கியமான விஷயத்தைக் குறித்து ஆலோசனை செய்யவும் அவர்களின் கருத்தை அறியவும் அதன் பின் தமது போக்கை வரை யறுத்துக்கொள்ளவுமே அவர் சென்றார் என்பது தெரிகிறது.

இரங்கூன் நகரம் விழுந்த உடனே ஜான்ஸி ராணிப்படையை அவர் கலைத்துவிட்டார். மாதரனை

வரையும் தத்தம் ஊருக்கு மிகவும் பத்திரமாய்க் கொண்டு சேர்க்க ஏற்பாடு செய்யத் தவறவில்லை.

"ஆகஸ்டு 16-ஆந் தேதி சிங்கப்பூரை விட்டு டோக்கியோ நகருக்குப் புறப்பட்டார். சுபாஷ் பாபு பகல் இரண்டு மணிக்கு விமான விபத்துக்கு ஆளாகிப் படுகாயம் அடைந்து, ஒரு ஜப்பானிய வைத்திய சாலையில் சிகித்சை பெற்றும் நள்ளிரவில் கண் மூடினார்," என்று ஜப்பானிய அறிக்கையொன்று கிளம்பிற்று. அது அறிந்ததும் கிழக்கு ஆசியாவிலுள்ள 30 இலட்சம் இந்தியரும் தந்தையை இழந்த தனயர் போல அலறினர். பாரத பூமியிலுள்ள 40 கோடி மக்களும் கண்ணீர் மல்கிக் கசிந்துருகினர்கள்.

இந்தியாவிலே காந்தி மகானும் பிற தலைவர்களும் சேர்ந்து, "வெள்ளையரே, வெளியேறுக!" என்று கூறி ஒரு பக்கம் போராடி வர, மற்றொரு பக்கத்திலே தன்னந்தனியராய் நின்று சுபாஷ் பாபு தனிச்சமர் செய்து வந்தமையால், 1947-ஆம் வருடம், ஆகஸ்டு மாதம், 15-ஆந் தேதி இந்தியா தேசம் சுதந்தரம் எய்த முடிந்தது.

சுபாஷின் மறைவு கேட்டதும் மகாத்துமா காந்தி பண்டித ஜவாஹர் உட்பட அனைவரும் ஆற்ருது அழுதனர். வீரச் சிகரம்—தியாகத் திலகம்—மறையுமானல், மண்டி அழாதார் இருப்பரோ! அப்போது அவருக்கு வயது 49 கூட ஆகவில்லை. நெடுநாள் வரையில் அவரது மரணச் செய்தியை ஒரு சாரார் நம்பவேயில்லை. அவர் உயிருடன் இருப்பதாகவே எண்ணியும் சொல்லியும் வந்தனர். இன்றும் அவர் உயிருடன் இருப்பதாகச் சொல்வோர் உளர். சொல்லி வருவோர் உளர்.

ஆம்; பெருவீர தியாக புருஷருக்குச் சாவு ஏது? பாரதப் புத்திரப் புத்திரிகளின் மனக்கோயிலிலே அவர் குடிகொண்டு துலங்குகிறார் அல்லவா? அவரது புகழுடம்பு மறையுமோ? இப்பாரத பூமி சுதந்தரத்துடன் வாழும் வரையில் அவரது புகழ் உடம்பு பெருமையுடன் விளங்கா நிற்கும்.

## 31. வீர தளபதிகள்

சுபாஷ்பாபு திரட்டிய இந்திய தேசீயச் சேனையில் ஒவ்வொருவரும் ஒப்பற்ற வீரரேயாவர். போர் முனையிலே பராக்கிரமத்துடன் போர் புரிந்தும் அவர்களில் சிலரை ஆங்கிலேயர் பிடித்துவிட்டனர். உடனே துரோகம் புரிந்ததாகச் சொல்லி அவர்களைத் தூக்கில் இட்டனர். சிலரை நீண்ட காலத் தண்டனைக்கு ஆளாக்கினர். சிலரை விசாரித்துத் தலை வாங்க வைத்திருந்தனர்.

அவர்களில் மூவரை முதன்மையாகக் கூற வேண்டும்: ஒருவர் மேஜர் ஜெனரல் **ஷா நவாஸ் கான்**, மற்றொருவர் **லெப்டினண்டு கர்னல் ஷேகால்**, இன்னொருவர் **லெப்டினெண்டு கர்னல் தில்லன்**. அம் மூவரும் சுபாஷின் வீர தளபதிகள். ஆங்கில அரசருக்கு விரோதமாகச் சண்டை செய்தனர் என்பது அவர்களின் மீது சுமத்தப்பட்ட ஒரு குற்றமாம். இது செய்தி நம் தலைவர்களுக்குத் தெரிய வந்தது. பரபரப்பு மிகுந்தது.

அம்மூவரையும் பறிகொடுக்க நம் தலைவர்கள் மனம் ஒப்பவில்லை. ஆதலின், பகிரங்கமாக விசாரணை நடத்த வேண்டும் என்று கிளர்ச்சி செய்தனர்.

அதற்காக ஒரு நிதியும் திரட்டினர். பிரிட்டிஷ் இந்தியச் சேனையில் சேவித்து நின்ற இந்திய வீரரில் பலரும் அந்நிதிக்குப் பணம் கொடுத்து உதவினர்.

அம்மூவரின் சார்பாக எதிர் வழக்காட இந்தியாவின் தலைசிறந்த வக்கீல்கள் முன் வந்தனர். பண்டித ஜவாஹர்லால் நேரு, காலம் சென்ற பாரிஸ்டர் புலாபாய் தேசாய், காலம் சென்ற சர். டேஜ்பகதூர் சாப்ரூ, டாக்டர் கைலாஸ நாதர் முதலியோரைக் குறிப்பிடலாம். அது பற்றிச் சுபாஷ் திரட்டிய தேசீயச் சேனையின் விவரங்கள் பலவும் இந்தியருக்குப் புலப்பட்டன.

சுருங்கச் சொன்னால், விசாரணை பிரமாதமாய் நடந்தது. அடிமையாய்க் கிடக்கும் இந்தியர் ஆயுதம் தாங்கிச் சுதந்தரப் போர் புரிதல் ஏற்கும். அதனைத் தப்பு என்று எவரும் கூறமுடியாது. அம் மூன்று தளபதிகளின் செயலையெண்ணி இந்தியா பெருமையடைய வேண்டும் என்று பொருள்படும் வண்ணம் புலாபாய் தேசாய் மகா அற்புதமாக வாதித்தார்.

அச்சமயத்தில் மூவரும் வீர வாசகமே போல வாக்கு மூலம் கொடுத்தனர். ஷா நவாஸ்கான் கொடுத்த வாக்கு மூலத்தின் சாரம் பின் வருமாறு: "தேசீயச் சேனையில் நான் சேர்ந்த உடனே எனது வாழ்க்கை, எனது வீடு வாசல், எனது குடும்பம், எனது சொத்துச் சுதந்தரம், எனது பரம்பரை ஆகிய அனைத்தையும் தேச சுதந்திரத்திற்காகப் பணயம் வைத்துவிட்டேன். நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் அரும்பெரும் குணங்கள் அனைத்தும் என் மனத்தைக் கொள்ளை கொண்டன. அவர்

மூலம் எனது தேசத்தின் உண்மை நிலையை நான் உணர்ந்து கொண்டேன்.

"அந்நியரின் கொடுங்கோன்மை, ஆயுதமின்றி இந்தியர் படும் அவஸ்தை முதலியவற்றையெல்லாம் எங்களுக்கு அவர் எடுத்துச் சொன்னார். தேசீயச் சேனையில் சேருமாறு என்னை அன்புடன் அழைத்தார். தன் மதிப்பும் தேசீய உணர்ச்சியும் இம்மியளவாவது உள்ள எந்த இந்தியனும் அச்சேனையில் சேர்ந்து சேவிப்பது சிறப்பாகும்.

"எனது தேச நலம் கருதி நான் போர் புரிந்தேன். தேசபத்தி ஒரு குற்றம் ஆமோ?"

அவ்விதமே மற்ற இருவரும் வாக்கு மூலம் கொடுத்தனர். "இந்த விசாரணை சட்ட விரோதம். சிங்கப்பூரிலே எங்களை ஜப்பானியரிடம் ஆடும் மாடும் போல ஒப்படைத்தீர்கள். அப்போது பிரிட்டிஷ் மன்னர் வந்து எங்களைக் காக்கவில்லையே? இந்நிலையில் நாங்கள் எவ்வாறு ராஜ விசுவாசம் காட்ட முடியும்? சுதந்தரக் கொடியின் கீழ்ச் சுதந்தர வீரர்களாகவே நாங்கள் போர் புரிந்தோம். யுத்தக் கைதிகளாகவே நாங்கள் சரணகதி அடைந்தோம். எனவே, எங்கள்மீது குற்றம் சாட்ட நியாயம் ஏது?" என்று கேப்டன் ஷேகால் முழக்கினர்.

முடிவிலே அவ்விசாரணையில் மூவருக்கும் தீவாந்தரத் தண்டனை கிட்டியது. தேசமோ, வீறிட்டது. அரசின் சேனா வீரரும் அஞ்சி அறிவிழந்தனர். பிரதம சேனாதிபதி தமது விசேஷ அதிகாரத்தைக் கையாண்டு அத்தண்டனையை மாற்றி மூவருக்கும் விடுதலை அளித்தார். மகாஜனங்கள் ஒருவாறு ஆறுதல் அடைந்தனர்.

எந்த அரசுக்கும் சேனையே உயிர் நிலை. சத்தியமே உயிர் நிலை. பழைய காலத்தில் தமது சேனையை நம்பியே ஆங்கில அரசும் ஆங்கிலேயரும் இத்தேசத்தில் நிலைத்திருக்க நேர்ந்தது. அச்சேனையோ, சுபாஷின் முயற்சியினாலும் அம்மூன்று தளபதிகளின் விசாரணையாலும் கலகலத்துப் போய்விட்டது. இனி இந்தியாவைக்கட்டி ஆள முடியாது என்பதை அந்த அரசு கண்டு கொண்டது. அவ்விதம் உயிர் நிலையைத் தாக்கி அழித்த சுபாஷின் முயற்சி, மேதை, முனைப்பு இவற்றை யாவரும் போற்றுவர் அன்றோ ?

"ஜெய் ஹிந்த்"

சுபம் !

Dr.TPM LIBRARY
853

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS

853
2:2501wM97
UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI
31J5
Univ. Grants Commission.
UNIVERSITY EXTENSION